கல்கி

KALKI ஜூலை 20, 1952

4 அணா

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 184-50 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 11
இதழ் 51

1952 ஜூலை 20

நந்தன
ஆடி 5

"எஜமானே! பொய்யை எழுதுகிறீர்களே!"	(தலையங்கம்)	...	3
இமர் நியமனம்!	(கார்ட்டூன்)	...	4
இவர்கள் தமிழர்களாம்!	...	...	5
ஐஸன்ஹோவரின் மின்னல் தாக்கு!	...	...	6
எண்ணம் பலிக்கவில்லை!	ரகு	...	6
யாருக்கு அடி?	...	...	7
பொன்னியின் செல்வன்	கல்கி	...	8
அட்டைப்பட விளக்கம்	...	...	15
பாரதி காட்டிய பாதை	எஸ். ரங்கசாமி	...	18
மூன்று ராஜகுமாரர்கள் (பாப்பா மலர்)	சீதா	...	23
பார்வதி பரிணயம்	இ. ரங்கராஜன்	...	27
வழி பிறந்தது!	ஜடாதரன்	...	33
படித்துப் பாருங்கள்!	...	...	36
பாதிரியின் பிரார்த்தனை	ஹென்ரி கார்னெட் ராட்கிளிப்—வாஞ்சி	...	39
அருவிக்கரை ஆசிரமம்	சுதர்சன்—ரா. வீ.	...	45
மராமத்திலாகாவுக்கு மற்றொரு எதிரி	ரா. கி.	...	55
உழைப்பால் உயர்ந்த ஏழை	பகீரதன்	...	59

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



விற்பனையாளர்கள் :

கமானி எஞ்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்
நெ. 2, ஜோன்ஸ் தெரு, ப்ராட்வே, மதராஸ்-1

ஸ்டாக்கிஸ்டுகள் : காமினேனி பார்மிங் கார்ப்பொரேஷன், விசாகப்பட்டணம் & குடிவாடா; S. பாமண்ண ஷெட்டி, மௌன்பேட்: சுந்தரம் சன்ஸ், 42, கிருஷ்ணராயர் குளத்தெரு, மதுரை; பார்மிங் மிஷனரி & ஸர்வீஸஸ், பெஸன்ட் ரோடு, பக்கிங்ஹாம்பேட் போஸ்ட், விஜயவாடா.

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (ஸௌத் இந்தியா) லிமிடெட்
கோயமுத்தூர் - கோழிக்கோடு - உதகமண்டலம் - திருவனந்தபுரம்

வெஸ்ட் பார்ம் மெகானிஸேஷன், 30, மகாத்மா காந்தி ரோடு, பெங்களூர் & மைசூர்
அருண் ஆட்டோமோபைல்ஸ், 103, அலெக்ஸான்ட்ரா ரோடு, செகந்திராபாத்

இந்தியாவின் விமானங்க்கு

அபிவிருத்தி திட்டங்களுக்கு



ஸ்ரீ அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

ஸ்ரீ சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

SISTAS-CHI-30A TAMIL

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 51

"எஜமானே! பொய்யை எழுதுகிறீர்களே!"

ஒரு நீதி மன்றத்தில் சாட்சி விசாரணை நடந்து கொண்டிருந்தது. குற்றவாளி கூண்டில் நின்று கொண்டிருந்தான். சாட்சியைப் போலீஸ் தரப்பு வக்கீல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். சாட்சி அக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். நீதிபதி அந்தப் பதில்களை எழுதிக் கொண்டிருந்தார்.

திடீரென்று குற்றவாளி அவனுடைய கூண்டிலிருந்து தாவிப் பாய்ந்து ஓடி வந்தான். நீதிபதி அமர்ந்திருந்த உயர்ந்த ஆசனத்தை நோக்கி ஓடினான். நீதி மன்றத்தில் ஒரே அல்லோல கல்லோலம். வக்கீல்களும், குமாஸ்தாக்களும் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். போலீஸ்காரர்கள் கைதியைப் பின்தொடர்ந்து ஓடி வந்து நீதிபதியின் மேஜையருகில் அவனைக் கைப்பற்றினார்கள். ஐந்தாறு பேராகப் பிடித்து அவனை இழுத்துக் கொண்டு போய் மறுபடியும் கைதிக் கூண்டில் நிறுத்தினார்கள். அவனுடைய கையில் விலங்கையும் பூட்டினார்கள்.

கைதி இப்போது சிறிதும் பரபரப்புக் காட்டாமல் அமைதியாக நின்றான்.

"எஜமானே! ஒரு வார்த்தை!" என்று கூவினான்.

பக்கத்தில் நின்ற போலீஸ்காரர்கள் அவனை மிரட்டி அதட்டினார்கள்.

நீதிபதி அவர்களைச் சும்மா இருக்கச் சொல்லி விட்டு, கைதியைப் பார்த்து, "அப்பனே! என்ன சொல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டார்.

"எஜமானே! நான் ஓடி வந்தது தங்களை ஏதோ செய்வதற்காக என்று இந்தப் போலீஸ்காரர்கள் நினைத்துக் கொண்டார்கள் போலிருக்கிறது. அப்படி ஒன்றும் இல்லை. இப்போது விசாரணை செய்த சாட்சி பொய்க்கு மேல் பொய்யாகச் சொல்லிக் கொண்டிருந்தான். சத்தியத்தை நிலைநாட்ட வேண்டிய நீதிபதியாகிய தாங்கள் தங்கள் கையிலுள்ள தங்கப் பேனாவால் அந்தப் பொய்களையெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறீர்களே என்று எனக்கு வருத்தமாயிருந்தது. தங்கள் மேஜை மேல் உள்ள பொய்கள் நிறைந்த அந்தக் காகிதத்தைக் கிழித்துப் போடலாம் என்றுதான் ஓடி வந்தேன். வேறு ஒன்றும் இல்லை!" என்றான்.

இதைக் கேட்டதும் கோர்ட்டில் ஒரே குதூகலமாகி விட்டது. நீதிபதி உள்பட வக்கீல்கள், போலீஸ்காரர்கள், சாட்சிகள் எல்லாருமே சிரித்தார்கள். வழக்கின் முடிவு என்ன ஆயிற்று என்பது இங்கே முக்கியமில்லை யாகையால் அதைவிட்டு விடுகிறோம்.

சென்னைச் சட்டசபையில் பலபட்டறை எதிர்க்கட்சி அங்கத்தினர் பேசும்போதெல்லாம், காங்கிரஸ் அங்கத்தினருக்கு அம்மாதிரி துடிப்பு ஏற்படுவது இயற்கைதான். "அடாடா! இவ்வளவு உண்மைக்கு மாறுபட்ட செய்திகளைச் சொல்லுகிறார்களே! இவ்வளவும் சட்டசபை தஸ்தவேஜிகளில் ஏறி அச்சாகப் போகின்றனவே!" என்ற பரபரப்பு உண்டாகும். ஓடிப் போய் எதிர்க் கட்சியினரின் வாயை மூடலாமா என்று கூடச் சிலருக்குத் தோன்றலாம். சபையின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டுக் காங்கிரஸ் அங்கத்தினர் பொறுமையாயிருப்பது பெரிய காரியந்தான்.

உண்மையில்லாத விஷயங்களையும் அரை குறை உண்மைகளையும் எதிர்க் கட்சியினர் சொல்லி வெகு நேரத்துக்குப் பிறகு மந்திரிகள் அவற்றுக்கு மறுப்புக் கூற முற்படுகிறார்கள். அதற்குள் உண்மைக்கு மாறான விஷயங்கள் வெகு தூரம் பரவி வேண்டிய தீமைகளைச் செய்து விடுகின்றன.

உதாரணமாக, ராயலசீமைப் பஞ்சத்தை எடுத்துக் கொள்ளலாம்.

"ராயல சீமையில் ஓயாத பஞ்சம் குடிகொண்டிருக்கிறது. ஜனங்கள் பட்டினி கிடந்து செத்து மடிகிறார்கள்" என்ற பேச்சைச் சமீபத்தில் வெகுவாகக் கேட்டு வருகிறோம். அந்தப் பகுதியிலிருந்து வந்த எதிர்க் கட்சி அங்கத்தினரும் சரி, மற்றப் பகுதிகளிலிருந்து வந்தவர்களும் சரி, ராயலசீமைப் பஞ்சத்தைப் பற்றிய பல்லவியைப் பாடாமலிருப்பதில்லை. அத்துடன் நிற்காமல், "ராயலசீமைப் பஞ்சத்துக்கு மந்திரிகள்

தக்க நடவடிக்கை எடுக்கவில்லை!" என்ற புகாரை யும் சேர்த்துக் கூறி வருகிறார்கள். அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்கும்போது, ராயல சீமையில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினால் செத்து மடிந்து கொண்டிருப்பதாகவும், சளிரக்க மற்ற காங்கிரஸ் மந்திரிகள் அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலையில்லாமல் தூங்கிக் கொண் டிருப்பதாகவும் தோன்றும்.

நீர்ப்பாசன மராமத்து இலாகா மான்யம் பற் றிய விவாதம் சென்னைச் சட்டசபையில் நடந்த போதும் மேற்கூறியவை போன்ற புகார்களை எதிர்க் கட்சியார் வேண்டிய மட்டும் கூறினார்கள். மராமத்து இலாகா மந்திரி ஸ்ரீ என். ரங்கா ரெட்டி கடைசியாகப் பதில் கூறியபோதுதான் உண்மை தெளிவாயிற்று. எதிர்க் கட்சியார் திருப்பித் திருப்பிக் கூறிய புகார்கள் எவ்வளவு ஆதார மற்றவை என்பதும் வெளியாயிற்று.

"ராயல சீமையில் பஞ்சத்தில் ஏராள மான ஜனங்கள் மாண்டு விட்டதாகக் கூறுவது உண்மை அல்ல. இம்மாகாணத் தின் இதர பகுதிகளில் சராசரி 16·20 சத விகிதம் ஜனங்களின் மரண விகிதம் இருந்து வருகிறது. ராயல சீமையில் சராசரி மரண விகிதம் 15·68 சதவிகிதந் தான். இதர பகுதிகளை விட ராயல சீமை யில் மரணங்கள் குறைவாக இருந்து வரு கின்றன. அங்கு ஜனன விகிதமும் அதி கரித்திருக்கிறது. ஆகவே நிலைமையை மிகைப்படுத்திக் கூறக் கூடாது."

இவ்விதம் மந்திரி ஸ்ரீ என். ரங்கா ரெட்டி கூறினார். இவரும் ராயல சீமையிலிருந்து வந்த பிரதிநிதிதான். உண்மையில், இந்த ராஜாஜி மந் திரி சபையில் ராயல சீமைக்கு நல்ல பிரதிநிதித்து வம் கிடைத்திருக்கிறது. ராயல சீமைக்காரர்கள் நாலு பேர் மந்திரி சபையில் இருக்கிறார்கள். அவர்கள் ராயல சீமையை நன்கு கவனித்துக் கொள்ள மாட்டார்களா! அவர்களுக்கு வேறு வேலைதான் என்ன!

ராஜாஜி மந்திரி சபை ஏற்பட்ட சமயத்தில் ராயல சீமையில் பயங்கரமான பஞ்ச நிலைமை ஏற் பட்டிருந்தது உண்மையே. இதை முன்னிட்டே ராஜாஜி தம் மந்திரி சபையில் அப்பகுதியிலிருந்து நாலு மந்திரிகளைச் சேர்த்துக் கொண்டிருக்கக் கூடும். ராஜாஜி மந்திரி சபை பொறுப்பு ஏற்றதும் முதன்மையாகக் கவனித்தது மேற்படி பிரதேசத் தின் பஞ்ச நிலைமையைப் பற்றித்தான். பழைய பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழோ, அல்லது திறமை யற்ற நிர்வாகத்தின் கீழோ, அம்மாதிரி பஞ்சம் ஏற்பட்டிருந்தால் அநேகர் மரணமடையவும் நேர்ந்திருக்கலாம். (வங்காளப் பஞ்சந்தான் சரித் திரப் பிரசித்தமான உதாரணமாயிருக்கிறதே!) ராஜாஜி சர்க்காரின் நிர்வாகத்தில் ராயல சீமை யில் 'தனி ஒருவனுக்கு உணவில்லை; அதனால் இறந்தான்' என்ற நிலைமை ஏற்படாமல் பார்த் துக் கொண்டார்கள். கடவுள் அருளால் சிறிது காலத்திற்குப் பிறகு ராயல சீமையில் கொஞ்சம் மழை பெய்தது. மழை பெய்து விட்டதே என்று பஞ்ச நிவாரண வேலையை அடியோடு நிறுத்தி விடவில்லை. அவசியமான அளவுக்கு இப்போதும் பஞ்ச நிவாரண வேலை நடந்து வருகிறது.

இப்படியெல்லாம் நம் கண் முன்னால் சகலரும் அறிய நடந்து கொண்டிருக்கும் காரியத்தைப் பற்றியே எதிர்க் கட்சியார் உண்மையைத் திரித் துக் கூறுகிறார்கள்; மந்திரிகள் விழிப்புடன் இருந்து அவற்றை மறுக்க வேண்டி வருகிறது.

சட்டசபையிலேயே இப்படியெல்லாம் பேசுகிற வர்கள், வெளியிலே மக்களிடையே எவ்விதம்

திடீர் நியமனம்!



அமெரிக்கத் தலைமைப் பதவிக்கு ரிபப்ளிகன் கட்சியின் அபேட்சகராக ஐஸன் ஹோவர் திடீரென்று நியமனம் செய்யப்பட்டிருப்பது மிகுந்த வியப்பை அளித்திருக்கிறது.

பேசுவார்கள்! அதிலும் எழுத்து வாசனை அறியாதவர்களும் எதையும் நம்பக் கூடிய சாதுக்களுமான கிராமாந்தர மக்களிடையே எந்தமாதிரி யெல்லாம் தீய பொய்ப் பிரசாரம் செய்வார்கள்!

"ராயல சீமைப் பஞ்சத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் செத்து மடிந்தார்கள்; நாளைக்கு உங்களுக்கும் அதே கதிதான்!" என்று ராமநாதபுரம் ஜில்லா கிராமங்களில் போய்ச் சொன்னால், அதை யார் தடை செய்ய முடியும்?

இதனாலேயே, காங்கிரஸ் ஸ்தாபனங்களின் பிரசாரப் பகுதி பலமடைய வேண்டு மென்று அடிக்கடி நாம் வற்புறுத்தி வருகிறோம்.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி விழித்து எழுந்து ஒரு பெரிய பொதுக் கூட்டத்தையும் சென்ற வாரத்தில் நடத்தியது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

இத்தகைய கூட்டங்கள் அடிக்கடி நடைபெற வேண்டும். சென்னை நகரில் மட்டுமின்றி மாகாண மெங்கும் நடைபெற வேண்டும். மக்களுக்கு உண்மை எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

காங்கிரஸ் ஸ்தாபனங்களைத் தவிர காங்கிரஸ் எம். எல். ஏ. க்களும் தத்தம் தொகுதிகளில் பொது மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளுதல் அவசியம்.

இவர்கள் தமிழர்களாம்!

ஆந்திர சகோதரர்கள் தனி மாகாணமாகப் பிரிந்து போவதைத் தடுக்க விரும்புவோர் தமிழ் நாட்டில் யாரும் இல்லை.

தனி ஆந்திர மாகாணம் ஏற்படுவதை ஆட்சேபிக்கிறவர்கள் ராயல சீமையில்தான் இருக்கிறார்கள். "ஆந்திர மாகாணம் தனியாக ஏற்பட்டால் எங்கள் கதி அதோகதிதான்!" என்று ராயலசீமைப் பிரமுகர்கள் பலர் கதறுகிறார்கள்.

இந்தக் கதறலைப் பொருட்படுத்தாமல் ஆந்திரர்களுக்குத் தனி மாகாணம் அளிக்கப் பண்டித ஜவாஹர்லால் சித்தமாயிருக்கிறார்; மத்திய சர்க்காரும் ஆயத்தமா யிருக்கிறார்கள்.

பின், ஆந்திர மாகாணம் பிரிவதற்குத் தடையாக நிற்பது எது!

சென்னை நகரின்மீது ஆந்திரப் பிரமுகர்கள் சிலர் கொண்டாடும் பாத்தியதைதான்.

சென்னை நகரமின்றி ஆந்திர மாகாணத்தை ஒப்புக் கொள்ள ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி தயாராயிருக்கிறது.

ஆனால் ஸ்ரீ டி. பிரகாசமும் அவருடைய சீடர்களும் அதற்குத் தயாரா யில்லை,

சென்ற மாதத்தில்கூட ஸ்ரீ டி. பிரகாசம் கோஷ்டியார் சென்னை நகரில் கூட்டம் கூடி "மதராஸ் மனதே!" என்ற கோரிக்கையை வற்புறுத்தினார்கள். "சென்னை நகரம் சேராத ஆந்திர மாகாணத்தை ஒப்புக் கொள்ள முடியாது" என்றும் அறுத்துக் கூறினார்கள்.

ஆகவே, ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்குத் தடையா யிருப்பவர்கள் ஸ்ரீ டி. பிரகாசம் கோஷ்டியார்தான். தமிழ்நாட்டில் தமிழரசு ஏற்படுவதற்குக் குறுக்கே நிற்பவர்களும் ஸ்ரீ பிரகாசம் கோஷ்டியார்தான்.

சென்னை நகரில் ஆந்திரரின் பாத்தியதையை வற்புறுத்துவதற்காகவே ஸ்ரீ டி. பிரகாசம் காரு சென்னையின் மத்தியப் பகுதியான ஹார்பர் தொகுதியில் நின்றார். அத் தொகுதி வாக்காளர்களும் மேற்படி நோக்கத்தை நன்குணர்ந்து ஸ்ரீ பிரகாசம் டிபாஸிட் இழக்கும்படியான தோல்வியை அவருக்கு அளித்தார்கள்.

* * *

தமிழ் நாட்டில் சிலர் தமிழுக்காகவும் தமிழருக்காகவும் தமிழ் நாட்டின் உயர்வுக்காகவும் பிராணனையே தியாகம் செய்து விடுவோம் என்று சொல்லி வருகிறார்கள்.

இத்தகையவர்கள் பலர் காங்கிரஸுக்கு எதிராகச் சென்ற பொதுத் தேர்தலில் நின்று, "காங்கிரஸ் தமிழரின் நன்மைக்கு விரோதி" என்று பிரசாரம் செய்து, அப்போதிருந்த சூழ்நிலையில் ஓரளவு வெற்றியும் அடைந்தார்கள்.

இவர்களில் பலர் இன்றைக்கு ஸ்ரீ டி. பிரகாசத்தைத் தலைவராகக் கொண்ட ஐ. ஜ. மு. கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். அதன் மூலம் "மதராஸ் மனதே"! என்னும் ஆந்திரர் கோரிக்கைக்குப் பலம் தந்து வருகிறார்கள்.

வெளியில் ஸ்ரீ டி. பிரகாசத்தைத் தலைவராகக் கொண்டிருக்கும் இந்த வேஷதாரித் தமிழர்கள் சட்ட சபைக்குள்ளே ஸ்ரீ டி. பிரகாசத்தின் சீடரான ஸ்ரீ தென்னட்டி விசுவநாதம் அவர்களைத் தலைவராகக் கொண்டு பயபக்தி விசுவாசத்துடன் நடந்து வருகிறார்கள்!

ஸ்ரீ தென்னட்டி விசுவநாதத்தின் மனப்போக்கு எத்தகையது என்பது சென்னைச் சட்ட சபையில் நீர்ப்பாசன இலாகா சம்பந்தமாக நடந்த விவாதத்தின் போது நன்கு வெளியாயிற்று.

ஐ. ஜ. மு. கட்சியின் இந்த மாபெருந் தலைவர் "கீழ்ப் பவானி அணைக்கட்டுத் திட்டத்துக்கு ஒன்பது கோடி ரூபாய் செலவழித்து விட்டீர்களே! அந்தத் திட்டம் இந்த வருஷம் நிறைவேறி விடுமே!" என்று பொங்கினார்.

துங்கபத்திரா அணைக்கட்டுக்குப் பதினெட்டு கோடி ரூபாய் செலவிட்டிருப்பது இவர் கண்ணுக்கும் தெரியவில்லை; காதுக்கும் எட்டவில்லை; அறிவிலும் ஒட்டவில்லை.

ஒரு பக்கம் பெரிய மிராசுதாரர்களுக்கு நிலவரி ஸர்சார்ஜ் விதிப்பதை எதிர்த்துக் கூ கூ என்று கத்தும் இந்தத் தென்னட்டி விசுவநாதம், "மேட்டூர் அணைக்கட்டினால் பலன் அடைந்த விவசாயிகளிடம் ஏன் ஏக்கருக்கு ஐந்து ரூபாய் மட்டும் வசூலிக்கிறீர்கள்! ஏன் ஏக்கருக்குப் பதினைந்து ரூபாய் வசூலிக்கக்கூடாது!" என்று கேட்டார்.

மேட்டூர் திட்டத்தினால் பலனடையும் விவசாயிகள் தமிழர்களாதலால், அவர்களுக்கு எவ்வளவு வேணுமானாலும் வரி போடலாம் என்பது இவருடைய சித்தாந்தம். நிலவரி ஸர்சார்ஜ் ஆந்திரர்களையும் பாதிக்குமாதலால் அதுகூடாது என்று இவர் கூக்குரலிடுகிறார்.

இப்படிப்பட்டவரைத் தங்கள் சட்டசபைக் கட்சியின் தலைவராகக் கொண்டு, கைகட்டி வாய் புதைத்துக் கன்னத்திலும் போட்டுக் கொண்டு, ஒத்துக்கு மத்தளம் அடித்துக் கொண்டு வருகிறார்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐ. ஜ. மு. அங்கத்தினர்.

இவர்கள் தமிழர்களாம்! தமிழ் அபிமானிகளாம்! தமிழருக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் தினம் தினம் உயிரை விடுகிறவர்களாம்!......

இவ்வளவும் வெறும் புரட்டு என்பது வெளிப் படை! உயிரை விடுவதைப் பற்றிச் சொல் வானேன்! இவர்கள் தமிழுக்காகவோ தமிழரின் நன்மைக்காகவோ ஒரு துரும்பையும் தியாகம் செய்ய மாட்டார்கள்;—ஆனால் தங்கள் சொந்த நலத்துக்காக எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவார்கள் என்பது இப்போது சந்தேகத்துக்கு இடமின்றி வெளியாகி விட்டது.

எப்போது "மதராஸ் மனதே" ஆசாமிகளை உள்ளும் புறமும் தலைவர்களாகக் கொண்டிருக் கிறார்களோ, அதிலிருந்தே இவர்கள் சமயம் வரும் போது சென்னை நகரைத் தியாகம் செய்யத் தயா ராயிருப்பார்கள் என்பது உறுதியாகிறது!

அறிவாளிகளான தமிழ் மக்கள் இத்தகைய தன்னல வாதிகள் யார் யார் என்பதைக் கவ னித்து வைத்துக் கொள்வார்களாக.

ஐஸன்ஹோவரின் மின்னல் தாக்கு!

மா பெரும் அமெரிக்கத் தளபதி ஜெனரல் ஐஸன்ஹோவரின் மின்னல் தாக்கு மகத்தான வெற்றியைக் கொடுத்திருக்கிறது. சில வாரங் களுக்கு முன் வரையில் ஐரோப்பாவில் இருந்து வந்த ஐஸன்ஹோவர், மின்னல் வேகத்தில் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்தார். ஜனாதிபதி அபேட்சகர் தேர்தலில் தமக்குப் போட்டியாக நின்ற அரசியல் சூரப் புலிகள் பல மாதங்களாகச் செய்திருந்த பிரசாரங்களையும் முன்னேற்பாடுகளை யும் தமது மின்னல் தாக்குதலால் தவிடு பொடி யாக்கி வெற்றி பெற்று விட்டார்!

*   *   *

வெற்றியில் பல ரகங்கள் உண்டு என்பது சென்ற உலக யுத்தத்தின்போது வெளியாயிற்று.

அப்போது சில தளபதிகள் போர்முனையில் மகத் தான உயிர்ச் சேதம் ஏற்பட்டும்கூட, இறுதியில் ஒழுங்காகப் பின் வாங்குவதிலே வெற்றி பெற் றார்கள். மற்றும் சிலர் அதிக உயிர்ச் சேதம் ஏற்படாமல் போர் முனையிலிருந்து பின் வாங்கி ஓடுவதில் வெற்றி பெற்றார்கள்.

வேறு சில தளபதிகள் பல போர்முனைகளிலும் அடுக்கடுக்காகத் தோல்வி அடைந்தும்கூட, மேற் படி தோல்விகளுக்குப் பரிசாக உயர் பதவிகளை எட்டிப் பிடிப்பதில் வெற்றி பெற்றார்கள்!

ஆனால் அமெரிக்கத் தளபதி ஜெனரல் ஐஸன் ஹோவர் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் அடைந்த மாபெரும் வெற்றிகள் அத்தகைய ரகம் எதையும் சேர்ந்தவை அல்ல.

தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை இம் மூன்று பிரிவுகளும் தனித் தனியாக நின்று போர் புரியக் கூடாது; ஒன்றுக் கொன்று உதவியாக ஏகோபித்து யுத்தம் செய்ய வேண்டும் என்ற நியதியை முதன் முதலாக அமுலுக்குக் கொண்டு வருவதில் வெற்றி பெற்றவர் ஜெனரல் ஐஸன் ஹோவர்தான்.—இது அவரது வாழ்க்கையில் யாவரும் பாராட்டத் தகுந்த முதல் வெற்றி!

உலகப்பிரசித்தி பெற்ற ஜெர்மன் தளபதி மார் ஷல் ரோம்மெல் தலைமையில் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்த ஜெர்மன் படைகளை வட ஆப்பி ரிக்காவில் முறியடித்துத் தோல்வியுறச் செய்தது ஐஸன்ஹோவரின் இரண்டாவது வெற்றியாகும்.

எண்ணம் பலிக்கவில்லை!



" ஐக்கிய ஜனநாயக முன்னணி நிதி நிலைமையில் குழப்பம் விளைவிக்க முயல்கிறது. அதற்கு நான் சிறிதும் இடங் கொடுக்க மாட்டேன்." — சட்டசபையில் ராஜாஜி.

யாருக்கு அடி ?



வட கொரியாவில் அமெரிக்கா சமீபத்தில் நடத்திய விமானத் தாக்குதலினால் உலகமெங்கும் வேதனை ஏற்பட்டிருக்கிறது.

1943-ம் ஆண்டில் ஜெனரல் ஐஸன்ஹோவரின் தலைமையில் சென்ற துருப்புகளே இத்தாலியை முறியடித்து நேச நாடுகளிடம் சரண் அடையும் படி செய்தன.—இது ஐஸன்ஹோவரின் மூன்றாவது மாபெரும் வெற்றி ஆகும் !

1944-ல் ஜெனரல் ஐஸன்ஹோவரின் தலைமையில் சென்ற படைகளே ஜெர்மனியை இறுதியாக முறியடித்து வெற்றி பெற்றன. அவரது வாழ்க்கையில் இதை நாலாவது மாபெரும் வெற்றியாகக் கூற வேண்டும்.

இந்த வெற்றியில் ஜெனரல் ஐஸன்ஹோவருக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியும் அடங்கியிருக்கிறது. அதாவது பதினேழும் நூற்றாண்டில் ஜெனரல் ஐஸன்ஹோவரின் மூதாதையர்கள் மதப் போராட்டம் காரணமாக ஜெர்மனியிலிருந்து விரட்டப்பட்டார்கள். அப்போது அவர்கள் அடுத்துள்ள ஸ்விட்ஜர்லாந்து சென்று அடைக்கலம் புகுந்தனர். அவர்களின் சந்ததிகள் நூறு வருஷங்களுக்குப் பிறகு அமெரிக்காவுக்குக் குடியேறினார்கள். அவ்வாறாக, மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் தமது மூதாதையர்களை அவமதித்து விரட்டிய ஜெர்மனிமீது வஞ்சம் தீர்ப்பதிலும் ஐஸன்ஹோவர் வெற்றி பெற்று விட்டார்.

அவ்வாறு பல போர் அரங்கங்களிலும் வெற்றி மேல் வெற்றி பெற்ற ஜெனரல் ஐஸன்ஹோவருக்கு, இப்போது அரசியல் அரங்கத்திலும் மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு அமெரிக்கக் குடியரசுக் கட்சியினர் ஜெனரல் ஐஸன்ஹோவரைத் தங்களுடைய அபேட்சகராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மேற்படி தேர்தலில் போட்டியாக நின்றவர்கள் பெற்ற வோட்டுக்களைக் கவனிப்போர் ஐஸன்ஹோவருக்கு எவ்வளவு அபரிமிதமான ஆதரவும் செல்வாக்கும் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஜெனரல் ஐஸன்ஹோவர் பெற்ற வோட்டுகள் 845, செனேட்டர் டாப்ட் 280, எர்ல் வாரன் 77, ஜெனரல் மெக் ஆர்தர் 4.

ராஜதந்திரத்திலும் அரசியல் அனுபவத்திலும் பிரசாரத் திறமையிலும் ஜெனரல் ஐஸன்ஹோவருக்குச் சளைக்காத செனேட்டர் டாப்ட் தான் அபேட்சகர் தேர்தலில் வெற்றி பெறுவார் என்று பலரும் கூறினர். ஆனால் கடைசியில் டாப்ட் 280 வோட்டுகள் தான் பெற முடிந்தது. இராணுவத் துறையில் ஐஸன்ஹோவருக்குக் குருவாக விளங்கிய ஜெனரல் மெக்ஆர்தருக்குக் கூட நாலே வோட்டுகள்தான் கிடைத்தன.

புகழிலும் செல்வாக்கிலும் ஜெனரல் ஐஸன்ஹோவருக்குச் சமமானவர்கள் மற்றொரு கட்சியான ஜனநாயகக் கட்சியில் தற்போது இல்லை !

எனவே, தேர்தல் செப்பிடு வித்தைகள் எதுவும் நடக்காத வரையில், அடுத்த நவம்பர் மாதம் நடக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் ஐஸன்ஹோவரே வெற்றி பெறக்கூடும்.

இன்று செல்வத்திலும் ஆயுத பலத்திலும் அமெரிக்கா தான் அகில உலகத்துக்கும் தலைமை வகிக்கிறது. எனவே உலகத்தின் விதி ஓரளவு அமெரிக்க ஜனாதிபதி மேற்கொள்ளும் முறைகளையே பொறுத்திருக்கிறது எனலாம்.

உலக சமாதானத்துக்காகத் தாம் எதுவும் செய்யத் தயாராக இருப்பதாய்ச் சில தினங்களுக்கு முன் ஐஸன்ஹோவர் பிரகடனம் செய்தார். வாழ்க்கை முழுதும் வெற்றி மேல் வெற்றி பெற்றுள்ள அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் படுவாராயின், உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதிலும் வெற்றி பெறலாம் அல்லவா !

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 39

கஜேந்திர மோட்சம்

இத்தனை நேரமும் வானதி சிவிகையிலேயே இருந்தாள். சிவிகையை இப்போது இறக்கிப் பூமியில் வைத்தார்கள். வானதி பல்லக்கிலிருந்து வெளியே வந்து நின்றாள். நெருங்கி வந்த ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள். காளாமுகர்களும் அதே திசையைப் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார்கள். தண்ணீர் ததும்பிய கழனிகளில் தவளைகள் இட்ட சத்தமும் வாடைக் காற்றில் மரக் கிளைகள் அசைந்த சத்தமும் மட்டுமே கேட்டன.

ஓடித் தப்பிக்கலாம் என்ற எண்ணமே வானதிக்குத் தோன்றவில்லை. அது இயலாத காரியம் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. இந்தக் காளாமுகர்களிடமிருந்து ஏதேனும் யுக்தி செய்து தப்பினாலும் தப்பலாம். அன்பில் அநிருத்தரிடமிருந்து தப்புவது கனவிலும் நினைக்க முடியாத காரியம். அவருடைய அறிவாற்றலும் இராஜ தந்திரமும் சூழ்ச்சித் திறனும் உலகப் பிரசித்தமானது. அதோடு, சக்கரவர்த்தியிடம் அவர் மிகச் செல்வாக்கு உடையவர் என்பதும் உலகம் அறிந்தது. பழையாறையிலிருந்த அரண்மனைப் பெண்டிர் சோழ சாம்ராஜ்யத்தின் மற்ற அதிகாரிகளையும் சிற்றரசர்களையும் பற்றி வம்பு பேசுவார்கள். ஆனால் அநிருத்தரைப் பற்றி எதுவும் பேச மாட்டார்கள். அந்தப் புரத்தின் உள் அறைகளிலே மிக மிக அந்தரங்கமாகப் பேசினாலும் அவருடைய காதுக்கு எட்டிவிடும் என்று பயப்படுவார்கள். சக்கரவர்த்தி வேறு எதைப் பொறுத்தாலும் தம் அந்தரங்கப் பிரியத்துக்கும் மரியாதைக்கும் உரிய முதன் மந்திரியைப் பற்றி யாரும் அவதூறு பேசுவதைப் பொறுக்க மாட்டார் என்று அனைவரும் அறிந்திருந்தார்கள்.

இவையெல்லாம் வானதிக்கும் தெரிந்திருந்தன. இளவரசி குந்தவையும் அவரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்ததை அவள் அறிந்திருந்தாள். ஆகையால் அவரிடமிருந்து தனக்கு உதவியும் பாதுகாப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாள். இந்தக் காளாமுகர்கள் வேறு விதமாகச் சொன்னதும் அவளுடைய மனோதிடம் குலைந்தது. அவர் எதற்காக இந்த அநாதைப் பெண்ணைக் கைப்பற்றச் சொல்லியிருக்க வேண்டும்?......ஒருவேளை இவர்கள் பொய் சொல்லுகிறார்களோ, என்னமோ! வருவது ஒருவேளை பழுவேட்டரையர்களாக இருக்கலாம். அல்லது மதுராந்தகரும் அவருடைய பரிவாரங்களாகவும் இருக்கலாம்......யாராயிருந்தாலும், ஒன்று நிச்சயம். இளவரசரைப் பற்றித்

தனக்குத் தெரிந்த செய்தியை எவரிடமும் சொல்லக் கூடாது. அதனால் தனக்கு என்ன நேர்ந்தாலும் சரிதான்! தன் உயிரே போவதாயிருந்தாலும் சரிதான்!......இதைப் பற்றி எண்ணியதும் வானதி குலைந்த மனோதிடத்தை மீண்டும் பெற்றாள். வரட்டும், யாராயிருந்தாலும் வரட்டும். நான் கொடும்பாளூர் வேளிர் வீர பரம்பரையில் வந்தவள் என்பதை நிலை நாட்டுகிறேன். குந்தவைப் பிராட்டியின் அந்தரங்கத் தோழி என்பதையும் காட்டிக் கொடுக்கிறேன்.

ஊர்வலத்தில் ஒரு பல்லக்கு மட்டும் பிரிந்து முன்னால் வந்தது. மற்ற யானை, குதிரை பரிவாரங்கள் எல்லாம் சற்றுப் பின்னால் நின்றன.

முன்னால் வந்த பல்லக்கு வானதியின் அருகில் வந்ததும் பூமியில் இறக்கப்பட்டது. அதனுள்ளிருந்து முதன் மந்திரி அநிருத்தர் வெளியே வந்து நின்றார்.

அவர் சமிக்ஞை காட்டவே, சிவிகை சுமந்தவர்களும் காளாமுகர்களும் அப்பால் நகர்ந்து சென்றார்கள்.

அநிருத்தர் வானதியை மேலும்கீழும் உற்றுப் பார்த்து, "இது என்ன விந்தை! நான் காண்பது கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது கொடும்பாளூர் இளவரசிதானே! ஈழத்துப் போரில் வீர சொர்க்கம் எய்திய பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி வானதி தானே?" என்று கேட்டார்.

"ஆம், ஐயா! நான் காண்பதும் கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது சோழ சாம்ராஜ்ய மக்களின் பயபக்தி மரியாதைக்குரிய அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் தானே? சக்கரவர்த்தியின் அந்தரங்க அபிமானத்தைப் பெற்ற முதன் மந்திரியார் தானே?" என்றாள் வானதி.

"தாயே! நான் யார் என்பதை நீ அறிந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். இதனால், என்னுடைய வேலை எளிதாகும். உனக்கும் அதிக கஷ்டம் கொடுக்கவேண்டி ஏற்படாது!"

"ஆகா! அதைப்பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டாம். தங்களைப் போன்ற அமைச்சர் திலகத்தினால் எனக்குக் கஷ்டம் நேர்ந்தால் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். அதைக் கஷ்டமாகவே கருத மாட்டேன்."

"உன் வார்த்தைகள் மேலும் எனக்குத் திருப்தி அளிக்கின்றன. உன்னை அதிகமாகக் கஷ்டப்படுத்தும் உத்தேசமும் எனக்கு இல்லை. இரண்டொரு கேள்விகள் உன்னிடம் கேட்கப் போகிறேன். அவற்றுக்கு மறுமொழி சொல்லிவிட்டால் போதும். பிறகு..."

"ஐயா! நீங்கள் என்னைக் கேள்வி கேட்பதற்கு முன்னால் நான் கேட்பதற்குச் சில கேள்விகள் இருக்கின்றன..."

"கேள், அம்மா! தயக்கமில்லாமல் கேள். நான் உன் தந்தையை யொத்தவன். உன்னை என் மகளாகவே கருதுகிறேன். சில நாளைக்கு முன்பு உன் பெரிய தகப்பனார் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியை மாதோட்டத்தில் சந்தித்தேன். உன்னை என்னுடைய மகளைப் போல் பாவித்துக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார். அப்படியே வாக்களித்தேன்..."

"வந்தனம், என் தந்தையே! குழந்தைப் பிராயத்தில் தகப்பனை இழந்த எனக்குத் தந்தையாயிருப்பதாக முன்னொரு தடவை சக்கரவர்த்தி வாக்களித்தார்; இப்போது தாங்கள் ஒரு தந்தை தோன்றியிருக்கிறீர்கள். இனி எனக்கு என்ன குறை?"

"நீ என்னிடம் கேட்க விரும்பியதைச் சீக்கிரம் கேள், அம்மா! வானம் கருத்து இருள் சூழ்கிறது. மழை வரும் போலத் தோன்றுகிறது."

"தந்தையே! சாலையோடு பல்லக்கில் பிரயாணம் செய்து கொண்டிருந்த தங்கள் அருமை மகளை இந்தக் காளாமுகர்களை விட்டு வழி மறித்து இவ்விடம் பலவந்தமாகக் கொண்டு சேர்க்கும்படி செய்தது தாங்கள் தானா? இந்த அபலைப் பெண்ணின் கையைத் தீவர்த்திப் பிழம்பில் காட்டி எரிக்கும்படி சொன்னதும் தாங்கள் தானா? இந்தப் பயங்கரமான மனிதர்கள் அவ்வாறு தங்கள் மீது குற்றம் சாட்டினார்கள். நான் அதை நம்பவில்லை..."

"குழந்தாய்! இவர்கள் கூறியது உண்மையே. நான்தான் இவர்களுக்கு அவ்விதம் கட்டளையிட்டேன். அது குற்றமாயிருந்தால், அதற்குப் பொறுப்பாளி நானே..."

"மூன்று உலகமும் புகழ் பெற்ற சோழ நாட்டு முதன் மந்திரியே! தங்கள் பேச்சு எனக்கு வியப்பு அளிக்கிறது. 'குற்றமாயிருந்தால்' என்கிறீர்களே! தாங்கள் சகல தர்ம சாஸ்திரங்களையும்

நீதி சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர். சோழ சாம்ராஜ்யத்தின் சட்ட திட்டங்களையெல்லாம் நடத்தி வைக்கும் பொறுப்பு வாய்ந்தவர். நீதிக்கு மாறாகச் சக்கரவர்த்தியே காரியம் செய்தாலும் அதைக் கண்டித்து நியாயமாக நடக்கச் செய்யும் உரிமை வாய்ந்தவர். ஒரு காரியம் குற்றமா, இல்லையா என்பது தங்களுக்குத் தெரியாவிட்டால், வேறு யாருக்குத் தெரியும்? சாலையோடு பிரயாணம் செய்யும் அபலைப் பெண் ஒருத்தியைப் பலவந்தமாக வழிமறித்துத் தனி இடத்துக்குக் கொண்டு சேர்ப்பதும், அந்தப் பெண்ணைச் சித்திரவதை செய்வதாகப் பயமுறுத்துவதும் குற்றமா, இல்லையா என்று தங்களுக்குத் தெரியாமற் போனால் வேறு யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள்? சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இராஜ்யத்தில் வழிப் பிரயாணத்தில் எவ்வித பயமும் கிடையாது என்று கேள்விப்பட்டிருந்தேன். அதிலும், பெண்களைத் துன்புறுத்தும் துஷ்டர்களுக்குக் கடுந் தண்டனை உண்டு என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அது குற்றமா, இல்லையா என்றே தங்களுக்குச் சந்தேகம் தோன்றியிருப்பது மிக வியப்பான காரியம் அல்லவா?"

முதன் மந்திரி அநிருத்தர் திணறிப் போனார். இடையில் குறுக்கிட்டுப் பேச அவர் இரண்டு தடவை முயன்றும் பயன்படவில்லை. இப்போது அவர் குரலைக் கடுமைப் படுத்திக் கொண்டு, "பெண்ணே! கொஞ்சம் பொறு! உன் பேச்சுத் திறமை முழுவதையும் காட்டி விடாதே! 'குற்றமா, இல்லையா?' என்று நான் சந்தேகப்படுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. அது நான் கேட்கும் கேள்விக்கு நீ சொல்லும் விடையைப் பொறுத்திருக்கிறது. முக்கியமான இராஜாங்க இரகசியம் ஒன்றை அறிந்த பெண் ஒருத்தி நாகைப்பட்டினம் சாலையில் போவதாக நான் கேள்விப்பட்டேன். அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்தும்படி என் மனிதர்களுக்குக் கட்டளையிட்டேன். அவர்கள் என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதாக எண்ணிக் கொண்டு செய்திருக்கிறார்கள். ஒரு வேளை அவர்கள் தவறு செய்திருக்கலாம். இராஜாங்க சதி வேலையில் ஈடுபட்ட பெண்ணுக்குப் பதிலாகக் குடந்தை சோதிடரிடம் சோதிடம் கேட்டுவிட்டுத் திரும்பிய உன்னைக் கைப்பற்றியிருக்கக் கூடும். மகளே! நீ சொல்! குடந்தையிலிருந்து பழையாறைக்குத் திரும்புவது தான் உன் நோக்கமா? சிவிகை தூக்கிகள் தவறாக உன்னை நாகைப்பட்டினம் சாலையில் கொண்டு போனார்களா? இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்த ஒருவனை அந்தரங்கமாகப் பார்க்கும் நோக்கத்துடன் நீ நாகைப்பட்டினத்துக்குப் புறப்படவில்லையே?...... இல்லை யென்று நீ சொல்லி நிரூபித்தாயானால், இவர்கள் செய்தது குற்றமாகும். அதில் எனக்கும் பங்கு உண்டுதான்! என்ன சொல்கிறாய், பெண்ணே? இன்னும் தெளிவாகவே கேட்டு விடுகிறேன். இளவரசன் அருள்மொழி வர்மனை இரகசியமாகச் சந்திப்பதற்காக நீ நாகைப்பட்டினத்துக்குப் புறப்படவில்லையே?......"

இளவரசி இப்போது கதிகலங்கிப் போனாள். முதன் மந்திரி அநிருத்தரை எரித்து விடலாமா என்று அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்தது. ஆனால் ஆத்திரத்தை வெளியில் காட்டுவதில் பயனில்லை என்று உணர்ந்தாள். கள்ளங்கபடம் அறியாதிருந்த அந்தச் சாதுப் பெண்ணுக்கு அப்போது எங்கிருந்தோ ஆழ்ந்து சிந்திக்கும் சக்தியும் சூழ்ச்சித் திறனும் ஏற்பட்டிருந்தன. ஆகையால், முதன் மந்திரியின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், "ஐயா! இது என்ன வார்த்தை! இளவரசர் அருள்மொழி வர்மரையா இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்தார் என்று சொல்கிறீர்கள்? சக்கரவர்த்தியின் அருமைக் குமாரரைப் பற்றி நீர் இவ்விதம் பேசுவது குற்றம் அல்லவா? சோழ குலத்துக்கு எதிரான சதி அல்லவா? ஆகா! இதைப் பற்றி நான் உடனே குந்தவைப் பிராட்டியிடம் சொல்லியாக வேண்டும்!" என்றாள்.

"பேஷாகச் சொல், தாயே! என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லி விட்டால், பிறகு ஒரு கணங்கூட இங்கே தாமதிக்க வேண்டிய அவசியமில்லை. நானே உன்னை இளைய பிராட்டியிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்......"

"தங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லா விட்டால்?......"

"சொல்லாவிட்டால் என்பதே கிடையாது, தாயே! இந்தக் கிழவனிடமிருந்து அவ்வளவு சுலபமாக யாரும் தப்ப முடியாது. என் கேள்விக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும்" என்றார் அமைச்சர்.

"ஐயா! சர்வ வல்லமை படைத்த முதல் மந்திரி அநிருத்தப் பிரம்மராயரே! ஒரு சக்தியும் இல்லாத இந்த ஏழை அபலைப் பெண்ணிடமிருந்து தாங்கள் இளவரசரைப்பற்றி எதுவும் அறிய முடியாது. இந்த யமகிங்கரர்கள் சற்று முன் பயமுறுத்தியதுபோல் என் கையைத் தீயிலிட்டு எரித்த போதிலும் நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை."

"கொடும்பாளூர் வீர வேளிர் குலத்துதித்த கோமகளே! உன்னுடைய மன உறுதியைக் கண்டு மெச்சுகிறேன். ஆனால் இளவரசரைப் பற்றி ஒரு விவரமும் சொல்ல மாட்டேன் என்று நீ கூறினாயே, அது அவ்வளவு சரியன்று. ஏற்கெனவே, சில விவரங்கள் நீ சொல்லி விட்டாய். இன்னும் ஒரு விவரத்தையும் சொல்லிவிட்டால், அதிக நஷ்டம் ஒன்றும் நேர்ந்து விடாது. என் வேலையும் எளிதாய்ப் போய் விடும்......"

வானதி மறுபடியும் திடுக்குற்றாள். வாய் தவறி ஏதாவது சொல்லி விட்டோமோ என்று நினைத்தபோது அவளுடைய நெஞ்சை யாரோ இறுக்கிப் பிடிப்பது போலிருந்தது. உடம்பெல்லாம் பதறியது. இல்லை, நான் ஒன்றும் சொல்லி விடவில்லை. இந்தக் கிழவர் என்னை ஏமாற்றப் பார்க்கிறார் என்று எண்ணிச் சிறிது தைரியம் அடைந்தாள்.

"ஐயா! வேதம் சொல்லும் உம்முடைய வாயிலிருந்து பொய் வரலாமா? சுந்தர சோழரின் முதல் அமைச்சர் இல்லாததைக் கற்பித்துச் சொல்லலாமா? நான் இளவரசரைப் பற்றி எதுவும் கூற வில்லையே? நான் ஏதோ கூறியதாகச் சொல்கிறீரே?" என்றாள்.

"யோசித்துப் பார், தாயே! நன்றாக எண்ணிப் பார்! ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசாமலேயே அதைப் பற்றிய விவரத்தைத் தெரிவிக்க முடியாது என்று நீ கருதினால், அது பெரிய தவறு. நீ சொல்லாமற் சொன்ன விவரத்தைக் குறிப்பிடுகிறேன்: கேள்! இளவரசர் அருள்மொழி வர்மர் கடலில் மூழ்கி இறந்துவிட்டதாக உலகமெல்லாம் பேச்சாக யிருக்கிறது. குடி மக்கள், அதிகாரிகள் அனைவரும் சோகக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். உனக்கும் அந்தச் செய்தி தெரியும். அப்படி யிருக்கும் போது, நீ இளவரசரைப் பற்றி ஒரு விவரமும் சொல்ல மாட்டேன் என்று கூறினாய். அதிலிருந்து வெளியாவது என்ன? இளவரசர் இறக்கவில்லை யென்பது உனக்குத் தெரியும் என்று ஏற்படுகிறது. அவரைப் பார்ப்பதற்கு நீ நாகைப்பட்டினம் போகிறாய் என்று நான் சொன்னதையும் நீ மறுக்கவில்லை. 'இறந்துபோன இளவரசரை நான் எப்படிப் பார்க்க முடியும்?' என்று நீ திருப்பிக் கேட்கவில்லை. 'நாகைப்பட்டினம் போகவில்லை, வேறு இடத்துக்குப் போகிறேன்' என்றும் நீ சொல்லவில்லை. ஆகையால் நாகைப்பட்டினத்தில் இளவரசர் உயிரோடு இருக்கிறார் என்பதையும், அவரைப் பார்க்கப் போகிறாய் என்பதையும் ஒப்புக் கொண்டு விட்டாய்! மிச்சம் நீ சொல்லவேண்டிய விவரங்கள் இரண்டே இரண்டுதான்; நாகைப்பட்டினத்தில் இளவரசர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல வேண்டும்; அந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது என்றும் கூற வேண்டும். இந்த இரண்டு விவரங்களையும் நீ கூறிவிட்டால், அப்புறம் ஒரு கணங்கூட இங்கே தாமதித்து இந்தக் கிழவனோடு பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உனக்கு எங்கே போக விருப்பமோ அங்கே போகலாம்."

வானதியின் உள்ளம் இப்போது அடியோடு கலங்கிப் போய் விட்டது. முதன் மந்திரி கூறியது உண்மை என்றும், தன்னுடைய அறியாமையினால் இளவரசரைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் உணர்ந்தாள். தான் செய்து விட்ட குற்றத்துக்குப் பிராயச்சித்தம் உண்டா? கிடையவே கிடையாது! உயிரை விடுவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

"ஐயா! தாங்கள் என் பெரிய தந்தையின் ஆப்தநண்பர் என்று சொன்னீர்கள். என்னைத் தங்கள் மகள் என்றும் உரிமை கொண்டாடினீர்கள். தங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நான் நாகைப் பட்டினம் போகவும் விரும்பவில்லை; பழையாறைக்குப் போகவும் விரும்பவில்லை......"

"கொடும்பாளூருக்குப் போக விரும்புகிறாயாக்கும். அது நியாயந்தான். அங்கேயே உன்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்."

"இல்லை, ஐயா! கொடும்பாளூர்போகவும் நான் விரும்பவில்லை. இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக விரும்புகிறேன். தங்களுடைய ஆட்களிடம் சொல்லி அதோ தெரியும் பலி

பீடத்தில் என்னைப் பலி கொடுத்து விடச் சொல்லுங்கள்! நான் தயாராக இருக்கிறேன்!'' என்று சொன்னாள்.

"தாயே! உன்னுடைய விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றி வைப்பதாகச் சொன்னேன். ஆகையால் மறு உலகத்துக்குத்தான் நீ போகவேண்டும் என்றால், அங்கேயே அனுப்பி வைக்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் என்னுடைய கேள்விகளுக்கு விடை சொல்லியாக வேண்டும்.''

"ஐயா! என்னை வீணில் துன்புறுத்த வேண்டாம். நான் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லப் போவதில்லை. என்னைத் தங்கள் மகளாகக் கருதுவதாய்ச் சற்று முன் தாங்கள் சொன்னது உண்மையாயிருந்தால்...''

"மகளே! அதில் யாதொரு சந்தேகமுமில்லை. உன்னை நான் பெற்ற மகளாகவே கருதுகிறேன். உன் குடும்பத்தார் எனக்கு எவ்வளவு வேண்டியவர்கள் என்பது ஒரு வேளை உனக்குத் தெரிந்திராது! உன் பெரிய தந்தையும் நானும் நாற்பது ஆண்டுகளாகத் தோழர்கள். ஆனால் இராஜாங்க காரியங்களில் சிநேகம், உறவு என்றெல்லாம் பார்ப்பதற்கில்லை. பெற்ற தந்தை என்றும் பார்க்கமுடியாது; அருமைக் குமாரி என்றும் பார்க்க முடியாது. ஏன்? சக்கரவர்த்தியின் காரியத்தையே பார்! தமது சொந்தக் குமாரன் இராஜாங்கத்துக்கு விரோதமான சதி செய்த படியால், அவனைச் சிறைப் படுத்திக்கொண்டுவரும்படி கட்டளையிடவில்லையா?''

"ஐயா! பொன்னியின் செல்வரைப் பற்றியா இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள்? அவர் இராஜாங்கத்துக்கு விரோதமாக என்ன சதி செய்தார்?''

"ஓகோ! உனக்கு அது தெரியாது போலிருக்கிறது. இலங்கைக்குப் போர் செய்யப் போவதாகச் சொல்லி விட்டுப் பொன்னியின் செல்வர் போனார். அங்கே நமது வீரப் படைகள் இலங்கைப் படைகளை முறியடித்தன. அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு இளவரசர் அருள்மொழி வர்மர் இலங்கைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்ளப் பார்த்தார். இது இராஜாங்கத்துக்கு விரோதமான சதி அல்லவா? இதை அறிந்ததும் சக்கரவர்த்தி தமது திருக்குமாரரைச் சிறைப் படுத்திக் கொண்டு வருவதற்குக் கட்டளை அனுப்பினார். இளவரசர் அக் கட்டளையை மீறிக் கடலில் வேண்டுமென்று குதித்துத் தான் இறந்து விட்டதாகப் பொய்ச் செய்தியைப் பரப்பச் செய்தார். பிறகு, கரையேறி எங்கேயோ ஒளிந்து மறைந்திருக்கிறார். இந்த விவரங்கள் உனக்குத் தெரியாதபடியால் அவர் இருக்குமிடத்தை நீ சொல்ல மறுத்தாய் போலும். அப்படிப்பட்ட இராஜாங்க விரோதியை நீ மறைத்து வைக்க முயன்றால், அதுவும் பெரிய குற்றமாகும். ஆகையால், சொல்லிவிடு அம்மா!'' என்றார் முதன் மந்திரி.

வானதி இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் இப்போது பொங்கிப் பீறிக் கொண்டு வெளி வந்தது. பொன்னியின் செல்வரைக் குறித்து முதன் மந்திரி கூறிய தூஷ

களை எல்லாம் அவளால் பொறுக்க முடியவில்லை. அந்த சாதுப் பெண் வீராவேசமே உருவெடுத்தவள் போலாகிக் கூறினாள் :—

"ஐயா! தாங்கள் கூறியது ஒன்றும் உண்மையில்லை. இளவரசர் மீது வீண் அபாண்டம் கூறினீர்கள். இலங்கையில் நமது படைகள் சோர்வடைந்திருந்த காலத்தில் இளவரசர் அங்கே சென்றதினாலேயே உற்சாகங் கொண்டு போராடினார்கள். பொன்னியின் செல்வர்தான் இலங்கையில் நம் வெற்றிக்குக் காரணமானவர் என்பது உலகமறிந்த உண்மை. அவருடைய வீரத்தையும் மற்ற குணாதிசயங்களையும் பார்த்து இலங்கை மக்கள் அவர் மீது அன்பு கொண்டார்கள். போரில் புறமுதுகிட்டோடி ஒளிந்து கொண்ட தங்கள் அரசனுக்குப் பதிலாக இளவரசரைத் தங்கள் அரசனாக்கிக் கொள்ள விரும்பினார்கள். புத்த குருமார்கள் இலங்கைச் சிம்மாசனத்தைப் பொன்னியின் செல்வருக்கு அளித்தார்கள். பொன்னியின் செல்வர் சிம்மாசனம் தமக்கு வேண்டாம் என்று மறுதளித்தார். அத்தகைய நேர்மையானவரைக் குறித்துத் தாங்கள் இவ்வளவு அவதூறு சொல்லியிருக்கிறீர்கள். இளவரசர் தந்தையின் கட்டளை என்று அறிந்ததும் தானே சிறைப்பட்டு நேரே தஞ்சைக்குப் புறப்பட்டு வந்தார். அவர் கடலில் வேண்டு மென்று குதிக்கவில்லை. தம் அருமைச் சிநேகிதரின் உயிரைக் காப்பாற்று



பிரக்யாதிபெற்ற

ஆஸ்டிரிய தயாரிப்பு

(8, 10, 15 & 20 எச். பி.)



ஜேன்பாக்

டீசல் என்ஜின்கள்

★ கோல்ட் ஸ்டார்ட்

★ ஹரிசாண்டல்

★ போர் ஸ்ட்ரோக்

எண்ணைச் செலவில் சிக்கனம்

○

விவரங்களுக்கு

கமானி என்ஜினியரிங் கார்ப்பொரேஷன் லிட்.
கமானி சேம்பர்ஸ், பலார்டு எஸ்டேட், பம்பாய்

விற்பனையாளர்கள் :

கமானி என்ஜினியரிங் கார்ப்பொரேஷன் லிமிடெட்
சதர்ன் பிராஞ்ச்
நெ. 2, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்-1

ஸ்டாக்கிஸ்டுகள் :

காமினேனி பார்மிங் கார்ப்பொரேஷன்
விசாகப்பட்டணம் & குடிவாடா

என். பாபண்ண ஷெட்டி, ஹைஸ்பேட்

சுந்தரம் சன்ஸ்
67, மேற்கு ஸ்டேஷன் ரோடு
தல்லாகுளம் போஸ்டு, மதுரை

பார்மிங் மிஷினரி & ஸர்விஸஸ்
பெஸண்ட் ரோடு
பக்கிங்ஹாம்பேட் போஸ்ட், விஜயவாடா

வதற்காகவே குதித்தார். சக்கரவர்த்திக்கு விரோதமாக அவர் சதிசெய்யவும் இல்லை. இந்த அபாண்டங்களையெல்லாம் கேட்க என் செவிகள் என்ன துர்ப்பாக்கியம் செய்தனவோ தெரியவில்லை!...''

அநிருத்தர் இலேசாகச் சிரித்துக் கொண்டே "பெண்ணே! அருள்மொழி வர்மருக்காக நீ இவ்வளவு ஆத்திரமாகப் பரிந்து பேசுவதைக் கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? நீங்கள் இருவரும் காதலர்கள் என்று நினைப்பார்கள்!'' என்றார்.

"ஐயா! தாங்கள் இப்போது கூறியதில் மட்டும் பாதி உண்மை. நான் அவருக்கு என் உள்ளத்தைப் பறி கொடுத்திருப்பது மெய்தான். இதைத் தங்களிடமிருந்து நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால் அவர் இந்த அநாதைப் பெண்ணுக்குத் தன் உள்ளத்தில் இடம் கொடுத்திருப்பதற்கு நியாயம் இல்லை. வானத்தில் ஜொலிக்கும் சந்திரன் மீது அன்றில் பறவை காதல் கொள்ளலாம். ஆனால் சந்திரனுக்கு அன்றில் பறவை ஒன்று இருப்பதே தெரிந்திராது.''

"ஆஹா! என் அருமைச் சிநேகிதரின் மகள் இவ்வளவு சிறந்த கவிதா ரஸிகை என்பது இது வரை எனக்குத் தெரியாமற் போயிற்று. இளைய பிராட்டி குந்தவையின் அந்தரங்கத் தோழி அல்லவா நீ?'' என்றார் முதன் மந்திரி.

"போதும் போதும்! தங்கள் புகழ்ச்சியைக் கேட்க நான் விரும்பவில்லை. ஒன்று என்னை என் வழியே போவதற்கு விடுங்கள். இல்லாவிடில் உங்கள் ஆட்களை அழைத்துக் கட்டளை யிடுங்கள்.''

"பெண்ணே! கொஞ்சம் பொறு! பொன்னியின் செல்வரைப் பற்றி உனக்கு எவ்வளவோ விவரங்கள் தெரிந்திருக்கின்றன. ஆகையால் அவர் இப்போது இருக்குமிடமும் உனக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அதை மட்டும் சொல்லி விடு. உன்னை உடனே உன் பெரிய தந்தையிடம் அனுப்பி வைக்கிறேன். அவர் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார். இத்தனை நேரம் மதுரைக்கு வந்திருப்பார்...''

"ஐயா! தங்களைப் போன்ற வஞ்சகம் நிறைந்த மனிதருடன் சிநேகமாயிருப்பவர் என்னுடைய பெரிய தந்தை அல்ல. எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை.

"இளவரசரைப் பற்றி எல்லாரும் அறிந்திருப்பதையே நான் சொன்னேன். வேறு எதுவும் என்னிடமிருந்து தாங்கள் தெரிந்து கொள்ள முடியாது. வீண் தாமதம் செய்ய வேண்டாம்......"

"தாமதம் செய்யக் கூடாதுதான். பலமாக மழை வரும் போலிருக்கிறது..."

"மழை மட்டுந்தானா வரும்? தங்களைப் போன்றவர்கள் உள்ள இடத்தில் இடி, மின்னல், பிரளயம் எல்லாம் வரும்."

வானதியின் கூற்றை ஆமோதிப்பது போல் அச்சமயம் ஒரு நெடிய மின்னல் வானத்தின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் பாய்ந்தோடி ஜொலித்து விட்டு மறைந்தது. மின்னல் மறைந்து இருள் சூழ்ந்ததும் அண்டகடாகங்கள் அதிரும்படியான பேரிடி ஒன்று இடித்தது.

"பெண்ணே! இளவரசன் அருள்மொழி வர்மன் எங்கே இருக்கிறான் என்று சொல்ல மாட்டாயா?"

"சொல்ல மாட்டேன்."

"நான் ஊகித்தது ஊர்ஜிதமாகிறது. இளவரசன் மறைந்திருக்கும் இடத்துக்கு நீ ஏதோ இரகசியச் செய்தி கொண்டு போவதற்காகப் புறப்பட்டாய். இது உண்மையா, இல்லையா?"

"ஐயா! வீண் வேலை! தங்கள் கேள்வி எதற்கும் இனி நான் மறுமொழி சொல்ல முடியாது."

"அப்படியானால், இராஜாங்கத்துக்குத் துரோகமாகச் சதி செய்பவர்களுக்கு அளிக்க வேண்டிய கடுந் தண்டனையை உனக்கும் அளிக்க வேண்டியதுதான், வேறு வழி இல்லை."

"தண்டனையை ஏற்பதற்குக் காத்திருக்கிறேன், ஐயா! பலிபீடத்தில் என் தலையை வைக்க வேண்டும் என்றால், அப்படியே செய்கிறேன்."

"சேச்சே! நீ கொடும்பாளூர் வேளிர் மகள்! உனக்கு அவ்வளவு அற்பமான தண்டனை கொடுக்கலாமா? அதோ பார், அந்த யானையை!"

வானதி அவர் காட்டிய திசையைப் பார்த்தாள். கன்னங் கரிய குன்றினைப் போல் யானை ஒன்று நின்றுகொண்டிருந்தது.. கருங் கல்லினால் செய்து கரிய மை பூசப்பட்ட உருவத்தைப் போல் அது தோன்றியது. அதன் கருமையை நன்கு எடுத்துக் காட்டிக் கொண்டு இரண்டு வெள்ளைத் தந்தங்கள் நீண்டு வளைந்து திகழ்ந்தன.

"பெண்ணே! கஜேந்திர மோட்சம் என்று கேள்விப் பட்டிருக்கிறாய் அல்லவா? யானையின் அபயக் குரல் கேட்டுத் திருமால் ஓடி வந்து முதலையைக் கொன்று கஜேந்திரனை மோக்ஷத்திற்கு அனுப்பினார். அதற்குப் பதிலாக, இந்தக் கஜேந்திரன் எத்தனை எத்தனையோ பேரை அந்தத் திருமால் வாசம் செய்யும் மோட்ச உலகத்துக்கு அனுப்பியிருக்கிறது. நீ இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக வேண்டும் என்று சொன்னாய் அல்லவா? உன் விருப்பத்தை இந்த யானை கண் மூடித் திறக்கும் நேரத்தில் நிறைவேற்றி வைக்கும். அது தன் துதிக்கையினால் உன்னைச் சுழற்றி

அட்டைப்பட விளக்கம்

சேவித்த மாத்திரத்தில் வாழ்விக்கக் கூடியவன்தான் அந்தத் திருவரங்கத்துள் பள்ளி கொண்டிருக்கும் பெருமான். ஆனால் இந்தப் பேதைப் பெண்ணுடன் ஒருநாள் கோயில் பிரகாரத்திலிருக்கும் நந்தவனத்தில் அன்பு மொழிகள் பேசிச் சென்ற அவன், பின்னர் ஏன் அருள்புரியாமல் ஏமாற்றி வருகிறான்? இந்தக் குறையை அவள் யாரிடம் வாய்விட்டுக் கூறிக் கொள்ள முடியும்,— அந்த நந்தவனத்துக் குளத்தில் நீந்தித் திரியும் அன்னத்திடமன்றி?

சேவிக்க வாழ்விக்கும் எங்கோன் அரங்கன் திருக்கோயில்சூழ்
காவில் கலந்தாசை தந்தேகி னார்நெஞ்சு கல்நெஞ்சமோ?
வாவிப் புறத்தன்ன மேஇன்னம் ஏதேர் வரக்கண்டிலேன்
பாவிக்(கு) அநேகம் தனிக்காலம் இந்தப் பனிக்காலமே!

இந்த அழகிய இனிய தமிழ்ப்பாடலை ஓலையில் எழுதி அன்னத்திடம் கொடுத்து அனுப்பினால், ஒருவேளை அவனுடைய நெஞ்சம் கல்நெஞ்சமாயிருந்தபோதிலும் இளகி விடாதா என்று பார்க்கிறாள் பக்தி பரவசப்பட்ட இந்தப் பெண்! அன்னம் ஓலையை எடுத்துப் போகுமா? அரங்கனிடம் கொடுக்குமா?

மேற்படி பாடலை இயற்றிய பிள்ளைப் பெருமாள் ஐயங்காரைத்தான் கேட்க வேண்டும்.

எடுத்து வீசி எறிந்தால் நீ நேரே மோட்ச உலகத்திலேயே போய் விழுவாய்!"

இவ்விதம் கூறிவிட்டு முதன் மந்திரி அநிருத்தர் சிரித்தார். அந்தச் சிரிப்பு வானதிக்கு ரோமாஞ்சனத்தை உண்டாக்கிற்று. இந்த மந்திரி மனிதர் அல்ல, மனித உருக்கொண்ட அரக்கன் என்று எண்ணினாள்.

"கோமகளே! முடிவாகக் கேட்கிறேன். பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைச் சொல்கிறாயா? அல்லது இந்தக் கஜேந்திரனுடைய துதிக்கை வழியாக மோட்சத்துக்குப் போகிறாயா?" என்ற வார்த்தைகளைக் கேட்டதும், வானதி மீண்டும் மனோதிடம் பெற்றாள்.

"ஐயா! கஜேந்திரனை என்னிடம் வரச் சொல்கிறீர்களா? அல்லது நானே கஜேந்திரனிடம் போகட்டுமா?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

அநிருத்தர் கையினால் சமிக்ஞை செய்தார். அத்துடன் அவர் வானதிக்கு விளங்காத பாஷையில் ஏதோ சொன்னார். யானை பூமி அதிரும்படி நடந்து வந்தது. வானதியின் அருகில் வந்தது. தன்னுடைய நீண்ட துதிக்கையினால் வானதியின் மலரினும் மிருதுவான தேகத்தைச் சுற்றி வளைத்தது. அவளைப் பூமியிலிருந்து தூக்கியது.

அந்தச் சில கண நேரத்தில் வானதியின் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் அலை அலையாய்ப் பாய்ந்து மறைந்தன. தான் அச்சமயம் அவ்வளவு தைரியத்துடன் இருப்பதை நினைத்து அவளுக்கே வியப்பாயிருந்தது. இளைய பிராட்டி குந்தவை தேவி என்னைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் அடிக்கடி சொல்லுவாரே? அவர் இச்சமயம் இங்கிருந்து என்னுடைய தைரியத்தைப் பார்த்திருந்தால் எத்தனை ஆச்சரியப்படுவார்? அவருக்கு என்றாவது ஒரு நாள் இச் சம்பவத்தைப் பற்றித் தெரியாமலிராது. பொன்னியின் செல்வருக்காக நான் தீரத்துடன் உயிரை விட்டது பற்றி அறிந்து கொள்வார். அதை இளவரசரிடமும் சொல்லியே தீருவார். அப்போது இளவரசர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? அந்த ஓடக்காரப் பெண்ணைக் காட்டிலும் கொடும்பாளூர் வேளார் மகள் தைரியசாலி என்று அப்போதாவது அறிந்து கொள்வார் அல்லவா?

யானையின் துதிக்கை மெள்ள மெள்ள மேலே எழுந்தது. அத்துடன் வானதியும் மேலே ஏறினாள். ஆம், ஆம்! அந்தப் பிரம்மராட்சதர் கூறியது உண்மைதான். இந்தக் கஜேந்திரன் என்னை நேரே மோட்சத்துக்கே அனுப்பிவிடப் போகிறது! அடுத்த கணம் என்னை வீசி எறியப் போகிறது! எத்தனை தூரத்தில் போய்விழுவேனோ தெரியவில்லை. ஆனால் விழும்போது எனக்குப் பிரக்ஞை இராது. அதற்குள் உயிர் போய்விடும்!

வானதி இப்போது யானையின் மத்தகத்துக்கு மேலேயே போய்விட்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள். யானை தன் துதிக்கையைச் சுழற்றியது. வானதியை வீசி எறிவதற்குச் சித்தமாயிற்று. அந்தச் சமயத்தில் கடவுள் அருளால் வானதி தன் சுய நினைவை இழந்து விட்டாள். (தொடரும்)

மாணவர் கட்டுரைப் போட்டி

○●○

பரிசு பெற்றவர்கள்

○●○

எஸ். என். பழனிசாமி (முதல் பரிசு)
ஐந்தாவது பாரம் சி. பிரிவு
போர்டு உயர்தர பாடசாலை, உடுமலைப்பேட்டை

வி. சித்ரா (இரண்டாவது பரிசு)
ஆறாவது வகுப்பு
காந்தி பாடசாலை, விழுப்புரம்



பொடுகு அவ்வளவு அபாயகரமானதா ?

நியூ ஸ்டாண்டர்டு என்சைக்ளோபீடியாவில் குறிப்பிட்டபடி "பொடுகு என்பது மண்டை உறையின்மேல் வரும் தொற்றுநோயாகும். அதைக் குணப்படுத்துவது கடினம். அதனாலேயே தலையில் **வழுக்கை** ஏற்படுகிறது. ஆனால் அணுவராமல் தடுப்பதற்கு தொடர்ச்சியாக உபயோகிக்கவேண்டியது

Godrej ரிஜிஸ்டர்டு

கோத்ரெஜ் ஹேர் டானிக்

ஏனெனில் அதில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் குணமளிக்கிறதென்று நிரூபிக்கப்பட்ட **ஜி-11** (உலகப் பிரசித்திபெற்ற பாக்டிரிசைட்) அடங்கியிருக்கிறது.

தலை மண்டைக்கு முற்றிலும் தீங்கற்றது. குளிர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிப்பது உஷ்ணப் பிரதேசங்களுக்கு மிகச் சிறந்தது.

இந்தியாவில் கிடைக்கும் ஹேர் டானிக் இது ஒன்றே தான்

கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.

பாரதி காட்டிய

எஸ். ரங்கசாமி

பாரதியார் தம் கற்பனைத் திறத்தால் நம் பாரத நாட்டின் ஒருநிலையினைக் கண்டார். அந்நிலையினைத் தம் அழகு மிக்க சொற்களில் தீட்டினார். "அந்தகைய நிலையை அடைய முயற்சி செய்யுங்கள்" என்று நாட்டு மக்களுக்குச் சொல்லாமல் சொல்லிக் காட்டினார். அவர் காட்டிய அந் நிலையினைப் பார்ப்போம்:

ஆக்கத்திலே தொழிலூக்கத்திலே—புய
  வீக்கத்திலே உயர்நோக்கத்திலே,
காக்கத்திறல் கொண்ட மல்லர் தம்சேனைக்
  கடலினிலே உயர்நாடு—இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
  பாரத நாடு!

ஆக்கம், உழைப்பு, உயர் நோக்கம், தன்னைக் காத்துக் கொள்ளும் திறன் — இவைகளைக் கொண்ட நம் நாட்டின் நிலையை, உண்மையிலேயே நாம் அந் நிலையில் இல்லாத போது, பாட்டின் மூலம் எடுத்துக் காட்டினால் அதற்கு என்ன பொருள்? நாம் முயற்சி செய்து அந் நிலையினைப் பெற வேண்டும் என்பதே அதன் உட்கருத்து.

ஊக்கமும் உழைப்பும் கொண்ட நாடுதான் உயர்ந்த நாடு. அதில் சந்தேகமில்லை. இப்போது எல்லாத் துறையிலும்—தொழில் துறையிலாயினும் சரி, அல்லது வேறு எந்தத் துறையிலாயினும்—உலகிற்கே வழி காட்டியாக உள்ளது அமெரிக்கா. அதற்குக் காரணம் என்ன? அமெரிக்க மக்களின் தணியாத முன்னேற்ற தாகம். எந்தத் துறையில் நுழைந்தாலும் புதிது காண வேண்டும், அதனை உலகிற்குக் காட்டி உலகின் முன் உயர வேண்டும் என்ற ஆசை. அந்த ஆசையின் காரணமாக எழுந்த உழைப்பும் ஊக்கமும் அமெரிக்கா தேசத்தை இத்தகைய உயரிய நிலையில் கொண்டு சேர்த்துள்ளன.

"அமெரிக்க மக்கள் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, தங்கள் வேலைகளைச் செய்யப் போதிய நேரமில்லாமல் சிரமப் படுகிறார்கள்" என்று ஒரு புத்தகம் கூறுகிறது. அதனைப் படித்துவிட்டு நம் நாட்டில் பல லக்ஷம் மக்கள் உல்லாச வாழ்க்கையிலும், வெறும் பொழுது போக்கிலும் ஈடுபட்டிருக்கும் நிலையை நோக்கினால் வருத்தமாகத்தான் இருக்கிறது. அங்கு உழைப்பின் மேல் மோகம். இங்கு அதன் மேல் வெறுப்பு. அங்கு உழைப்பினை ஊக்குவிக்க, உயர்ந்த நிலையில் உள்ளவர்களின், முக்கியமாகக் கலை வல்லுனர்களின் பெருமுயற்சி, இங்கு உழைப்பைத் தாழ்விக்கவே கங்கணம் கட்டிக் கொண்டவர் போலக் கலைஞர்கள் செய்யும் கழுத்தறுப்பு.

இப்போதைய விஞ்ஞான உலகிலே அநேகமாக எல்லோருக்கும் தாமஸ் ஆல்வா எடிசனைப்பற்றித் தெரிந்திருக்கும். இப்போது நாம் பலவித மின்சார சாதனங்களைக் கொண்டு பயன் பெறுகின்றோமென்றால் அதற்கு எடிசன் சிறு வயதிலிருந்தே ஊக்கம் கொண்டு செய்த அரும் பெரும் ஆராய்ச்சிகள் தான் காரணம். அமெரிக்காவில் 'எடிசன் ஒரு சிறுவன்'; 'எடிசன் ஒரு ஆண்மகன்' (Edison, the boy;

பாதைக்

Edison, the man) என்னும் உழைப்பின் உயர்வைக் காட்டும் இரு படங்கள் எடுத்திருக்கின்றனர். அப்படங்களைக் காணும் வாய்ப்பு என்னைப் போன்ற சில மாணவர்களுக்கே கிடைத்தது. இந்தப் படங்களைத் திரையிட உள்நாட்டுத் 'தியேட்டர்' முதலாளிகள் முன்வருவதில்லை.

உதாரணமாக 'எடிசன் ஒரு சிறுவன்' என்ற படத்தில் உள்ள ஒரு காட்சியைப் பார்ப்போம். எடிசனும் அவன் தங்கையும் தெரு வழியாக வரும்போது, தந்தி யடிக்கும் நிலையம் ஒன்றைப் பார்த்து விடுகிறார்கள். அதன் அருகில் செல்கிறார்கள். அந்நிலையத்தில் உள்ளவர் வேறு பக்கம் திரும்பி யிருக்கும் சமயத்தில் எடிசன் தந்திக் கருவியிடம் சென்று ஏதோ சேஷ்டை செய்கிறான். அதனால் உடனே பெருங் குழப்பம் ஏற்படுகிறது. இதனைக் கண்ட தந்தி நிலையச் சொந்தக்காரர் இவனை அடித்துத் துரத்திவிடுகிறார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு நிலையக்காரர் குழந்தை யொன்று தனது பந்தை ரயில் பாதையின் நடுவே போட்டுவிட்டு அதனை எடுக்கப் பெரு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அப்போது ரயில் பாதையின் வழியாக ஒரு என்ஜின் வந்து கொண்டிருக்கிறது; குழந்தையை நெருங்கிக்கொண்டிருக்கிறது. இதைப் பார்த்து விடுகிறான் எடிசன். உடனே ஓடிச் சென்று, அக் குழந்தையின் மேல் விழுந்து, அதனை அழுக்கிக் கொண்டு தானும் படுத்து விடுகிறான். மேலே என்ஜின் சென்று விடுகிறது. குழந்தையும் எடிசனும் தப்பித்துக் கொள்கிறார்கள். இதனைக்கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஒருங்கே பெற்ற நிலையச் சொந்தக்காரர் எடிசனை மெச்சி அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறார். சிறுவன் எடிசன் என்ன கேட்கிறான் தெரியுமா? பணமல்ல. தின்பண்டமுமல்ல. வேறு என்ன? ஒரு கம்பிச் சுருள் கேட்கிறான். தன் ஆராய்ச்சிக்கு அது வேண்டுமென்று கேட்கிறான். இதனைக் கண்டு பிரமித்து விடுகிறோம் நாம்.

ஒரு சிறு பையன் உள்ளத்திலே இவ்வளவு ஊக்கமும் உழைப்பும் ஆராய்ச்சியில் ஆவலும் இருக்குமானால் அவனைப் பெற்ற நாடு இன்று இவ்வளவு

உயர்ந்த நிலையில் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இப் படத்தில் நாம் எடிசனின் பல்வேறு முயற்சிகளையும், ஆராய்ச்சிகளையும் காண்கிறோம். இடையிடையே தடங்கல்கள், தோல்விகள் ஏற்படத்தான் செய்கின்றன. இவைகளையெல்லாம் கண்டு மனம் தளராத எடிசன் முடிவிலே இப்போது உலகிற்கே பெரும் தேவையாக உள்ள பல்வேறு மின்சாரக் கருவிகளைக் கண்டு பிடித்துப் பெரும் புகழ் பெற்று விடுகிறான்.

விக்டர் இமானுவேல்

'எடிசன் ஒரு ஆண் மகன்' என்ற படத்தில் எடிசன் ஒரு நகர் முழுவதற்கும் மின்சார விளக்கு வசதி யளிக்கச் செய்யும் முயற்சியும், அதில் இடையில் ஏற்படும் தோல்விகளும், கடைசியில் அவன் அடையும் வெற்றியும் காட்டப் படுகிறது. ஊக்கமும் உழைப்பும் உள்வலியும் கொண்டவர்கள் என்றும் வெற்றியடைவர் என்பது திண்ணமாகத் தெரிகிறது.

தோல்விகளைக் கண்டு மனம் தளராது, தடங்கல்களை எதிர்த்துப் போராடித் தன் லட்சியத்தை அடைந்தவன் கரிபால்டி. அவனது லட்சியம் பிரிந்திருக்கும் தனது நாட்டை ஒன்று படுத்த வேண்டும் என்பதே. இதற்காக அயல்நாட்டார் ஆட்சியிலிருந்த இத்தாலி தேசத்தின் பல்வேறு பாகங்களையும் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று உறுதி கொண்டான். இந்த எண்ணம் இவனுக்கு இளமையிலிருந்தே உண்டு. முதன் முதலில் மாஜினி ஆரம்பித்த 'யௌவன இத்தாலி' (Young Italy) என்ற சங்கத்தில் சேர்ந்தான். மாஜினியுடன் சேர்ந்து கொண்டு படை திரட்டி ஜினோவாவை விடுதலை செய்யத் திட்டமிட்டான் 1834ல். ஆனால் ஆஸ்திரிய அரசாங்கம் விழித்துக் கொண்டு விட்டது. மாஜினி சிறைப் பட்டான். கரிபால்டி தப்பித்துக் கொண்டான்.

கரிபால்டி தப்பித்துச் சென்றது தென் அமெரிக்காவுக்கு. அங்கும் அவன் சுதந்திர தாகம் தணியவில்லை. அங்குள்ள இத்தாலியரை ஒன்று சேர்த்துப் படை ஒன்று திரட்டினான். தக்க தருணம் பார்த்திருந்தான். 1848ல் தன் படையுடன் இத்தாலி வந்து சேர்ந்தான். ஆனால் சுதந்திர இயக்கத்திற்கு ஓரளவு உதவி செய்து வந்த 'விக்டர் இமானுவேல்' (Victor Emanuel) என்ற சார்டினியா அரசன் இப்போது அவனை வரவேற்கவுமில்லை; துணை புரியவுமில்லை. அதனால் மனம் தளர்ந்தானா கரிபால்டி? இல்லவே இல்லை. லம்பார்டி நாட்டு விடுதலைப் புரட்சிக்கு உதவி புரிந்தான். ஆனால் சீக்கிரமே லம்பார்டி அரசன் ஆஸ்திரிய அரசாங்கத்துடன் சமாதானம் செய்து கொண்டான். கரிபால்டி திரிசங்கு சொர்க்கத்தில் விடப் பட்டான். ஆயினும் மனந் தளரவில்லை. மாஜினியுடன் சேர்ந்து கொண்டு அறப்போர் செய்தான். ரோமாபுரி பகைவரின் கையில் வீழ்ந்தது. மீண்டும் தப்பினான் கரிபால்டி. இம்முறை நியூயார்க் நகரத்துக்குச் சென்று அங்கு மெழுகு திரி செய்து விற்றுக் காலங் கடத்தினான். சிறிது பணம் சேர்ந்தது. வியாபாரக் கப்பல் நடத்தினான். லாபம் மிகுதியாகக் கிடைத்தது. கிடைத்த பணத்தைக் கொண்டு இத்தாலிக்கு அருகிலுள்ள காப்ரெரா (Caprera) என்ற தீவை விலைக்கு வாங்கினான். வாள் பிடித்த கை கலப்பை பிடித்தது. கைதான் கலப்பை பிடித்ததேயன்றிக் கவனம் முழுவதும் இத்தாலியின் விடுதலையில் பதிந்திருந்தது.

சீக்கிரமே தருணம் கிடைத்தது. இமானுவேலின் மந்திரி கவூர் என்பவனால் தூண்டப்பட்ட அம் மன்னன் இப்போது கரிபால்டியின் உதவியை நாடினான். கரிபால்டி மறுக்கவில்லை. ஒரு சிறந்த படையைத் திரட்டிக் கொண்டு, இமானுவேலின் உதவியையும் பெற்று, ஆஸ்திரியாவின் ஆட்சியில் சிக்குண்டு கிடந்த இடங்களை யெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக விடுவித்தான். எல்லாவற்றையும் சேர்த்து 'ஐக்கிய இத்தாலி' (United Italy) ஆக்கினான். அதன் மன்னனாக இமானுவேலை நியமித்தான். அவன் லட்சியம் முடிவில் கைகூடியது. லட்சியத்தை அடைய அவன் பட்ட துன்பங்களையும், அவனுடைய முயற்சியில் ஏற்பட்ட இடையூறுகளையும், அவைகளையெல்லாம் சமாளித்து வெற்றிகண்ட அம் மகா வீரனின் ஊக்கத்தையும், உழைப்பையும், உள் வலியையும் அவன் சரிதம் காட்டுகின்றது.



உன்னத இலட்சியமும் இலட்சியத்தில் வெற்றி காண வேண்டிய உழைப்பும் கொண்ட ஒருவரை நாம் நமது லட்சிய புருஷனாக

வைத்துக் கொள்ள வேண்டுமானால் அதற்கு தருந்தவர் மகாத்மா காந்தியே. அவர் பிறக்கும் போதே மகாத்மா காந்தியாகப் பிறக்கவில்லை. அவரது லட்சியம் மக்களுக்குள் இருக்கும் வேற்றுமை மனப் பான்மையைப் போக்க வேண்டும், அவர்களைச் சுதந்திர மக்களாக வாழச் செய்ய வேண்டும் என்பதே. இந்த லட்சியத்தை அடைவதற்கு அவர் பட்ட கஷ்டங்களையும் அவைகளை அவர் சமாளித்த விதத்தையும் பற்றி உலக மறியும். தென் ஆப்பிரிக்காவில் கல்லால் அடிபட்டார். தடியால் அடிபட்டார். இந்தியாவில் எத்தனையோ துன்பங்களுக்கு உள்ளானார். எவ்வளவு துன்பங்கள் வந்த போதிலும் அவைகளைப் பயமின்றி எதிர்த்து நின்ற தன்மையால் மகாத்மாவானார்.

இனி, சிறிது இலக்கியத் துறையில் பார்ப்போம். பழந் தமிழ் மக்களுக்குச் சோம்பேறி வாழ்க்கை என்றாலே கசந்து வந்தது. அங்கு மிங்கும் சென்று ஓடியாடி உழைத்தனர். பெரும்பொருள் ஈட்டினர். ஊக்கத்தோடு அவர்கள் புரிந்த வாணிபம் யாவரும் அறிந்ததே. இதனால் செல்வ வாழ்வு நடத்தினர்.

> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
> தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
> அரியவும் பெரியவும்

பெற்றுப் பழந் தமிழர் வாழ்ந்தனர் என்று பட்டினப் பாலையிலிருந்து தெரிகிறது. இத்தகைய செல்வவாழ்வு வாழ அவர்களிடம் எவ்வளவு ஊக்கமும், உழைப்பும் இருந்திருக்க வேண்டும்!

> ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவு இலா
> ஊக்கம் உடையான் உழை. [குறள்]

அதாவது "ஊக்கம் உடையாரிடத்துச் செல்வம் தானே வலிய வரும்" என்று வள்ளுவர் கூறுகிறார். உழைப்பில்லா வாழ்க்கையைத் தமிழ் மக்கள் வெறுத்து வந்தனர்.

> முடிப்ப முடித்துப் பின் பூசுவது பூசி
> உடுப்ப உடுத்துண்ப உண்ணு—இடுக்கிடுக்குக்
> கட்டுரை கூறில் செவிக் கொளா கண் விழியா
> நெட்டுயிர்ப் போடுற்ற பிணம்

என்று பலவாறாகச் சோம்பேறி வாழ்க்கை வாழ்ந்தவர்களை வெறுத்து இகழ்ந்தனர்.

நேரடியாகவே முயற்சியும் ஊக்கமும் உள்ள வாழ்க்கையை வற்புறுத்தினர்.

> ஆடுகோடாகி அதரிடை நின்றதும்
> காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
> வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்றன்
> தாழ்வின்றித் தன்னைச் செயின்

என்று நாலடியார் கூறுகிறது. "வழியிலே தானே வளர்ந்த இள மரமும் வளர்ந்து வயிரம் கொண்ட முதிர்ந்த மரமாகுமானால் யானைகளுக்கும் தறியாகும். அது போன்று ஒருவன் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்ளாமல் முயற்சி செய்வானாயின் வாழ்க்கையில் அம்முதிர்ந்த மரம் போன்ற நிலையை அடைவான்" என்பது பாடலின் கருத்து.

ஆனால் இப்போதைய நம் நாட்டினர் நிலையைப் பற்றிக் கூறத் தேவையில்லை. பாரதி காட்டிய உழைப்பும் உற்சாகமும், ஊக்கமும் கொண்ட பாதையிலே செல்ல வேண்டிய அவர்கள் மனம் குருட்டு அதிர்ஷ்டத்தை நம்பிப் போட்டிக் கூப்பன்களிலே செலுத்தப்படுகிறது.

இந்த நிலை நீங்கி, பாரதி கனவு கண்ட நிலையை நாம் அடைய வேண்டுமானால் அவர் காட்டிய பாதையின் பெருமையை நன்கு உணர வேண்டும்.

மிகக் குறைந்த விலைக்கு இன்றே வாங்குங்கள்

நெ. 1600 சைஸ் 13; நெ. 1501 சைஸ் 8½; நெ. 3101 சைஸ் 10½

ஒவ்வொரு கடிகாரமும் 3 வருஷம் உத்தரவாதமுள்ளவை.

நெ. 1500	க்ரோம் கேஸ் ஜுவல் பதித்தது	...	ரூ. 18-0
1501	க்ரோம் கேஸ் 5 ஜுவல்ஸ்	...	ரூ. 25-8
3101	வாடர்ப்ரூப், ஷாக்ப்ரூப், 15 ஜுவல்ஸ்	...	ரூ. 40-0
4105	டைம்பீஸ் (ஜெர்மனி)	...	ரூ. 17-0

தபால் செலவு ரூ. 1-8-0 பிரத்யேகம். சொற்ப கடிகாரங்களே கைவசமுள்ளதால் இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

குறிப்பு:—ஒழிந்த நேரத்தில் சுலபமாக அகில இந்திய ரேடியோ. 15, 17 ஜுவல் கடிகாரங்களை இலவசமாகப் பெற ஒரு புதிய முறையை ஏற்படுத்தியிருக்கிறோம். இதைப் பெற விரும்புவோர் உடனே புதிய முறை கேட்லாக்கிற்கு எழுதவும்.

EAST INDIA WATCH CO., POST BAG No. 16, CALCUTTA-1

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. "ரஜூலா"

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

சென்னையிலிருந்து { 5 ஆகஸ்டு 1952, 30 ஆகஸ்டு 1952, 24 செப்டம்பர் 1952

நாகப்பட்டினத்திலிருந்து { 6 ஆகஸ்டு 1952, 31 ஆகஸ்டு 1952, 25 செப்டம்பர் 1952

தேதிகளில் மேற்கண்ட கப்பல் புறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

பர்த் வசதியற்ற டிக்கெட்டுகள் சாப்பாட்டுடனோ அல்லது சாப்பாடு இன்றியோ வாங்கிக்கொள்ளலாம்

குடியேறுவோர் பாதுகாப்பு அதிகாரி (புரொடெக்டர் ஆப் எமிகிரென்ட்ஸ்) இடமிருந்து "ஆட்சேபனை இல்லை" என்ற அத்தாட்சி சர்ட்டிபிகேட் உடையவருக்குத்தான் குறிப்பிட்டு விரும்பும் பிரயாணத்திற்கு பர்த் வசதியற்ற டிக்கெட்டுகள் வழங்கப்படும்.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கீழ்த்திசையிலுள்ள இதர ஊர்களுக்குச் சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்

இதர விவரங்களுக்குத் தயவுசெய்து விண்ணப்பிக்கவும் :

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	மதுரா கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்கார தெரு, மதராஸ்	முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

கடுமையான ஜலதோஷமும்

விரைவில் விலகும்

இடையுறுது உள்ள சளியை நிறுத்த சிறிது கிபாக்கை உங்கள் மூக்கினுள் தடவிக் கொள்ளுங்கள். மார்பு, நெஞ்சு, முதுகு முதலிய பாகங்களில் இரவில் படுக்குமுன் நன்றாகத் தடவி தேய்த்துக்கொண்டால், ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே சுவாச அடைப்பு நீங்கி சுகமாக சுவாசிக்க இயலும்.

முற்றிலும் தீங்கற்றதும் ஆவிரூபமாக மாறக்கூடியதுமான கிபாக்கிலுள்ள எண்ணைச் சத்துக்கள் சுவாச மார்க்கத்தில் ஏற்படும் அடைப்பு முதலிய தடைகளை எளிதில் நிவர்த்திக்கும்.

கிபாக்

முகரவும் தேய்க்கவும் உகந்தது.

வெஸ்ட் மினஸ்டர் லாபரட்டரீஸ் லிமிடெட் லண்டன், தயாரிப்பு.

ஏஜெண்டுகள் : ஓரியண்டல் மெர்க்கன்டைல் ஏஜென்ஸி,

99-A., அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1.

SISTAS—WL—30-A TAMIL

மூன்று ராஜகுமாரர்கள்

4. கனவிலே வந்தவள்!

சூரிய குமாரன் ஒரு மாளிகை பார்த்தானே? அது என்ன தெரியுமா?

அதுதான் அவன் தேடிவந்த ஜீவரசம் இருக்கும் மாளிகை.

ஆனால் நம் சூரிய குமாரனுக்கு இந்த விஷயம் தெரியாது. பளிங்குக் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகை எந்த தேசத்து அரசனுடையதோ, என்னமோ என்று தான் நினைத்தான். ஆனாலும் நில வொளியில் மாளிகை, ஆகா! எவ்வளவு அற்புதமாகத் திகழ்ந்தது. 'கனவில்கூட இவ்வளவு அழகான மாளிகை நிர்மாணிக்க முடியாது போலிருக்கிறதே! இப்படிக் கனவுக்கும் கற்பனைக்கும் எட்டாத அழகு பொருந்திய மாளிகையில் வசிக்கும் பேறு எந்த அரசனுக்கு வாய்த்திருக்கிறதோ!'—

இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டே மலைச் சரிவில் இறங்கி மெள்ள நடந்தான்.

பொழுது விடியும் தருணத்தில் சூரிய குமாரன் அந்த மாளிகையின் வாயிலை அடைந்தான். வாயிலில் வாயில் காப்போர் யாரும் இருக்கவில்லை. அதனால் அவனைத் தடுப்பாரும் யாரும் இருக்கவில்லை—நேரே உள்ளே நுழைந்தான்.

மாளிகைக்குள் மனிதர்கள் வாசம் செய்வதாகவே தெரியவில்லை. ஒவ்வொரு அறையும் காலியாக இருந்தது. அம்மாளிகையில் நூற்றுக் கணக்கான அறைகளும் ஹால்களும் இருந்தன. ஒன்றிலாவது மனிதர்கள் வாசம் செய்வதற்கான அடையாளம் தட்டுப்பட வேண்டுமே—அதுதான் இல்லை. இலங்கையில் ராவணேசுவரனுடைய அரண்மனையில் சீதை எங்கிருக்கிறாள் என்று தேட வேண்டி ஹநுமான் ஒவ்வொரு அறையாக நுழைந்து பார்த்தானும். அதைப் போல் சூரிய குமாரனும் ஒவ்வொரு அறையாக நுழைந்து வந்தான். ஒரு அறையில் பல வகைப்பட்ட மிருதங்கங்கள் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு அறையில் யாழ், வீணை போன்ற வாத்தியங்கள் இருந்தன. சில அறைகளின் சுவர்களில் அருமையான சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மிருதங்க அறைக்குள் நுழையும் சூரிய குமாரன் தன் இஷ்டம்போல் மிருதங்கத்தைத் தட்டி வாசித்து விட்டு வருவான்.

வீணை அறையிலும் அப்படியே! சித்திர அறையில் சென்றவன், நேரம் போனதே தெரியாமல் சித்திரங்களையே பார்த்துக் கொண்டிருந்து விடுவான்.

இப்படி அன்றைய தினம் முழுதும் அந்த மாளிகையை ஆராய்வதிலேயே கழித்தான்.

கடைசியில் ஒரு அறையில் நுழைந்தான். அந்த அறையில் தான் தேவலோக கன்னிகைக்கு ஒப்பான அழகு பொருந்திய நங்கை ஒருத்தியின் சிற்ப மிருந்தது. அந்தச் சில

யைக் கண்டு சூரிய குமாரனும் அப்படியே சிலைபோல் நின்று விட்டான்!

சூரிய குமாரன் கனவில் கண்ட காரிகையே சிலையாக நின்றால் அவனுக்கு ஆச்சரியம் ஏற்படுவது இயற்கைதானே!

எந்த நங்கையை நேரில் பார்க்க வேண்டும் என்று ஆவலுடன் வந்தானோ அந்த நங்கை வெறும் உயிரற்ற சிலை என்பதை உணர்ந்த மாத்திரத்தில் அவனுக்கே ஒரே வெறுப்பாகப் போய் விட்டது!

'போயும், போயும் ஒரு சிலையைப் பார்ப்பதற்காக இத்தனை கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டு இவ்வளவு தூரம் வந்தோம்!

'இந்தக் கற்சிலையா எனது தந்தையின் தீராத நோயைத் தீர்க்கக்கூடிய ஜீவரசத்தை அளித்து விடப் போகிறது. என்ன முட்டாள்தனம் செய்துவிட்டேன்!

'இந்தக் கற்சிலையை நம்பி காட்டிலும் அரண்மனையிலும் சொல்லிக் கொள்ளாமல் கூட வந்தேனே!'

இப்படி யெல்லாம் நினைக்க நினைக்க அவனுக்குத் தன்பேரில் கோபம் வந்தது; தனது மடமையின் மீது கோபம் வந்தது. பிறகு அந்தக் கற்சிலையின்மீது கோபம் வந்தது. அந்தக் கோபத்தில் என்ன செய்வது என்பதை யறியாமல் தன் கையிலிருந்த மந்திரக் கோலை அதன்மீது வீசி எறிந்தான். அந்தச் சமயம் அவன் கைக்குக் கிடைத்தது அதுதான்.

மந்திரக்கோல் அந்தச் சிலையின்மீது பட்ட மாத்திரத்திலேயே, உயிர், சதையோடு கூடிய நிஜமான பெண்ணொருத்தியின் மீது அத்தகைய அடி பட்டிருந்தால் எப்படி 'வீல்' இட்டுக் கத்தி யிருப்பாளோ, அப்படி ஒவ்வொரு ரோமக் காலும் கூச்சிட்டு நிற்கும் வண்ணம், அந்தச் சிலை வீலிட்டது. அந்த அலறலைக் கேட்டுச் சூரிய குமாரன் அப்படியே திக்பிரமை பிடித்தவன் போல் நின்று விட்டான்.

"நன்றா யிருக்கிறது போங்கள், உங்களை நான் நேற்று அன்புடன் வரவேற்றதற்கு நல்ல பலன்" என்றது அந்தச் சிலை—சிலையா? சிலை ஏது அங்கே? கண் எதிரிலேயே எப்படியோ அந்தச் சிலை மினுமினுப்பும் தளதளப்பும் கொண்டு உயிருள்ள வனிதா ரத்தினமாகி விட்டாளே!

சூரிய குமாரன் ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம் உண்டாகிச் சொல்லிழந்து, செயலிழந்து, நினைப்பிழந்து இருந்தான்.

அந்த உயிரும் உணர்ச்சியும் பெற்ற சிலை-மங்கை, தான் இருந்த உயர்ந்த பீடத்தை விட்டு இறங்கி மெள்ளச் சூரிய குமாரன் அருகில் வந்தாள். அவன் கரத்தைப் பற்றினாள்.

சூரிய குமாரன் ஆடாமல் அசையாமல் இருந்தான்.

"என்ன ராஜகுமாரரே! இன்னும் என்னிடம் நம்பிக்கை யுண்டாக வில்லையா? நான் உயிர்பெற்றெழுந்து மனித உலகத்து மங்கையாகி விட்டேன் என்பதை உங்களால் நம்ப முடியவில்லை? நான் இறங்கி நடமாடத் தொடங்கிய பின்னும், என் குரலைக் கேட்ட பின்னும், என் ஸ்பரிசத்தை உணர்ந்த பின்னும் உங்களால் நம்ப முடியவில்லையா?"

"நம்ப முடியாத தெல்லாம் நடக்கும் பொழுது இதை எப்படி நம்பாமல் இருப்பது, ராஜகுமாரி?" என்றான்.

"ராஜகுமாரி என்பது என் பெயர் அல்ல. என் பெயர் சாந்த குமாரி, ராஜகுமாரா!" என்றாள் பொய்க் கோபக் குரலில்.

"என் பெயர் ராஜகுமாரன் அல்ல—சூரிய குமாரன், சாந்த குமாரி!" என்றான் அதே குரலில்.

இப்படி அவர்கள் சம்பாஷணை ஆரம்பமாயிற்று. பிறகு அவர்கள் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். சூரிய குமாரன், தன் தந்தை உடல் நலிவுற்றது, சகோதரர்கள் ஜீவரசம் தேடிக்கொண்டு புறப்பட்டது, அவள் கனவில் வந்தது, 'ஜீவரசம் தேடிக்கொண்டு புறப்பட்டோமா, அல்லது அவளைத் தேடிக் கொண்டு புறப்பட்டோமா' என்று தெரியாமல் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தேசத்தை விட்டுத் தான் புறப்பட்டது எல்லாம் ஆதியோடு அந்தமாகச் சொன்னான்.

இதை யெல்லாம் கேட்டுக்கொண் டிருந்த சாந்த குமாரியின் கண்களில் பொட்டு பொட்டாகக் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

சூரிய குமாரன் பரபரப் படைந்தான். அவள் ஏன் கண்ணீர் விடுகிறாள் என்று தெரியாமல் திருதிரு என்று விழித்தான்.

"இதென்ன? நான் உன்னை வருத்தச் செய்யும் வார்த்தை ஏதும் சொன்னதாக நினைவில்லையே! ஏன் அழுகிறாய்? நான் என்ன குற்றம் செய்தேன்?" என்றான்.

"மாபெரும் குற்றம் செய்து விட்டீர்கள்" என்றாள் அழுதுகொண்டு.

"என்ன?"

"துக்கமே உருவமாய் அவதரித்துக் கல்லாய்ச் சமைந்துபோன என்னை உயிர்ப்பித்துக் கருணை காட்டினீர்களே! அதற்கு என்னால் எவ்விதம் நன்றி செலுத்துவது என்பது தெரியாமல் தவிக்கிறேன். வார்த்தை வரவில்லை. உள்ளத்தில் பொங்கும் நன்றி கண்களில் கண்ணீராய்ப் பெருகுகிறது. இத்தகைய இக்கட்டான நிலையில் என்னை வைத்துள்ள தாங்கள் பெரிய குற்றவாளிதானே?" என்றாள்.

"அதென்னமோ எனக்குத் தெரியாது. 'துக்கமே உருவெடுத்தவள்' என்பதாகச் சொன்னாயே! அப்படிச் சொல்லும்படியாக உனக்கு என்ன அப்படிப்பட்ட கஷ்டம் நேர்ந்தது" என்று கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை" என்றாள்.

"அப்படியானால், அதைச் சொல்லு!" என்றான் சூரிய குமாரன். (தொடரும்)

உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...

ஒரு தலைவர்க்கூட, தினமும் ப்ளு ஜில்லெட் பிளேடை உபயோகிக்கும் சாதாரண மனிதனைவிட ஆனந்தமான க்ஷவரத்தை அனுபவிக்க முடியாது. மிகவும் கூராக தீட்டப்பட்ட இதன் விளிம்புகள் வழவழுப்பான, சுகபோக க்ஷவரத்தை உங்களுக்கு அளிக்கிறது. மின்சாரத்தால் பதப் படுத்தப்பட்டதும், பிரத்தியேகமாக வனையக்கப்பட்டதுமான இந்த எஃகு பிளேடுகளால் அதிக தடவைகள் க்ஷவரம் செய்து கொள்ளலாம். விலை மிகவும் சரசமாயிருப்பதால், ஒவ்வொரு மனிதனும் உலகில் மிகவும் நாகரீகமான மனிதர்களின் விரும்பத்தக்க கூட்டத்தில் சேரலாம்.

ப்ளு ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணா

தி பாவுஸோரி பெனிபிட் சிட் பண்டு லிட்.



(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 - மதராஸ்-5
தந்தி 'EVERMENS'.... போன் 85834

மாதாந்திர சீட்டுகள்
இம்மாத சீட்டு வரிசையில் இடம்பெறாத விண்ணப்பதாரர்களுக்கு இடமளிக்க ஆரம்பிக்கும் எங்கள்
ஆகஸ்டு மாத சீட்டு வரிசை
(3-வது வெள்ளிக்கிழமை, ஏல வரிசை)

சந்தா செலுத்தும் கடைசி தேதி 11-8-52 முதல் ஏலத் தேதி 14-8-52

	மாதச் சந்தா	சீட்டின் மதிப்பு
B கிளாஸ்	ரூ. 100/-	ரூ. 2,500/-
C ,,	ரூ. 50/-	ரூ. 1,250/-
D ,,	ரூ. 25/-	ரூ. 625/-
E ,,	ரூ. 20/-	ரூ. 500/-
F ,,	ரூ. 15/-	ரூ. 375/-
G ,,	ரூ. 10/-	ரூ. 250/-
	25 மாதங்கள்	25 மெம்பர்கள்

ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக் கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகையை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும்.

சீராகச் சேமிப்பதற்கு உங்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்.
(போர்டார் உத்திரவுப்படி.)

எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்



ஒவ்வொரு காரியாலயத்திற்கும்
ஒவ்வொரு வீட்டிற்கும் அத்யாவசியமுள்ள
பாதுகாப்புக்கும் நம்பிக்கைக்கும் உகந்த

ஸ்டீல் அலமாரிகள்

★

உயர்ந்த ரக ஸ்டீலினால் மிக நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டு ஆலிவ் பச்சை வர்ணத்துடன் கண்ணைக் கவரும் வண்ணம் உள்ளது. அட்ஜஸ்ட் பண்ணி வைத்துக் கொள்ளுமாறு 4 ஷெல்ப்கள் பொருத்தப் பட்டுள்ளது. மிகவும் குறைந்த விலை.

சைஸ்: 75" × 35½" × 19"
விலை ரூ. 205/-

சைஸ்: 37" × 21" × 15½"
(இரண்டு ஷெல்ப்களுடன் கூடியது)
விலை ரூ. 80/-

விவரங்களுக்கு

ஸாம்ஸன் & கம்பெனி லிட்.
151, பிராட்வே, த. பெ. 1219, மதராஸ்-1
டெலிபோன்: 4521] [தந்தி: BARAPASH

பார்வதி பரிணயம்



கி. ரங்கராஜன்

திருச்சிராப்பள்ளியில் மேலப்புலிவார் ரோட்டில், ஆச்சான்புரம் குஞ்சிதபாதம் ஐயர் என்றால் அழுத பிள்ளை வாய் மூடும். அவ்வளவு பிரசித்தம். பெரிய பணக்காரர். நிறைந்த செல்வாக்கும், மதிப்பும் படைத்தவர். அவருடைய வீட்டில் முதன் முதலாக விவாகம் என்றால் கேட்பானேன்? அவருடைய பெண் பார்வதிக்குத்தான் விவாகம். நாலைந்து அண்ணன் தம்பிகளுக்கு இடையில் அவள் ஒருத்திதான் பெண்.

அவளுக்கு வரன் தேடும் விஷயமாக அவள் தகப்பனார் ரொம்பக் கஷ்டப்பட்டார். ஊர் ஊராக மனுஷ்யர்களை அனுப்பிச் சல்லடை போட்டுச் சலித்தார். கடைசியாக மாயூரத்தில் ஒரு வரன் இருப்பதாகத் தெரிந்தது.

பையனைப் போய்ப் பார்க்க நினைத்து, தம்முடைய பளபளவென்ற புத்தம் புதிய காரிலேயே மாயூரத்துக்குப் போனார். கூட அவர் நண்பர்கள் சிலரும் போனார்கள். சுப காரியத்துக்குப் போகும்போது, வெறுங் கையுடனா போவது? ஆப்பிள்களும், மாம்பழங்களுமாக வாங்கி, அவற்றைக் கூடைகளில் நிரப்பிக் கொண்டார்.

அவர் போன சமயம் பையன் வீட்டில் இருந்தான். முதற் பார்வையிலேயே ஐயருக்குப் பையனைப் பிடித்து விட்டது. எப்படியும் அந்த வரனை நழுவவிடக் கூடாதென்று அவர் தீர்மானித்து விட்டார்.

ராஜகோபாலன், சிதம்பரம் காலேஜில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். இருபத்திரண்டு வயதிருக்கும். சிவப்புக்கும் வெளுப்புக்கும் இடைப்பட்ட மேனி. குறுகுறுவென்றிருந்த அவன் முகமும், கட்டுமஸ்தான உடம்பும் ஐயருக்கு மிக மிகப் பிடித்து விட்டது.

பையனுக்குத் தகப்பனார் இல்லை. தாயார்தான் இருந்தாள். சாதாரணக் குடும்பம். ஆதியில் அப்பளம் இட்டு, ஹோட்டலுக்கு மாவு அரைத்துப் பையனைப் படிக்க வைத்தாள் தாயார். அவன் பரீக்ஷை தேறி உத்தியோகம் ஏதாவது ஒன்றைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

இவ்வளவும் குஞ்சிதபாதம் ஐயர் அறிந்த விஷயம். பையன் ஏழையா பணக்காரனா என்று அவர் யோசிக்கவில்லை. அவர் நினைத்தாரானால் எந்த ஏழைப் பிள்ளையையும் ஒரே நிமிஷத்தில் பணக்காரனாக்கி விடலாம்.

"எனக்குப் பையனைப் பிடித்து விட்டது. பையனுக்குப் பெண்ணைப் பிடிக்க வேண்டும். திங்கட்கிழமை நாள் நன்றாக இருக்கிறது. அன்று எங்கள் ஊருக்கு வந்தால் பெண்ணைப் பார்த்து விட்டு வரலாம். நான் கார் அனுப்புகிறேன்" என்றார் குஞ்சிதபாதம் ஐயர்.

ராஜகோபாலன் தாயாருக்கு ஆச்சரியமாக இருந்தது. பெண்ணைப் பார்ப்பதற்கு மாயூரத்திலிருந்து திருச்சி வரைக்கும் காரா?

"வரதட்சிணையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று நினைக்கவேண்டாம். உங்கள் மனம் போலச் செய்கிறேன். எனக்கு இருக்கிறது ஒரே பெண். யாருக்குச் செய்யப் போகிறேன்?" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் அந்தப் பெரிய மனிதர்.

திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு ராஜகோபாலன் வீட்டுக்கு ஒரு கார் வந்தது. அது முன்பு வந்த கார் அல்ல. வேறொன்று. பார்வைக்கு இது இன்னும் நன்றாக இருந்தது. காரில் போகும்போது, டிரைவர், குஞ்சிதபாதம் ஐயரவர்களைப் பற்றியும், அந்தப் பக்கங்களில் அவருக்குள்ள அபரிமிதமான செல்வாக்கைப் பற்றியும், ஒரு பிரபந்தமே பாடிவிட்டான். அவன் ஓட்டும் அந்தக் கார் வரப்போகும் மருமகப் பிள்ளையை உத்தேசித்துச் சமீபத்தில் வாங்கியதாகச் சொன்னான்.

ராஜகோபாலனும் அவன் தாயாரும் ஆச்சரியத்தால் பிரமை தட்டிப் போனார்கள்.

சில மணி நேரங்களில், கார் திருச்சி காவேரி பவனத்துக்கு வந்தது.

குஞ்சிதபாதம் ஐயர் வந்தவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே போனார்.

கூடத்தில் பத்துப் பன்னிரண்டு பெரிய மனுஷ்யர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பெண்ணைப் பார்க்க வரப்போகிறார்கள் என்பதை உத்தேசித்து அவர் ஒரு சின்ன 'பார்ட்டி'க்கு ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் ஒரு பாட்டுக் கச்சேரியும் இருந்தது.

இவற்றை யெல்லாம் பார்த்தபோது ராஜகோபாலனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அயர்ந்து போனான்.

தித்திப்பில் நாலைந்து விதம்; உப்பில் நாலு தினுசு பண்ணியிருந்தார்கள்.

அவற்றில் ஒவ்வொன்றிலும் துளி துளி மாதிரி பார்ப்பதற்குள், ராஜகோபாலனுக்கு வயிறு நிறைந்து விட்டது.

பார்ட்டியும், கச்சேரியும் முடிந்து பெண்ணைப் பையன் பார்க்கும் கட்டமும் வந்தது. பெண் புதிய சிற்றாடை சல சலக்க, கூடத்துக்கு வந்து, இரண்டொருவருக்கு நமஸ்காரம் செய்தாள். அவனையும் நமஸ்காரம் செய்தாள். தன்னை வந்து நமஸ்காரம் செய்த போது, ராஜகோபாலன் அந்தப் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தான்.

அட்டைக் கரியாய், பெருச்சாளி மாதிரி, முன் நெற்றி மேடிட்டு அவலக்ஷணம் தாண்டவமாடும் அந்த உருவத்தை அவன் பார்த்ததும் அவனுக்கு ஒரே அடியாய்ச் சப்பிட்டுப் போயிற்று. போயும் போயும் தனக்கு அந்தக் கரிப்பெண்ணா கிடைக்க வேண்டும்? அவளா தனக்கு வர இருக்கும் மனைவி? அத்தகைய துர்ப்பாக்கியத்தை வரவேற்க அவன் தயாராக இல்லை.

அவன் உள்ளத்தில் ஓடிய மனவேதனையை அவன் முகக் குறிப்பால் அறிந்த குஞ்சிதபாதம் ஐயர் "கல்யாணத்தை இந்த மாசக் கடைசியிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கோடை பிறந்து விட்டால் நான் கோடைக்கானலுக்குப் போய் விடுவேன். நீங்கள் கோடைக் கானலுக்கு வந்ததில்லையே! அங்கேயும் எனக்கு ஒரு பங்களா இருக்கிறது!" என்றார்.

"ஊருக்குப் போய் எழுதுகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்தான் ராஜகோபாலன்.

கூடவே குஞ்சிதபாதம் ஐயரும் எழுந்து ரயிலடி வரைக்கும் அவர்களுடன் போய் இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கி அவனிடம் கொடுத்து அவர்களை அனுப்பி விட்டு வந்தார்.

ரயிலில் போகும்போது ராஜகோபாலன் பேச ஆரம்பித்தான்.

"என்னம்மா! பெண்ணைப் பார்த்தாயல்லவா! நல்ல கறுப்புத்தானே!"

"அப்படி ஒன்றும் கறுப்போடு சேர்த்தி இல்லை. மாநிறம்."

"மாநிறமாவது, மண்ணாவது! தொட்டால் ஒட்டிக் கொள்ளும் போல் இருக்கிறது. நீ என்னமோ சொல்லுகிறாயே!"

'போடா பைத்தியம்! உனக்கு என்ன தெரியும்? கறுப்பிலும் சிவப்பிலும் என்னடா இருக்கிறது? இந்தப் பெண் குடித்தனப் பாங்காக இருக்கும் போல இருக்கிறது.

நமக்கு அதுதானே வேண்டும்? உடம்பு நிறைய நகை போட்டிருக்கிறார்கள். அந்தப் பிராமணனுக்கு நிறைய செல்வாக்கு இருக்கிறது. உனக்கும் ஏதாவது ஒரு வேலைக்குச் சிபார்சு செய்யலாம். அப்பளம் இட்டு, மாவு அரைத்து மன்றாடியதற்கு பகவான் இந்த மட்டும் வழி காட்டினாரே என்றிருக்கிறேன். வேண்டாம் என்றால் விட்டு விடு. உன்னை வற்புறுத்தவில்லை. ஐயங்கார் வீட்டு லக்ஷ்மியை உனக்குத் தெரியுமே! அவள் நல்ல அழகிதானே? இருந்து என்ன பயன்? பொழுது விடிந்தால், பொழுது போனால், வீடு வீடாக உப்புக்கும் புளிக்கும் கடனுக்கு அலைகிறாள்'' என்று மேலும் ஏதேதோ சமாதானம் சொன்னாள் தாயார்.

ராஜகோபாலன் மனம் சலனமடைந்தது. தன் அம்மா சொல்வதிலும் சிறிது உண்மை இருப்பது போலப் பட்டது. தனக்காக அவள் அந்தக் காலத்தில் பட்ட கஷ்டங்களுக்கு அவள் பொருட்டாக ஒரு சிறிய தியாகம் செய்யத்தான் வேண்டும் என்று நினைத்தான். ''நீ சொன்னால் சரிதான் அம்மா! சம்மதம் என்று அவர்களுக்கு எழுதி விடட்டுமா, அம்மா?'' என்றான்.

ராஜகோபாலன் கடிதம் வந்த சில தினங்களுக்குப் பிறகு மாப்பிள்ளை 'டிரஸ்' ஸுக்காகக் குஞ்சிதபாதம் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக் அவன் பேருக்கு அனுப்பியிருந்தார்.

அவ்வளவு பெரிய தொகையைப் பார்த்ததும், தாயாரும் மகனும் அடைந்த ஆச்சரியம் இவ்வளவு அவ்வளவு அல்ல. ''அப்பா, ராஜா! நான் சொல்வதைக் கேள். உனக்குத் துணிமணியில் அவ்வளவு அனுபவம் போதாது. உன் நண்பன் வேணு, பட்டணத்திலேதான் இருக்கிறான். அவனைக் கொண்டு அங்கேயே வாங்கிவிடேன்!''

தாயார் சொன்னதும் சரி என்று அவனுக்குப் பட்டது. அன்றிரவே சென்னைக்குக் கிளம்பினான்.

ரயிலை விட்டு இறங்கியதும், நேரே நண்பன் வீட்டுக்குப் போனான். அவன் போன சமயம் கூடத்தில் ஒரு பெண் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். பதினெட்டு பத்தொன்பது வயதிருக்கும். நல்ல சிவப்பு. 'விடவிட'வென்று உயரமாய் தந்தத்தில் கடைந்தெடுத்த சிலை மாதிரி இருந்தாள். தான் வந்த காரியத்தை மறந்து அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜகோபாலன்.

''என்ன பார்க்கிறீர்கள்? யார் வேண்டும்?'' என்று அவள் தன் குமுத வாய் மலர்ந்து கேட்ட பிறகுதான், அவனுக்கு இந்த உலகத்து நினைவு வந்தது.

''ஒன்றுமில்லை......வேணு இருக்கிறானா?'' என்று கேட்டான் தடுமாறிய குரலில்.

அரை நூற்றாண்டு அபிவிருத்தி!

இந்தியாவில் பிரசித்தி பெற்ற இன்ஷூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றான யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி ஆரம்பமாகி சற்றேறக் குறைய அரை நூற்றாண்டு ஆகிறது. 46 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான மேற்படி கம்பெனியில் 1951-ம் வருஷம் முடிய 1,09,655 பேர்கள் 23,89,01,159 ரூபாய்க்குப் பாலிஸி எடுத்துக் கொண்டிருப்பதிலிருந்து அக்கம்பெனியின் ஆச்சரியமான முன்னேற்றத்தை யாவரும் அறியலாம்.

மேற்படி கம்பெனியின் 46-வது ஆண்டுக் கூட்டம் சென்ற மாதம் சென்னையில் நடந்த போது, அதன் சேர்மனாகிய ஸ்ரீ M. Ct. M. சிதம்பரம் செட்டியார் மேற்கண்ட புள்ளி விவரங்களை வெளியிட்டு, மேலும் பேசியதாவது:

''1950-ஆம் ஆண்டில் வட்டி, டிவிடெண்ட், வாடகை இவற்றின் மூலமாக நமது கம்பெனிக்கு ரூ. 18,87,399 வருமானம் கிடைத்தது. சென்ற வருஷத்தில் அந்த இனங்களின் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 21,72,572 ஆக உயர்ந்திருக்கிறது. சென்ற வருஷத்தில் நமது கம்பெனியிடமிருந்து பாலிஸிதார்களுக்கு ரூ. 39,54,818 கிடைத்திருக்கிறது. தற்போது கால நிலைமையில் பல மாறுதல் ஏற்பட்டிருப்பதால் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏஜண்டுகள் பாலிஸிதாரர்களைச் சேர்ப்பதுடன் தங்களது கடமை முடிந்து விட்டது என்றிருப்பதற்கில்லை. அவர்கள் தங்களுடைய உத்தியோகத்தில் பூரண நம்பிக்கையுடன் இடைவிடாமல் உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்; சமூதாயத்தில் கௌரவமான, பிரயோஜனகரமான கடமையைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

பொது ஜனங்களில் இன்னும் எத்தனையோ பிரிவினர் இன்ஷூர் செய்து கொள்ளவில்லை. நகரங்களில் உள்ள தொழிலாளர்கள், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் முதலியோர் இன்ஷூரன்ஸ் கம்பெனியுடன் யாதொரு தொடர்பும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏஜண்டுகள் அத்தகைய பிரிவினரிடையே வேலை செய்வார்களாயின் மிகுந்த பலன் ஏற்படும்.

நமது கம்பெனியில் ஏதாவது குறைகள் இருக்குமாயின், அவற்றை பாலிஸிதார்கள் சுட்டிக் காட்டும் பட்சத்தில், மேற்படி குறைகளைப் போக்கிப் பரிகாரம் தேடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவ்விதம் செய்வதால் பாலிஸிதாரர்களுக்கும் மிக நன்மை ஏற்படும்.''

ஸ்ரீ M. Ct. M. சிதம்பரம் செட்டியார்

"அண்ணாவா? வரச் சொல்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் அந்த வடிவழகி. அவள் உள்ளே போகும்போது அவள் பின்னழகு அவன் நெஞ்சைக் கிளறியது. 'மஞ்சொக்கும் அளக ஓதி' என்று கவி கூறியது, அந்த மாதிரி ஒரு பெண்ணின் கூந்தலை நினைத்துத்தான் என்று எண்ணினான்.

சில நிமிஷங்களில் உள்ளேயிருந்து வேணு வந்தான். வந்தவன் ராஜகோபாலனைக் கண்டதும் ஓடி வந்து, "நீயாடா? எப்படா வந்தாய்!" என்று சொல்லிக் கொண்டே அவனை அப்படியே கட்டித் தழுவினான்.

சிறிது நேரம் அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர்.

"இங்கே கூடத்திலே யிருந்து உள்ளே போனது, உன் தங்கையா?" என்று ராஜகோபாலன் திடீரென்று கேட்டான்.

"என் தங்கைதான், நீ பார்த்ததில்லையா? இன்னும் விவாகமாகவில்லை. நானுந்தான் இரவு பகல் பாராமல், இவள் ஜாதகத்தைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராகப் போய்க் கொண்டிருக்கிறேன். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. எப்படியும் இந்த மாசிக்குள் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும். உனக்கு யாரையாவது நல்ல வரனைத் தெரிந்தால் சொல்லேன்" என்றான் வேணு.

ராஜகோபாலன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். சட்டென்று அதை நிறுத்திக் கொண்டு விசாரித்துச் சொல்கிறேன்". என்று சொல்லி விட்டு எழுந்தான்.

"நீ வந்த காரியத்தைச் சொல்லவில்லை. அதற்குள் புறப்பட்டு விட்டாயே! என்ன அவசரம்?" என்று கேட்டான் வேணு,

"டவுனில் கொஞ்சம் வேலையிருக்கிறது. முடிந்தால் இன்று சாயங்காலம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் ராஜகோபாலன்.

ராஜகோபாலன் அந்தப் பெண்ணை— வேணுவின் தங்கையை — பார்த்த அந்த விநாடியே தன் நெஞ்சை அவளுக்குப் பறி கொடுத்து விட்டான். அவளுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை என்று தெரிந்த பின்பு அவன் மனசில் புதியதொரு ஊக்கமும், நம்பிக்கையும் பிறந்தது.

'எதற்காக வேலையற்றுப் போய் அந்த அவலட்சணம், குஞ்சிதபாத ஐயர் பெண்ணைப் போய்ப் பார்த்தேன்? பெண்ணா அது? மரநாய் தோற்றுவிடுமே! அவள் முகமும், எலிவால் பின்னலும், என்ன கோரம்! என்ன கோரம்! பணத்தையும் அந்தஸ்தையும் காட்டி அல்லவா, அந்த மனிதர் என்னை ஏமாற்றப் பார்த்தார்?" என்று அவரை மனசுக்குள் திட்டினான், ராஜகோபாலன்.

"நல்லவரனை ஏதாவது உனக்குத் தெரிந்தால் சொல்லேன்" என்று நண்பன் கேட்ட போது "நானே அவளை விவாகம் செய்து கொள்ளுகிறேன்" என்று பட்டவர்த்தனமாகச் சொல்லாமற் போனதற்கு ராஜகோபாலன் பெரிதும் வருந்தினான்.

நேரே போஸ்டாபீஸுக்குப் போனான். குஞ்சிதபாதம் ஐயர், டிரஸ்ஸுக்காக அனுப்பின பணத்தை இன்ஷ்யூர் செய்து அவருக்கே திருப்பி அனுப்பினான். அத்துடன் ஒரு தந்தி "விவாகத்தில் விருப்பமில்லை. மன்னிக்கவும்" என்று அனுப்பி விட்டு அன்றிரவே மாயூரம் திரும்பினான்.

*

திடீரென்று தன் மகனைக் கண்டதும், ராஜகோபாலன் தாயார் வியப்பு மேலிட்டவளாய் "என்னடா ராஜா! அதற்குள்ளே வந்து விட்டாய்?" என்று கேட்டாள்.

"வராமல் என்ன செய்ய? அவர்களுக்கு நம்முடைய சம்பந்தம் வேண்டாமாம்."

"ஏன் வேண்டாமாம்? யார் சொன்னார்கள்? நீ யாரைப் பார்த்தாய்?"

"அந்த மனிதர் நான் சென்னைக்குப் போவதை எப்படியோ தெரிந்து கொண்டு, அங்கேயே வந்து விட்டார். விஷயத்தைச் சொல்லி விட்டு ஆயிரம் ரூபாய் பணத்தையும் பெற்றுக் கொண்டு போய் விட்டார். பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் இப்படியும் இருக்கிறார்கள்!" என்றான்.

இதைக் கேட்டதும் அந்த அம்மாள் அப்படியே அயர்ந்து உட்கார்ந்து விட்டாள்.

அவள் தன் மனத்தில் அதுகாறும் கட்டியிருந்த அந்தப் பலமான கோட்டை ஒரு நொடியில் நொறுங்கித் தவிடு பொடியாகி விட்டது.

சிறிது நேரம் பிரமை பிடித்தவள் போல இருந்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

நாட்கள் ஒன்று, இரண்டு மூன்று என்று ஓடிக் கொண்டிருந்தன. ஒரு மாசமும் ஆயிற்று.

அந்த ராஜகோபாலன் தன் நண்பன் வேணுவுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் அவன் சகோதரி மீது தனக்குள்ள விருப்பத்தை நாஸுக்காக வெளியிட்டிருந்தான்.

தபாலை, தபால் பெட்டியில் சேர்த்து விட்டு வீட்டுக்கு வந்தான். மேஜை மீது அவனுக்காக ஒரு கவர் காத்திருந்தது. கவரின் மேல் "புக் போஸ்ட்" என்றிருந்தது. பிரித்தான். உள்ளே கில்ட் எழுத்துக்களில் அச்சிட்ட விவாக முகூர்த்தப் பத்திரிகை ஒன்றிருந்தது, வேணுவின் தங்கை சிவகாமசுந்தரியைக் குஞ்சிதபாதம் ஐயர் குமாரன் சிரஞ்சீவி நடராஜனுக்கும் அதே குஞ்சிதபாதம் ஐயர் பெண் பார்வதியைச் சிரஞ்சீவி வேணு கோபாலனுக்கும், விவாகம் செய்து கொடுப்பதாய்ப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தங்கள் திருச்சி 'காவேரி பவனத்தில்' நடப்பதாயும் அதில் கண்டிருந்தது!

ராஜகோபாலன் நெற்றியில் கையை வைத்துக் கொண்டு அப்படியே நாற்காலியில் அயர்ந்து உட்கார்ந்து விட்டான்.

பட்டிணத்துக்கு உங்கள் பாதை

ரஸ்தாவின்மேல் ஊத்தப்படும் அந்தக்கருப்பான கெட்டிப்பதார்த்தம் பிடுமன் எனப்படும். அது சுத்தப்படுத்தப்படாத பெட்ரோலியத்திலிருந்து செய்யப்படுகிறது. ரஸ்தாவின் மேல்பாகத்தை கெட்டிப்படுத்த உபயோகிக்கப்படுகிறது. இந்திய கிராமங்களின் நலனுக்கு நல்ல ரஸ்தாக்கள் மிக அவசியம். பிடுமன் உபயோகித்தால் ரஸ்தாக்கள் கெட்டியாகி பாரமான வண்டிகள் போவதைத்தாங்கக்கூடியதாகவும், கடுமையான பருவ மழைகளால் சேதமடையாமலும் இருக்கும். நீர்ப்பாசன திட்டங்களுக்கு பிடுமன் அதி முக்கியம். வாய்க்கால்களில் தண்ணீர் ஓடிவிடாமல் பாதுகாக்க வாய்க்காலின் உட்புறங்களுக்கு பிடுமன் உபயோகிக்கப்படுகிறது. விமான தலங்களிலுள்ள 'ரன்வேஸ்' ரஸ்தாக்களில் சில பிடுமன் கொண்டு தயார்செய்யப்பட்டிருக்கின்றன. மைல் கணக்கில் இன்ஸுலேடிங் கேபிள்களிலும் பிடுமன் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அடுத்த முறை நீங்கள் நல்ல நிலைமையில் உள்ள ரஸ்தாவில் பளுவுள்ள பாரவண்டியோ, லாரியோ செல்வதை கண்டால், பிடுமனையும், பர்மா-ஷெல்லையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

பர்மா-ஷெல்...
பாரத நாட்டின்
வாழ்க்கையில்
ஈடுபட்டிருக்கிறது

BURMAH-SHELL...IN INDIA'S LIFE AND PART OF IT

சருக்குதலினின்றும் அதிகப்படியான பாதுகாப்பு



Firestone

பயர்ஸ்டோன்
டி-லக்ஸ் சாம்பியன்ஸ்
டயர்களினால்

மழை காலத்தில் நனைந்து சருக்கும் ரஸ்தாக்கள் மோட்டார் ஓட்டுவதிலுள்ள அபாயங்களை அதிகரிக்கின்றன. பரிபூரணப் பாதுகாப்பளிக்கவும் நீடித்த நாட்கள் உழைக்கவும் ஒருங்கே நன்கு தயாரிக்கப்பட்டுள்ள பயர்ஸ்டோன் டி-லக்ஸ் சாம்பியன் டயர்களையே உங்களது கார்களுக்குப் பொருத்துங்கள்.

60% அதிகமான சருக்குதலைத் தவிர்க்கும் வளைவுகள்—5,620 சருக்குதலினின்றும் தவிர்த்துப் பாதுகாப்பளிக்கும் பிடிப்புகளும் வளைவுகளும் பூரண பந்தோபஸ்தை அளிக்கின்றன.

55% உறுதியும் பாதுகாப்பையும் அளிக்கும் கம்—டிப்பிங் முறையால் தயாரிக்கப்பட்ட இந்த டயர்கள் அவை வெடிப்பதினின்றும் காப்பாற்றுகின்றன.

இன்று சிறந்தது-நாளை இன்னமும் சிரேஷ்டமானது

Copyright

வழி பிறந்தது!

ஜடாதரன்

வானம் மப்பும் மந்தாரமுமாய்க் குமும்பிக் கிடந்தது. மழைக்குக் கட்டியம் கூறிக்கொண்டு வெளி எங்கணும் அமோகமாகப் புழுக்கம் வியாபித்திருந்தது. இரவு மணி ஒன்பது கூட ஆகவில்லையெனினும், வானத்தின் மந்தார நிலை இருட்டி வெகு நேரமாகி விட்டது போன்ற பிரமையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. கடைத் தெருவில் சந்தடி குறைய ஆரம்பித்தது. கணேச பத்தர் கடையைக் கட்டி விட்டுக் கையில் சாவிக் கொத்துடன் எதிர்வீட்டுச் சுப்பையா வாத்தியாருடன் சம்பாஷித்துக் கொண்டே வீடு நோக்கிப் புறப்பட்டார்.

சுப்பையா சொன்னார்: "நாளைக்குத் தம்பியோட "ரிஸல்ட்" சொல்றாங்களாமே!"

"ஆமாம்; வாத்தியாரே! ரிஸல்ட் வந்த பிறகு ஏக வேலை கிடக்குது. அவனுக்குச் சட்டை, கிஜார் எல்லாம் புதுசா தைக்கணும். பட்டணத்திற்கு அனுப்புகிறது என்று தீர்மானம் பண்ணினப்புறம் நாம்ப எல்லாம் சரியா ஏற்பாடு பண்ணணுமில்லே? அவன் அண்ணன் கிட்டேயே அனுப்பி, காலேஜிலே சேர்த்து படிக்க ஏற்பாடு செய்துவிட எண்ணியிருக்கிறேன். அங்கேயே 'ஒரு நாலு வருஷம் படிச்சுட்டு, பிறகு ஒரு பெரிய உத்தியோகத்திலே அமர்ந்துட்டான்னா, என் லட்சியம் நிறைவேறிப் போயிடும். எல்லாம் ஆண்டவன் செயல்" என்று கணேச பத்தர் தன் எண்ணத்தைத் தெரியப்படுத்திக் கொண்டார். பத்தரின் வீடு சமீபித்ததும் வீட்டு வாசலிலேயே இருவரும் பத்தருடைய பையனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். பத்தருடைய பையனைப் பற்றியோ, அவனுடைய லட்சியத்தைப் பற்றியோ, சுப்பையா வாத்தியார் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை. மழை வலுவாகப் பிடித்துக் கொள்ளு முன் தம் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு மனைவியிடம் "நல்ல பிள்ளையாக" நடந்து கொள்வதில் தம் பரபரப்பைக் காண்பித்துக் கொண்டவராக அவர் கணேச பத்தரிடம் விடை பெற்றுக் கொண்டார்.

வல்மீகலிங்கம், தன் தகப்பனாரும் சுப்பையா வாத்தியாரும் பேசிக் கொண்டிருக்கையில், வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு இருளைப் பார்த்த வண்ணம் குருட்டு யோசனையில் ஆழ்ந்திருந்தான். குமும்பிக் கிடந்த வானத்தைப் போலவே, அவன் உள்ளமும் சஞ்சல மடைந்திருந்தது. அந்த இரவு பூராவும் அப்படியே விடியாத இரவாக இருக்கலாகாதா என்று அவன் ஏங்கிக் கிடந்தான்!

பொழுது விடிந்ததும் வெளியாக இருக்கும் அவனுடைய பரீட்சை முடிவை அவனைத் தவிர அவன் வீட்டில் எவ்வளவு ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறார்கள்!

சுமார் நூற்றைம்பது வீடுகளுக்கு மேற்பட்ட அந்தத் தெருவில் கணேச பத்தரைத் தெரியாமல் யாரும் இருக்க மாட்டார்கள். ஊருக்கெல்லாம் அவர் நல்ல மனிதர். பரம்பரையாக அந்த ஊரில் அவருடைய முன்னோர்கள் பட்டறை வைத்துத் தொழில் நடத்திப் பெயர் வாங்கியிருந்தனர். கணேச பத்தரின் குடும்பம் பெரிய குடும்பம். தெரிந்தோ தெரியாமலோ பத்தர் குலத்தின் நாணயத்தையே குறைக்கும் வகையில் பழமொழியாகி விட்ட வாக்கியத்திற்குக் கூடக் கணேச பத்தரும், அவர் இளைய சகோதரரும் விதி விலக்காக இருந்தனர்.

தெய்வ பக்தியிலும், கண்யத்திலும், நாணயத்திலும் ஊறிவிட்ட பழைய பண்பாட்டின் சுவட்டில் வாழ்க்கையைச் செலுத்துபவரெனினும், கணேச பத்தருக்குப் புதுமையிலும் மோகம் இருக்கத்தான் செய்தது. நாகரிகம் ஏற்படுத்திவிட்ட சொகுசான மாறுதல்களை அவர் மற்ற வீடுகளில் பார்க்கையில், தம் பிள்ளைகளையும் அந்த வழிக்குத் திருப்பிவிட ஏனோ அவர் உள்ளம் சபலமடைந்திருந்தது. அவருக்கு மூன்று பிள்ளைகளும், இரண்டு பெண்களும் இருந்தனர்.

பெரிய பையனை பி. ஏ. வரையில் படிக்க வைத்துத் தம் ஆசையை அவர் நிறைவேற்றிக் கொள்ள நினைத்தார். அது நடக்கவில்லை. பத்தர் மகன் பி. ஏ. படித்தான் என்ற பெருமையைத் தவிர அவனுக்குத் தனியாகத் தலை



கச்சேரி செய்த வித்வான்:—எல்லாரும் முன்னாலேயே போய் விட்டார்கள், நீங்கள் மூன்று பேரும் கடைசி வரையில் இருந்து கேட்டது பற்றி மிகவும் சந்தோஷம்.

ஒருவர்:—கேட்காமல் என்ன செய்வது? உங்கள் கச்சேரியை முடித்தவுடன் இந்த மேடையிலேயே நாங்கள் கச்சேரி செய்யப் போகிறோம்!

நடிகர்:—நான் ஸ்திரீ பார்ட் போட்டுக் கொண்டு மிக நன்றாக நடிப்பேன் என்று எனக்கு ஒரு சர்ட்டிபிகேட் கொடுங்கள்......ஸார்.

டிராமா கம்பெனி முதலாளி:— அதெப்படி ஸார் முடியும்? நீர் நடித்து நான் பார்த்ததே இல்லையே?

நடிகர்:—சரி, அப்படியானால், 'இவர் மிகப் பெரிய நடிகர், அதுமாதிரி நடிப்பை நான் பார்த்ததே இல்லை,' என்று எழுதிக் கொடுங்களேன்!

யில் இடம் ஏறிவிடவில்லை! பட்டணத்தில் எங்கேயோ ஒரு காரியாலயத்தில் குமாஸ்தாவாகத்தான் அவன் உழன்று கொண்டிருந்தான். இரண்டாவது பையனின் மூலமும் அவர் ஆத்மா திருப்தி அடையவில்லை. இண்டர் வரை படித்துவிட்டு அவனும் சாதாரண உத்தியோகத்திற்குத்தான் போனான்.

வன்மீகலிங்கம்தான் கடைக்குட்டி, கணேச பத்தரின் செல்லப்பிள்ளை அவன். வீட்டின் செல்லப்பிள்ளையாக இருந்ததாலோ, என்னவோ அவன் சமர்த்துப் பிள்ளையாக இருக்கவில்லை. கணேச பத்தருக்கு அவனையாவது நன்றாகப் படிக்க வைத்து அவனை ஒரு ஆபீஸராக ஆக்கி விடவேண்டுமென்று ஆசை. ஆனால் அந்த ஆசை பையனின் மூளையில் எதிரொலிக்கவில்லை. பட்டறையில் "லொட் லொட்" என்று பவுனையும் வெள்ளியையும் காய்ச்சி அடிப்பதைத் தான் அவன் வெகுவாக ரசித்தான். அந்த வேலையை அவன் தகப்பனார் ரசிக்கவில்லை.

எப்படியோ வன்மீகலிங்கம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை வரை வந்து விட்டான். பரீட்சையில் தேறி விடுவோம் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. அவனை மக்கு என்று சொல்லிவிட முடியாது. பூகோள பாடம் அவனுக்குச் சரியாக வராது. தூந்திரப் பிரதேசத்தில் வசிக்கும் எஸ்கிமோக்களைப் பற்றியும், அக்ஷரேகை, தீர்க்க ரேகைகளைப் பற்றியும் சரமாரியாகக் கேட்கப் பட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்காதவன் எப்படிப் பரீட்சையில் தேறிவிட முடியும்? நாலரைப் பவுனில் எத்தனை வடம் சங்கிலி செய்யலாம் என்று கேட்டிருந்தால் அவன் உடனேயே தயங்காது பதில் எழுதியிருப்பான்! பரீட்சையில் தேறாமல் அதன் மூலம் தன் தகப்பனுடைய ஆசைக் கனவுகளைச் சிதைத்து விடப் போகிறோமே, என்ற கிலேசத்தில் அவன் உள்ளம் வியாகூலமடைந்திருந்தது!

★

மறுநாள் விடிந்தது. பள்ளிக்கூடத்தில் "ரிஸல்ட்" போடும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிவுகளை முன் போல் தினசரிகளில் வெளியிடும் முறை நின்று விட்டதினால் பிள்ளைகளின் கூட்டம் பள்ளிக்கூடத்திலேயே நிறைந்துவிட்டது. பையன்கள் எல்லோரும் விதவிதமான உணர்ச்சிப் போராட்டங்களுடன் அங்கே குழுமியிருந்தனர்.

கடைசியில் முடிவும் வெளியாயிற்று. வன்மீக லிங்கம் கடமைக்காக ஒரு முறை "நோட்டீஸ் போர்டை"க் கவனித்தான். தேறியிருப்பவர்களின் நம்பரின் வரிசையில், அவன் நம்பரும் பெயரும் இருந்ததைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது! அவன் 'பாஸ்' செய்து விட்டான். தன்னைக் கை விட்டு விடும் என்று அவன் தீவிரமாக நம்பியிருந்த பூகோள பாடம்கூட அவனை ஏமாற்றி விட்டு, அவனைப் 'பாஸ்' செய்ய வைத்து விட்டது! வெற்றி யடைந்த மாணவர் கும்பலினின்றும் விடுபட்டு அம்புபோலத் தன் வீட்டை நோக்கி ஓடினான் அவன்.

★

மத்தியான வெய்யில் ஊரையே தகித்துக் கொண்டிருந்தது. காலையில் பரீட்சை முடிவுகள் வெளியானதின் விளைவாகப் பரிணமித்திருந்த தெரு மாணவர்களின் ஆரவார அமளிகூட மட்டுப் பட்டிருந்தது. கணேச பத்தர் அன்று வீட்டில் சம்பிரமமான விருந்தைச் சாப்பிட்டு விட்டு, மகன் தேர்ச்சியுற்ற பேரானந்தத்தில் கண்ணை மூடிக் கொண்டு சாய்ந்திருந்தார். சந்தோஷமும், சந்தேகமும் மாறி மாறித் தோன்றிய உணர்ச்சியில் வன்மீகலிங்கம் அவர் அருகில் பவ்யமாக உட்கார்ந்திருந்தான்.

பட்டறையில் வேலை செய்யும் இருளப்பன் அந்தச் சமயம் அங்கு வந்து "அண்ணாச்சி! வக்கீல் ஐயா வீட்டிலிருந்து உங்களைக் கையோட கூட்டியாரச் சொல்லி ஆள் வந்

திருக்கு" என்று சொல்லிவிட்டுச் சென்றார். "இதோ வரேன் என்று சொல்லியனுப்புடா" என்று அவனுக்குக் கட்டளையிட்டு விட்டுத் தராசுப் பெட்டியைக் கையி லெடுத்துக் கொண்டு வக்கீல் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானார், கணேச பத்தர்.

★

"வக்கீல் ஐயா" குடும்பம் அந்த ஊரி லேயே மிகவும் பணக்காரக் குடும்பம். கணேச பத்தருக்கு அந்தக் குடும்பத்தில் ஒரு அலாதி மதிப்பு. அவர்கள் வீட்டில் எந்த விசேஷ மானாலும் கணேச பத்தரைக் கூப்பிட்டு 'ஸ்பெஷ'லாக வீட்டிலேயே பட்டறை போட்டு வேலை நடக்கும். வக்கீலின் தாயார் அனுபவம் வாய்ந்த மாது சிரோமணி, நிறை சுமங்கலியான வயதான அந்த அம்மா ளிடம் கணேச பத்தருக்கு விநயம் அதிகம். இப்போது வக்கீல் பெண்ணுக்குக் கல்யாணம். புதிது புதிதான நகைகளைச் செய்யத்தான் கணேச பத்தரைத் தருவித்திருந்தார்கள். வக் கீலின் தாயாரிடம் பண்ண வேண்டிய நகை விவரங்களைத் தெரிந்து கொண்டு அங்கேயே பட்டறை போட்டு வேலையைத் துவக்கச் சம் மதித்தார் கணேச பத்தர். பேச்சு வாக்கில் வல்மீகலிங்கம் பாஸ் செய்து விட்டதையும், அவனை மேலே படிக்க வைக்க வேண்டும் என்னும் அவர் ஆசைத் திட்டத்தையும் அந்த அம்மாளிடம் சொன்னார் கணேச பத்தர்.

என்ன தோன்றியதோ, அந்த அம்மாள் கறுக்கென்று சொன்னாள்:

"கணேசா! நான் சொல்லுகிறேனே என்று வித்தியாசமாக நினைக்காதே. உன் பையனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டியதுதான்; கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் உனக்கோ வயசாகி விட்டது. உனக்குப் பிறகு உன் குடும்பத்திலே இந்தத் தொழிலை விருத்தி பண்ண யார் இருக்கிறார்கள்? இந்த நகை பண்ணுகிற தொழில் அப்படி என்ன மட்ட மாகப் போய்விட்டது? உன்னோட மூதாதை யர்கள் எல்லாம் போற்றி வந்திருக்கிற தொழிலே உன்னோடேயே மூடிஞ்சு அபி விருத்தி இல்லாமலா போய்விட நீ நினைக் கிறே? உனக்குப் பின் உன் குடும்பத்தார் இத் தொழிலைச் செய்ய வேண்டாமா?"

பத்தரிடம் கொண்டிருந்த பரிவு உணர்ச்சி யில் அந்த அம்மாள் மேற்சொன்ன வகையில் உணர்ச்சி மிகுந்த பிரசங்கமே செய்து விட் டாள். பத்தரின் மனம் கலங்கியது. பதில் ஒன்றும் பேசாமல் அவர் வீட்டினின்றும் விடை பெற்றுக் கொண்டார். அவர் மனத்தில் உணர்ச்சி அலைகள் கொந்தளித்தன. அவர் நினைவு தெரிந்தது முதல் பட்டறையும், கத்தியுமாகப் பவுனையும், வெள்ளியையும் மாற்றி மாற்றி நகை பண்ணிக் கொண்டே, படிப்பின் வாசனையறியாது, வளர்ந்து வரும் நாகரிக சமுதாயத்தினின்றும் தனித்து நின்று விட்ட ஏக்கம் அவருள் குமைந்து கொண்டிருந் தது. தன் மகனுமா தன்னைப் போலக் கஷ்டப் படவேண்டும் என்று நினைத்துத்தான் அவர் அவனை உத்தியோகஸ்தனாக ஆக்கிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தார். அந்த ஆசை நியாயமானது இல்லையா?

இரண்டு தினங்கள் கழிந்தன! அன்று கணேச பத்தர் கடையில் வேலை செய்து கொண்டிருந்தார். தயங்கித் தயங்கி வல்மீக லிங்கம் கால்கள் தடுமாறக் கடையினுள் பிர வேசித்த காட்சி அவரைத் திகிலுறச் செய் தது. வல்மீகலிங்கம் தன் தைரியத்தை யெல் லாம் ஒன்று திரட்டிக் கணேச பத்தரிடம் சொன்னான்:

"அப்பா! பள்ளிக்கூடத்திலே 'ரிஸல்ட்' போட்டிருந்தாங்களே, அதிலே தவறுத லாக என் நம்பரை 'பாஸ்' என்று போட்டு விட்டார்களாம். மேலே இருந்து இன்னிக் குத் தான் தகவல் வந்திருக்காம். என் நம்பரைப் பாஸ் ஆனதிலே சேர்க்கலியாம்!"

கண்களில் நீர் மல்க அவன் பரிதாபமாக முறையிடும் காட்சி கணேச பத்தரை மனம் நெகிழச் செய்து விட்டது. தம் மகன் "பெயில்" என்று தெரிந்து கொள்ள அவ

ருக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. சிறிது நேரம் வரையில் அவரும் பிரமை பிடித்தவராக உட்கார்ந்திருந்தார். அதை அவர், அவனுடைய தோல்வியாக ஏற்றுக் கொள்ளவில்லை. தமக்குத் தோல்வியாக, தம் லட்சியத்திற்குத் தோல்வியாக நினைத்துக் கொண்டார். வக்கீல் வீட்டு அம்மாவின் வார்த்தைகள் அவர் காதுகளில் ரீங்காரம் செய்தன. அந்தச் சமயம் சுப்பையா வாத்தியார் ஒரு சிமிட்டாப் பொடிக்காகக் கடையில் ஏறிப் பத்தரின் பொடி டப்பியைக் கையிலெடுத்துக் கொண்டு சென்றார்.

“என்ன பத்தரே! நம்ப தம்பிக்குக் கடைசியிலே பரீட்சை பாஸ் ஆகலியாமே. பின்னேங்க எல்லாம் பேசிக் கொண்டிருக்காங்களே! மறுபடி படிக்க வைக்கப் போகிறீங்க, இல்லே?”

யாரிடமாவது மனசைத் திறந்து அதில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் குறித்துக் கதற வேண்டுமென்று தோன்றியது கணேச பத்தருக்கு.

“சுப்பையா வாத்தியாரே! உங்ககிட்டே சொன்னா தவறு இல்லே. இத்தனை நாளா என் மனசிலே கர்வம் ஏறிக் கிடந்தது. நான் செய்யற தொழில் அகௌரவம். அதனாலே நம்ப பிள்ளையையாவது படிக்க வைச்சு, அவன் உத்தியோகஸ்தனாக ஆகி, நானும் பெரிய மனுஷங்க கோஷ்டியிலே சேர்ந்துடணும்னு ஏங்கிக் கிடந்தேன். இப்பத்தான் புரியுது எனக்கு. எங்களைப் போலச் சமுதாயத்திற்கு அவசியமான தொழில் செய்யறவங்க எல்லாம், என் மாதிரியே நினைச்சுக்கிட்டு அவங்க சந்ததிகளையெல்லாம் உத்தியோகஸ்தனாக ஆக்கிவிட்டால் பிறகு சமூகத்தினுடைய கதிதான் என்ன ஆகிறது? என் மகன் இப்போ பரீட்சையிலே தவறிப் போயிட்டான் என்று நான் வருத்தப் படலே. அவன் படிக்க வேண்டாம். எனக்குப் பிறகு என் பேரைச் சொல்ல, என்னோட தொழிலின் மகத்துவத்தை விளங்க வைக்க அவனைப் பட்டறையிலேயே போட்டு விடப் போகிறேன்.” கணேச பத்தர் குரல் தழுதழுக்க இதைச் சொல்லி முடித்தார்.

சுப்பையா வாத்தியார் சிலை போல உட்கார்ந்து கொண்டு இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். கணேச பத்தரின் லட்சிய மாறுதலை அவர் எந்த வகையில் ஏற்றுக் கொண்டாரோ, தெரியவில்லை.

ஆனால் வான்மீகலிங்கம் தன் தகப்பனாரின் மன மாற்றத்தை எண்ணிப் பரவசமெய்தினான். தந்தைக்குப் பின் பணியாற்றுவதில் முழு மனதுடன் ஈடுபாடு கொண்ட உத்தமமான பிரதிநிதியாகத் தன்னை அவன் நிர்ணயம் செய்து கொண்டு, அப்போதே சுத்தியும் கையுமாகப் பட்டறையில் அமர்ந்தான். பள்ளிப் படிப்பின் தொந்தரவினின்றும் விட்டு, அவனுக்குகந்த தொழிலில் பிரவேசிக்க வழி பிறந்து விட்டதை நினைக்கையில் பரீட்சையில் தேறாமல் போனதைக் கூட அவன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை!

படித்துப் பாருங்கள்!

கல்வி

இன்றையக் கல்வி முறையிலுள்ள குறைகளை எடுத்துக் கூறி, ஆண்மைதரும் கல்வியளித்தாலன்றிப் பாரத தேசம் உய்ய வழியில்லை என்று வன்மையாக முதலில் எடுத்துக் கூறியவர் சுவாமி விவேகானந்தர். அவர் சொல்வதைக் கேளுங்கள்.

“கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பது அன்று...வெறும் விஷயங்களைச் சேகரிப்பதுதான் கல்வி யென்றால் புத்தகசாலைகளன்றோ பெரிய மகான்களாக இருக்க வேண்டும்! அகராதிகளன்றோ ரிஷிகளாகி விடும்!”

இப்படிப் பசுமரத்தில் ஆணி அறைவது போல், அந்த மகாத்மாவின் இதயம் பொங்கி மொழிந்த மொழிகளைப் படிக்கும் போது, இன்றும் நமக்குப் புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

மொழிபெயர்ப்பு: தி. சு. அவனாசிலிங்கம், பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயமுத்தூர்.

உரிமைப் பெண்

ஒரே சமயத்தில் நிகழ்ந்த இரண்டு நிகழ்ச்சிகளில் ஒன்றினால் திருப்தியும் இன்னொன்றினால் கவலையும் ஏற்பட்டு மனித இதயத்தை விசித்திரப் பண்புக்குள்ளாக்கும் அதிசயத்தை “அவன் வளர்த்த கடாரி” என்னும் கதையில் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

ஓர் உணர்ச்சிப் பொறி, ஒரு சிந்தனைச் சிதர், ஒரு சிறு நிகழ்ச்சி—இவை ஒவ்வொன்றும் ஒரு சிறு கதையாகப் பரிணமிக்க முடியும் என்பதற்கு இந் நூலில் உள்ள கதைகள் யாவும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

‘உள் நெருப்பு” என்ற கதையில், அடங்கி அசடாய்க் கிடந்த சொக்கப்பன் திடீரென்று வீறு கொண்டெழுந்து ஒருவனைக் கொன்றுவிடுகிறான் என்று படிக்கும்போது ஆசிரியரின் கதை சொல்லும் திறன் நன்கு வெளியாகிறது.

இதே மாதிரி “பஞ்சக்காலன்”, “தந்தை சொல்”, “மழையும் இடியும்”, “தூரப் பிரயாணம்”, “உரிமைப் பெண்”, “ராதா” முதலிய மற்றக் கதைகளிலும் கற்பனையும் கதைத் திறனும் பொதிந்திருக்கின்றன.

எழுதியவர்: பெ. தூரன்; பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை — 18. விலை: ரூ. 2—0—0.

யோசிக்கும் வேளையில்

“யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்” என்றார் ஒரு மகான். ஆனால் ஸ்ரீமான் தி. ஜ. ர. வேறு விதமாக அபிப்பிராயப் படுகிறார். யோசிக்கும் வேளையில் பற்பல உண்மைகள் தட்டுப்படலாம் என்கிறார். அந்த யோசனைக் கதிர்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தால் மிகவும் ரஸமான கட்டுரைகளாகும் என்பதை இந்தக் கட்டுரைத் தொகுதியின் மூலம் நிரூபித்திருக்கிறார்.

பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை—18; விலை: ரூ. 1.

மூன்று கடிகார ஆர்டருக்கு ஒன்று இனாம்!

உயர் ரக லீவர் வாட்சுகள், ஸ்விஸ் தயாரிப்பு. 5 வருஷ உத்தரவாதம். இதுவரை இக் குறைந்த விலைக்குக் கொடுத்ததில்லை. ஸ்டாக்குகள் கொஞ்சமே உள்ளன.

இலவசம் மூன்று வாட்சுகள் ஆர்டருக்கு ஒரு கைக்கெடிகாரமும் இரண்டுக்கு ஒரு கோல்டு கேப் பவுண்டன் பேனாவும் ஒரு கடிகாரத்துக்கு ஒரு ஷீபர்ஸ் டிசைன் பவுண்டன் பேனாவும் இனாம். மேலும் ஒரு வெல்வெட் பெட்டியும் அழகான ஸ்ட்ராப்பும் இனாம்.

நெ.1.

சைஸ் 6½''

15 ஜுவல்ஸ் ஸ்டீல்பேக் கேஸ் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

நெ.2.

சைஸ் 6½''

15 ஜுவல்ஸ் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

நெ.3.

சைஸ் 10½''

வாட்டர் ப்ரூப்
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 48/-
15 ஜுவல்ஸ் க்ரோம் உயர் ரகம் ரூ. 52/-
17 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 55/-

நெ.4.

சைஸ் 8¾''

5 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 32/-
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 35/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-

நெ.5.

சைஸ் 10½''

13 சைஸ் க்ரோம் கேஸ் ரூ. 19/-
5 ஜுவல்ஸ் மிராஜ் ரோல்டுகோல்டு ரூ. 25/-
15 ஜுவல்ஸ் க்ரோம் ஸ்டீல்பேக் ரூ. 38/-
15 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ரூ. 40/-



இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ் ரூ. 19/-
இங்கிலீஷ் அலாரம் உயர் ரகம் ரூ. 21/-
ரயில்வே ரெகுலேட்டர் பாக்கெட்வாட்ச் ரூ. 13/-

PIONEER WATCH COMPANY
Post Box No. 11428, CALCUTTA-6

அறிமுகப் படுத்துகிறோம்.....

மைசூர் சோப்

தனிக் கட்டிகள்

சிறந்த சலவை சோப்

★

கலப்பட மற்றது, ஹானி யளிக்கும் மூலப் பொருள் களின் சேர்க்கையற்றது. மிகவும் பரிசுத்தமானது.

கஷ்டமில்லாமல் துணிகளை வெளுக்கிறது

நேரம், சிரமம், பணம், வேலை சகலத்தையும் மிச் சப் படுத்தி உங்களுக்குப் பரிபூரணத் திருப்தியை அளிக்கின்றது.

இன்றே ஒரு கட்டியை வாங்கிப் பாருங்கள்.

★

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி

பெங்களூர்



நல்ல
சிகரெட்
வாங்க
ஏன்
அதிக விலை கொடுக்கிறீர்கள்

50 விலை ரூ 1/4 ★ 10 விலை 3½ அணா
உள்ளூர் வரி அலாதி

ACI

இதர பிஸ்கோத்து
களின் தரத்தைத்
தீர்மானிக்கும்
மணமும்
குணமும்.

சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா



பாதிரியின் பிரார்த்தனை

பரிசுக் கதை

ஆசிரியர்: ஹென்ரி கார்னெட் ராட்கிளிப் (பிரிட்டன்) மொழிபெயர்ப்பு: வாஞ்சி

பாதிரி ரவரண்ட் டாம்லின்சன் கலேகாவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பதினைந்து வயது நிரம்பிய கலேகா ஒரு தேவ கன்னிகையைப் போல் அவருக்குத் தோன்றினாள்.

அராபியர்களிடையே அவ்வளவு அழகான பெண் இருப்பாள் என்று டாம்லின்சன் எதிர் பார்க்கவே இல்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் பிரயாணம் செய்து கொண்டிருந்த டாம்லின்சன் அப்போது திக்கான் நகரில் தங்கியிருந்தார். அங்கு எத்தனையோ இளம் பெண்களும் ஆடவர்களும் நடனம் செய்துகொண்டிருந்தார்கள். எனினும் மற்றப் பெண்களையோ ஆடவர்களையோ அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சுத்தையின் வயிற்றில் முத்து பிறப்பது போல் திக்கான் நகரில் கலேகா பிறந்திருப்பதாக அவருக்குத் தோன்றியது.

"அதோ நடனமாடிக் கொண்டிருக்கும் பெண்களில் அவள் யார்!" என்று கேட்டார் டாம்லின்சன் தமக்கு வழிகாட்டியாக வந்த அராபியனை.

அவன் பெயர் தீன். அந்தப் பிராந்தியத்தில் அவனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. ஒவ்வொருவருடைய குடும்ப விஷயமும் அவனுக்குத் தெரியும். தம்பதிகளின் இரகசியம், காதலர்களின் இரகசியம் எல்லாம் அவன் அறிந்ததுதான்!

"இந்தச் சிறுவயதிலேயே பார்ப்பவர்களையெல்லாம் மயக்கும் அந்தப் பெண் கலேகாவைத்தானே கேட்கிறீர்கள்! அவள் பெரிய குடும்பம் எதையும் சேர்ந்தவள் அல்ல. உமார் ஹெய்தான் ஒனதாலி என்ற ஏழையின் பெண். அவளுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் வாட்டசாட்டமாக ஒரு பயல் நிற்கிறானே, பார்த்தீர்களா! அவன் தான் அலிபக்ஷ். அவ்விருவரும் இரகசியக் காதலர்கள். என்ன நேர்ந்தாலும் அவனையே கல்யாணம் செய்து கொள்வதாகக் கலேகா அந்தரங்கமாகச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாளாம். இந்த வயதிலேயே அந்தப் பெண்ணுக்கு உள்ள துணிச்சலைப் பாருங்கள்! பல பெரிய மனிதர்களின் கவனத்தை இழுத்துள்ள இந்தப் பெண்ணின் காதல் எப்படித்தான் நிறைவேறப் போகிறதோ!" என்றான் தீன் சந்தேகத்துடன்.

ரவரண்ட் டாம்லின்சன், தீன் குறிப்பிட்ட இளைஞனைப் பார்த்தார். "பேஷ்! பொருத்தமான ஜோடி! இந்த இளம் காதலர்கள் சந்தோஷமாய் நீடூழி வாழ ஆண்டவன் அருள் புரியட்டும்!" என்று மனதுக்குள் பிரார்த்தித்தார் நல்ல இருதயம் படைத்த அந்தப் பாதிரி.

"திக்கானில் உள்ள ஜனங்களில் பெரும்பாலோரும் ஒனதாலி வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லவா!" என்றார் டாம்லின்சன்.

"ஆமாம், சாஹிப். அவர்கள் கல் எறிவதில் கெட்டிக்காரர்கள். இப்போது கற்களை எறிந்து பயிற்சி பெறுகிறார்கள். இங்கு மரண தண்டனை அடைந்தவர்களைக் கழுத்துவரையில் பூமியில் புதைத்து விடுவார்கள். பிறகு சிறிது தூரத்தில் பலர் நின்று அவர்களுடைய மண்டையைக் குறி வைத்துக் கற்களை எறிந்து அவர்களைக் கொல்லுவது வழக்கம்!" என்றான் தீன் நிதானமாக.

இக்கொடுமையைக் கேட்டதும் டாம்லின்சனின் உடல் நடுங்கியது.

"உண்மையாகவா! இது என்ன மிருகத்தனம்! என்ன காட்டு மிராண்டித்தனம்! என்ன அநாகரிகமான கொடுமை!" என்றார் டாம்லின்சன் ஆத்திரத்தோடு.

"இது எத்தனையோ நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்து வருகிறது, சாஹிப்!" என்று தீன் சமாதானம் சொன்னான்.

"இவ் விவரங்களை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனினும் அவை உண்மையாக இருக்கக் கூடும் என்று நான் நினைக்கவில்லை. அவ்விதம் ஒருவரைக் கொல்லுவது சரியா! அது கொடிய கொலை அல்லவா!"

இவ்வாறு சொல்லிக் கொண்டே டாம்லின்சன் மன வேதனையுடன் அந்த இடத்தை விட்டு அகன்றார். தீனும் அவரைப் பின் தொடர்ந்தான்.

நீதியற்ற, இரக்கமற்ற அந்தக் கொடிய வழக்கத்தை நிறுத்துவதற்கு வழி என்ன என்று டாம்லின்சனின் அன்பு உள்ளம் ஆராயத் தொடங்கியது. எனினும் அவர் அங்கேயே நிரந்தரமாக வசிப்பதாயின் அவ் விஷயமாக முயற்சிக்கலாம். மறு தினமே அந்த நகரை விட்டுப் புறப்பட வேண்டிய டாம்லின்சன் அதையெல்லாம் பற்றி மனத்தை வேதனைக்கு உள்ளாக்கிக் கொள்வதால் என்ன பலன் ஏற்பட முடியும்!

* * *

ஒரு வருஷம் கழித்து டாம்லின்சன் தமது யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்புகையில் திக்கான் வழியாகவே செல்ல நேர்ந்தது. அப்

போது அவர் அந்த நகரில் இரண்டு மூன்று தினங்கள் வரையில் தங்கினார்.

அவ்வமயம் அங்கு பிரிட்டிஷ், அரபுத் துருப்புகளின் தளபதியான மேஜர் கிராண்ட் முகாம் போட்டிருந்தார்.

அராபியர்களின் அன்பைப் பெறுவது என்பது சுலபமான காரியம் அல்ல. ஆனால் மேஜர் கிராண்ட் தம்முடைய புத்திசாலித்தனத்தினாலும் தந்திரத்தினாலும் அராபியர்களின் அன்பைச் சம்பாதித்துக் கொண்டிருப்பதாக எல்லாரும் ஆச்சரியத்துடன் கூறினார்கள்.

டாம்லின்சன் மேஜர் கிராண்டுடன் அவரது ஜாகையிலேயே தங்கினார். எனினும் டாம்லின்சன் கிராண்டுடன் பேச முற்பட்ட போது தான் வெளித் தோற்றத்திலும் குணத்திலும் கொள்கையிலும் அவருக்கும் தமக்கும் வெகு தூரம் இருப்பதை உணரலானார்.

பல மாதங்களாகத் தம்முடைய மனத்தை உறுத்திக் கொண்டிருந்த ஒரு விஷயத்தைப் பற்றி டாம்லின்சன் கிராண்டுடன் விவாதிக்காமல் இருக்க முடியவில்லை.

"நான் சென்ற தடவை இந்த ஊருக்கு வந்திருந்த போது அராபிய ஆடவர்களும் பெண்களும் ஆடிய விசித்திர நடனம் ஒன்றைப் பார்த்தேன். அவர்களில் ஒரு பெண்ணும் இளைஞரும் என் மனதை வெகுவாகக் கவர்ந்து விட்டனர். அவர்கள் நடனம் செய்த வண்ணம் ஒரு பாறையைக் குறியாக வைத்துக் கற்களை வீசி எறிந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கல்லெறி நடனத்தின் கருத்தைப் பற்றி, எனக்கு வழிகாட்டியாக வந்த அராபியன் கூறியதைக் கேட்டதும் நான் திடுக்கிட்டு விட்டேன். அவன் கூறிய விவரங்களை இப்போது நினைத்தாலும் எனக்கு நடுக்கம் ஏற்படுகிறது."

இவ்விதம் டாம்லின்சன் கூறியதைக் கேட்ட மேஜர் கிராண்ட் மெதுவாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு டாம்லின்சனைப் பரிகாசம் செய்வதுபோல் இருந்தது. இது சிரிக்கக்கூடிய விஷயமா! டாம்லின்சனுக்கு உள்ளூறக் கோபம் பொங்கியது.

"குற்றம் செய்தவர்களை எல்லோரும் வேடிக்கை பார்க்கக் கற்களால் அடித்துக் கொல்லுவதா! இதைக் காட்டிலும் கொடுமையான காட்டுமிராண்டித் தனத்தைக் கற்பனை செய்து கொள்வது முடியாத காரியம்" என்றார் டாம்லின்சன் தொடர்ந்து.

"அதனால் என்ன! குற்றம் செய்தவர்களைக் கற்களால் அடித்துக் கொல்லுவது ஒளதாலி வகுப்பினரின் பண்டைய வழக்கம். அந்த வழக்கத்தை அனுஷ்டிப்பதில் தவறு என்ன!"

இவ்வாறு மேஜர் கிராண்ட் ஒளதாலி வகுப்பினரின் சார்பில் பேசியதைக் கேட்டதும் டாம்லின்சனின் ஆத்திரம் அதிகமாயிற்று.

"பண்டைய வழக்கமோ, புது வழக்கமோ, எதுவாக இருந்தால் என்ன! பண்டைய வழக்கம் என்பதற்காக மிருகத்தனமான காரியத்தை அனுமதிப்பதா! இந்த அட்டூழியத்தை அடியோடு ஒழிக்க இங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் ஏன் முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது!" என்று கேட்டார் டாம்லின்சன்.

"இத்தகைய விஷயங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகள் தலையிடக் கூடாது. சில கற்களால் அடிபட்ட பின்னரும் கூட குற்றவாளி உயிருடன் இருந்தால், அவன் குற்றவாளி அல்ல என்று அல்லா தீர்ப்புக் கூறிவிட்டதாக ஜனங்கள் அந்த கைதியை விடுதலை செய்து விடுவதும் உண்டு."

இவ்வாறு மேஜர் கிராண்ட் கூறிய சமாதானம் டாம்லின்சனின் ஆத்திரத்துக்குத் தூபம் போடுவது போல் இருந்தது.

"இந்த மிருகத்தனமான அநாகரிக வழக்கத்தை நீங்கள் ஆதரிப்பது போல் அல்லவா பேசுகிறீர்கள்!" என்றார் டாம்லின்சன்.

"சாத்தியமில்லாத காரியத்தைப் பற்றி விவாதிப்பதில் என்ன பலன்! அனுஷ்டான சாத்தியமாக இருக்க வேண்டும், பேச வேண்டும். இந்தப் பிராந்தியத்தில் மரங்களுக்குக் கிராக்கி அதிகம். எனவே, தூக்கு மேடைகளுக்காக மரங்களை வீணாக்குவது முடியாத காரியம். இங்கு குற்றவாளியைச் சுட்டுக் கொல்லுவது என்பதையும் நினைப்பதற்கில்லை. ஏனெனில் இங்கு தோட்டாக்கள் தங்கம் வெள்ளிக்குச் சமமாகக் கருதப்படுகிறது. எனவே மரண தண்டனையைக் கற்களின் மூலம் நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது! நீங்கள்தான் சொல்லுங்களேன்! கற்களை எறியாமல் குற்றவாளிகளின் கழுத்தை நெரித்துக் கொல்லலாம் என்பது உங்கள் அபிப்பிராயமா!"

குலை நடுங்கச் செய்யும் இவ்விஷயத்தைப் பற்றி மேஜர் கிராண்ட் பரபரப்போ, இரக்கமோ, ஜீவ காருண்ய உணர்ச்சியோ எதுவுமின்றிப் பேசியது டாம்லின்சனுக்கு விசித்திரமாகத் தோன்றியது. இந்த உலகில் மேஜர் கிராண்டைப் போன்ற மனித ஜன்மம் இருக்கக் கூடும் என்று டாம்லின்சன் எண்ணியதே இல்லை.

"மரண தண்டனையையே நான் வெறுக்கிறேன்" என்றார் டாம்லின்சன் முகத்தை அப்

பால் திருப்பிய வண்ணம். பாவ ஜன்மமான கிராண்டைப் பார்க்கக் கூட அவர் விரும்பவில்லை!

"இங்குள்ள அராபியர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா! நம்மை யெல்லாம் அவர்கள் காட்டு மிராண்டிகள் என்று எண்ணுகிறார்கள். குற்ற வாளிகளை மாதக் கணக்கிலும் வருஷக்கணக்கிலும் சிறைகளில் அடைத்துத் துன்புறுத்துவதைக் காட்டிலும் கொடிய சித்திரவதை வேறு எதுவும் இல்லை என்பது அவர்களுடைய அபிப்பிராயம். இதற்குத் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்!" என்றார் கிராண்ட் டாம்லின்சனைப் பார்த்து.

இதற்கு என்ன பதில் கூறுவதென்று டாம்லின்சனுக்குத் தெரியவில்லை. அராபியப் படைகளில் ஒளதாலியர் வகுப்பைச் சேர்ந்தவர்களே பெரும்பாலோராக இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய பழக்க வழக்கங்கள் காட்டு மிராண்டித்தனமாக இருந்தும் அவற்றை ஒழிக்கும் துணிச்சல் கிராண்டுக்கு இல்லை. அதாவது நியாயம், தர்மம் இவற்றைக் காட்டிலும் சுயநலமே, சமய சஞ்சீவித்தனமே முக்கியமானவை என்பது கிராண்டின் சித்தாந்தம் என்று டாம்லின்சன் முடிவு செய்தார்.

* * *

ரவரண்ட் டாம்லின்சன் மாலையில் உலாவுவதற்காக வெளியே சென்றார். சிறிது தூரத்துக்கு அப்பால் உள்ள மைதானத்தில் சிலர் ஒரு மனிதன் நிற்கக் கூடிய ஆழத்துக்கு இரண்டு குழிகளைத் தோண்டிக் கொண்டிருந்தார்கள். சிறிது தூரத்தில் ஒரு மூட்டை கற்கள் கொட்டிக் கிடந்தன.

டாம்லின்சன் மனவேதனை தாங்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டு, அவ்விடத்தை விட்டுத் திரும்பினார். எதற்காக அந்தக் குழிகளை வெட்டுகிறார்கள் என்பதும், அந்தக் கற்கள் அந்த இடத்தில் ஏன் கொட்டப் பட்டிருக்கின்றன என்பதும் அவருக்குத் தெரியாத விஷயம் அல்லவே!

டாம்லின்சன் திரும்பி வந்தபோது மேஜர் கிராண்ட் இக்கான் தலைவரான அப்துல்கான் ஒளதாலியுடன் பேசிக் கொண்டிருந்தார். இருவரும் புகை பிடித்துக் கொண்டும் 'விஸ்கி' அருந்திக் கொண்டும் இருந்தார்கள். அவர்களைப் பார்க்கவே டாம்லின்சனுக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது.

அவர் நிடீரென்று மேஜர் கிராண்ட் பக்கம் திரும்பினார்.

"மேஜர்! சிறிது தூரத்தில் இரண்டு குழிகளைத் தோண்டியிருக்கிறார்கள். அவற்றில் யாரைப் புதைத்துக் கற்களால் அடித்துக் கொல்லப் போகிறார்களோ, தெரியவில்லை. இதை நீங்கள் நிறுத்திவிட வேண்டும். இந்தக் கொடிய தண்டனை நிறைவேறாமல் தடுத்துவிட வேண்டும்" என்றார் டாம்லின்சன் படபடப்பாக.

டாம்லின்சனுக்கு ஏக காலத்தில் ஆத்திரம் பொங்கியது; துக்கமும் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

அதுவரையில் சிரித்துக்கொண்டு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்த இக்கான் தலைவர் அப்துல் கான் ஒளதாலியின் முகம், ரவரண்ட் டாம்லின்சன் கூறியதைக் கேட்டதும் அடியோடு மாறி விட்டது; அவரது முகத்தில் கோபமும் வெறியும் தாண்டவமாடின.

"இவ்விஷயத்தில் நான் எதுவும் செய்ய முடியாது. இதோ இருக்கும் இக்கான் தலைவர் மேற்படி வழக்கைத் தீர விசாரித்தே மரண தண்டனை விதித்திருக்கிறார். தகுந்த சாட்சியங்களின் மீதே அத் தண்டனை விதிக்கப் பட்டது. எனவே குற்றவாளிகளை இனி யாராலும் காப்பாற்ற முடியாது. அல்லாதான் காப்பாற்ற முடியும்" என்றார் கிராண்ட்.

உடனே இக்கான் தலைவர் அப்துல்கானின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அவர் கிராண்டைச் சிநேக பாவத்துடன் பார்த்தார்.

பிறகு அப்துல்கான் டாம்லின்சனைப் பார்த்துச் சொன்னார்:

"சாஹிப்! குற்றவாளிகள் இருவரும் மன்னிக்க முடியாத பெரும் குற்றம் செய்திருக்கிறார்கள். பெண் குற்றவாளியின் தந்தை அவளைக் கௌரவம் வாய்ந்த ஒரு பெரிய செல்வந்தரான வியாபாரிக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக வாக்களித்தார். ஆனால் அந்தப் பெண்ணோ ஓர் ஏழை வாலிபனைக் காதலிப்பதாகக் கூறி, 'அவனைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்' என்று சொல்லி விட்டாள். எனவே அவளுடைய தந்தை அடங்காப்பிடாரியான அந்தப் பெண்ணை ஓர் அறையில் அடைத்துப் பூட்டி விட்டார். அந்தப் பெண் பல நாட்கள் வரையில் சாப்பிடாமல் அடம் பிடித்தாள். கடைசியில் அந்த இளைஞன் எப்படியோ ஒருவருக்கும் தெரியாமல் அறைப் பூட்டை உடைத்துக்கொண்டு அந்தப் பெண்ணுடன் ஓடிவிட்டான். இருவரும் ஒரு குகையில் ஒளிந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பிடிப்பதற்காக ஒட்டகங்களில் நாலாபுறமும் ஆட்கள் சென்றனர். சிலர் அவ்விருவரையும் குகையில் கண்டு பிடித்தபோது அந்தப் பெண்ணும் இளைஞனும் தங்களைப் பிடிக்க வந்த ஆட்களுடன் புலிகளைப் போல் கோரமாகச் சண்டை

செய்து அவர்களைக் காயப்படுத்தி விட்டனர். அவர்கள் செய்த குற்றம் பெரியது, மன்னிக்க முடியாதது. அக் குற்றத்துக்கு மரண தண்டனை தான் நியாயமானது" என்றார் அப்துல் கான்.

இச் சந்தர்ப்பத்தில் ரவரண்ட் டாம்லின்சனின் ஹிருதயத்தில் ஒரு பயங்கரமான சந்தேகம் உண்டாயிற்று. "அவர்களுடைய பெயர் என்ன ?" என்று கேட்டார்.

"பெண்ணின் பெயர் கலைகா ; இளைஞனின் பெயர் அலி பக்ஷ்" என்றார் அப்துல்கான்.

அவ்வளவுதான் ! டாம்லின்சனுக்குத் தம்மை ஏக காலத்தில் நூறு தேள்கள் கொட்டுவது போலிருந்தது. அவர் தம்மை அறியாமல் 'ஹா' என்று அலறினார்.

"அவர்களை எனக்குத் தெரியும். சென்ற தடவை இங்கு நான் வந்திருந்தபோது அவர்களைப் பார்த்தேன். அவர்கள் குழந்தைகள் அல்லவா ! அவர்களுக்கா இந்தக் கொடிய தண்டனை ! இங்கிலாந்தில் இப்படி நடந்திருந்தால்......"

மேற்படி வாக்கியத்தை டாம்லின்சன் முடிப்பதற்கு முந்தியே மேஜர் ரொண்ட் இடைமறித்தார்.

"ரவரண்ட் டாம்லின்சன் ! தாங்கள் இப்போது இங்கிலாந்தில் இல்லை, நிக்கானில் இருக்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கு நடக்கும் விஷயங்களில் தலையிட்டால் பெரும் துன்பம் ஏற்படும். அதனால் கோரமான மதப் போராட்டமும் பூசல்களும் உண்டாகி விடும்" என்று ரொண்ட் உரத்த குரலில் டாம்லின்சனைக் கடிந்து கூறினார்.

* * *

மேஜர் ரொண்ட் அல்லது அப்துல் கான் இவர்களின் உதவியின்றி, அந்த இளம் காதலர்களின் உயிரைக் காப்பாற்ற முடியாது என்பது டாம்லின்சனுக்குத் தெரியும். எனினும் அவர் தம்மால் எவ்வளவு முயற்சி செய்ய முடியுமோ, அதெல்லாம் செய்து பார்த்தாகி விட்டது.

அவ்விஷயத்தில் அப்துல் கான் இரக்கமற்ற பிடிவாதத்துடன் இருந்ததைக் குறித்து டாம்லின்சன் வருத்தப்படவில்லை. ஆனால் நாகரிகமுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ரொண்ட் கூட தமது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்காததைக் குறித்து டாம்லின்சனின் மனம் படாதபாடு பட்டது. தமது சமூகத்தில், அராபியர்களின் காட்டு மிராண்டித் தனமான வழக்கத்தை ஆதரிக்கும் ஒருவர் இருப்பதை டாம்லின்சனால் நம்பவே முடியவில்லை.

அன்றிரவு டாம்லின்சன் பயங்கரமான கனவுகள் கண்டார். சிலர் கற்களை எறிந்து தேங்காய்களை உடைப்பது போல், அலிபக்ஷ், கலைகா இவர்களின் தலைகளைச் சிதற அடிப்பதாக அவருக்குத் தோன்றியது. அச்சமயத்தில் கூட காதலர் இருவரும் புன்முறுவலுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் கற்களால் அடிபட்டதால் எங்கும் உதிர வெள்ளம் ஓடியது. டாம்லின்சனைப் பார்த்தவண்ணம் அவ்விருவரும் இறுதியாகத் தங்கள் கண்களை மூடினர்.

டாம்லின்சன் கனவு கலைந்து திடுக்கிட்டு எழுந்தார்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது. அந்த வேளையில்தான் ஓனதாலி வகுப்பினர் கல்லெறித் தண்டனையை நிறைவேற்றுவது வழக்கம்.

அப்போது ஒலித்த பேரிகை டாம்லின்சனின் செவிகளுக்கு நாராசமாக இருந்தது. கல்லெறி ஆரம்பமாகப் போகிறது என்பதை அவர் தெரிந்து கொண்டார்.

அவர் மனம் துடித்தது. பேரிகைகளின் முழக்கமும் ஜனங்களின் ஆரவாரமும் டாம்லின்சனின் காதைப் பிளந்தன. குற்றவாளிகளின் தலையை நோக்கி ஒவ்வொரு கல் எறியப்பட்ட போதும் ஜனங்கள் வெறி பிடித்து உச்ச ஸ்தாயியில் ஆரவாரம் செய்தனர்.

டாம்லின்சன் தமது காதுகளைப் பொத்திக் கொண்டார்.

"ஆண்டவனே ! எல்லாம் வல்ல இறைவனே ! கருணையே உருவான கடவுளே ! இந்த இளம் காதலர்களைக் காப்பாற்றுவாயாக ! இந்தப் பயங்கரமான தண்டனையிலிருந்து அவர்கள் உயிர் தப்பும்படியான அற்புதம் தாங்கள் ஒருவரால்தான் நிகழக்கூடும் !" என்று டாம்லின்சன் மனம் உருகப் பிரார்த்தித்த வண்ணம் இருந்தார்.

கடைசியில் கல்லெறி நின்று விட்டது என்பதற்கு அறிகுறியாகப் பேரிகை முழக்கம் நின்றது. அதற்குமுன் பிரமாத ஆரவாரம் செய்த ஜனங்கள் சந்தடியின்றிக் கலையத் தொடங்கினர்.

டாம்லின்சனின் பிரார்த்தனை கடவுளின் செவிகளில் விழவில்லை ! இளம் காதலர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை நிறைவேறி விட்டது !

* * *

டாம்லின்சன் கட்டிலில் போய்க் குப்புறப்படுத்துக் கொண்டு விம்மினார்.

திடீரென்று ஏதோ சந்தடி கேட்டு எழுந்திருந்தார். மேஜர் ரொண்டின் வேலைக்காரனான அராபியன் மூச்சுவாங்க ஓடி வந்தான்.

"எல்லாம் முடிந்து விட்டதா!" என்றார் டாம்லின்சன். கடவுளிடம் தளரா நம்பிக்கைகொண்ட டாம்லின்சனுக்கு இன்னும் கூட இளம் காதலர்கள் பிழைத்து விட மாட்டார்களா என்ற நம்பிக்கை மனத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது !

"தீர்ந்து விட்டது. எல்லாம் முடிந்து விட்டது" என்றான் அராபியன்.

டாம்லின்சன் வாயடைத்துப் போய் நின்றார்.

"ஓனதாலி நாய்கள்...துரோகம் செய்து விட்டார்கள். எனக்குத் தாய் தந்தை எல்லாம் மேஜர் கிராண்ட்தான். இருந்தாலும் அவர் குழந்தையைப் போல இருக்கிறார். வஞ்சகம் சூது ஒன்றும் அவருக்குத் தெரியாது.

"அலிபக்ஷ், சுலேகா மீது குறி தவறாமல் கற்களை எறிவோர் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் கொடுப்பதாக மேஜர் வாக்களித்தார். ஆனால் குறி தவறியவர் ஒவ்வொருவருக்கும் ஆறுதல் பரிசாக ஒரு துப்பாக்கித் தோட்டா கொடுப்பதாய்க் கூறினார். என்னை மேஜர் கிராண்ட் கேட்டிருந்தால்நான் அவருக்கு யுக்தி சொல்லிக் கொடுத்திருப்பேன். இந்தப் பிராந்தியத்தில் துப்பாக்கித் தோட்டா தங்கம் அல்லது வெள்ளியைப் போல. ஆறு ரூபாய் கொடுத்தால்தான் ஒரு தோட்டா கிடைக்கும். எனவே தோட்டாவுக்கு ஆசைப் பட்டுக் கொண்டு ஒருவராவது குறி பார்த்துக் கல்லை எறியவில்லை. அலிபக்ஷும் சுலேகாவும் உயிர் தப்பி, எல்லோர் முன்னிலையிலும் கை கோர்த்துக் கொண்டு குதூகலமாகச் சென்று விட்டார்கள். அல்லா அவர்களைக் காப்பாற்றியதாகப் பாமர ஜனங்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

"எனினும் அலிபக்ஷும் சுலேகாவும் உயிர் தப்பியது பலருக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. சுலேகாவினுடைய தந்தையின் எதிரில், அவளை யாருக்கு விவாகம் செய்து கொடுப்பதாக அவளுடைய தந்தை வாக்குக் கொடுத்திருந்தாரோ அந்தச் செல்வந்தருக்கு எதிரில் கள்ளக் காதலர் இருவரும் நிர்ப்பயமாகக் கைகோர்த்துக் கொண்டு போவதை நியாய புத்தியுள்ள யார்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்!

"அவ்விருவரும் சிரித்துக் கொண்டு போவது எங்கள் எல்லோரையும் ஏளனம் செய்வதுபோல் இருக்கிறது; உலகத்தையே பார்த்துச் சிரிப்பது போல் இருக்கிறது; நீதியை அவமதிப்பதுபோல் இருக்கிறது.

"அக்கிரமம், அக்கிரமம்! குழந்தையைப்போல் கபடமற்ற மேஜர் கிராண்டைப் பண ஆசை கொண்ட ஓனதாலிகள் ஏமாற்றி விட்டார்கள்."

இவ்வாறு அந்த அராபியன் படபடப்புடன் கூறியதைக் கேட்ட டாம்லின்சனின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

"ஆண்டவனே! என் பிரார்த்தனை வீண் போகவில்லை. உன் கருணையே கருணை! இளம் காதலர்கள் நீடூழி வாழட்டும்! அராபியர்களைத் திருப்தி செய்வதற்காக, இரக்கமற்ற கொடிய ஹிருதயம் படைத்தவரைப் போல் பாசாங்கு செய்யும் இந்தப் புண்ணியவானான மேஜர் கிராண்டும் அவரது குடும்பத்தினரும் நீடூழி வாழ அருள் புரிவாயாக!"

ஆனந்தக் கண்ணீர் ததும்ப இவ்வாறு பிரார்த்தனை செய்யும் டாம்லின்சனைப் பார்த்த அராபியன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

மனைவி :—'சமையல் செய்வது எப்படி?' என்ற புஸ்தகம் ஒன்று வாங்கிக் கொடுங்கள்!

கணவன் :—வாங்கித் தருகிறேன். முதலில் 'அடுப்பு மூட்டுவது எப்படி?' என்று ஏதாவது புஸ்தகம் இருந்தால் அதில் ஒன்று வாங்கிக் கொள்!



நியூ டெல்லி, பிளானிங் கமிஷன் ஸ்ரீ R. சுவாமிநாதன் அவர்களது குமாரத்தி சௌபாக்யவதி ராதாமணிக்கும் மேட்டூர் டாம், டெபுடி அகௌண்டெண்ட் ஸ்ரீ T. S. கிருஷ்ணமூர்த்தி அவர்களது குமாரன் சிரஞ்சீவி காப்டன் T. K. நாகராஜன் (ஆர்டிலெரி)க்கும் சென்ற ஜூன் மாதம் 25-ம் தேதி கும்பகோணத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க ராதாமணி - நாகராஜன்.

CBG/12R.
அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் - நாள் முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பளவென்று ஜொலிக்கும் புதுமைக்கு காஷ்மீர் புக்கே டால்கம் பவுடரை உங்கள் மேல் தாராளமாகத் தூவுங்கள். அது அதிக க்கசிவை உறிஞ்சுகிறது . . . எரிச்சலையும் அறிப்பையும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக் குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள்முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மாணிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806லிருந்து கோல்கேட் உயர்ந்த ரகத்திற்குப் பெயர்போனது.

அருவிக்கரை ஆசிரமம்

ஆசிரியர்: சுதர்சன்

மொழிபெயர்ப்பு: ரா. வி.

14. மூர்ச்சையானாள்!

சகோதரா! ரூப்சந்த் மிகவும் கலவரமடைந்து கலங்கிப் போயிருந்தார். அன்புக்கன்பான மனைவியை மூன்று நாட்களாகக் காணவில்லை என்றால் பதற்றம் ஏற்படுவது இயல்புதானே? அவர் ஒரு வேலையும் ஓடாமல் பித்தனைப் போலப் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். மூன்று நாட்களுக்குப் பின் தேவகியைப் பார்த்த அவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை கூறமுடியாது. 'போனது போனது தான். இனித் திரும்பக் கிடைக்கப் போவதில்லை' என்று எண்ணி மூழ்கிப் போய்விட்டதாகத் தீர்மானித்த பணம் எதிர்பாராத விதமாகத் திரும்பவும் கிடைத்து விட்டால் ஒருவன் எவ்வளவு சந்தோஷப் படுவான்? அவ்வளவு சந்தோஷப் பட்டார் ரூப்சந்த்.

அவருக்குத் தேவகியின் மேலோ அல்லது தேவகி சொன்ன வார்த்தைகளின் மீதோ லவலேசங்கூடச் சந்தேகம் உண்டாகவில்லை. தேவகி தம்மிடம் பொய் சொல்லுவாள் என்ற நினைப்பே அவர் உள்ளத்தில் எழவில்லை. அவள் சொன்னவற்றை அப்படியே வேதவாக்கைப் போல் நம்பி விட்டார். அவள் பேச்சுக்கு இடையே குறுக்கிட்டு, 'ஏன்! என்ன?' என்று அவர் ஒரு சின்னக் கேள்விகூடக் கேட்கவில்லை. ஒருவர் வார்த்தையை நூற்றுக்கு நூறு உண்மையென்று நம்பிவிட்டபின் குறுக்குக் கேள்விகளுக்கு இடம் ஏது? ஆகவே, அவருக்கு அவளுடைய வார்த்தைகளில் பூரண திருப்தி ஏற்பட்டு விட்டது. ஆனால்......?

தேவகியின் திருப்திக்கும் அமைதிக்கும் அடியோடு பங்கம் ஏற்பட்டு விட்டது. அவள் எப்பொழுதும் கவலையே உருவாக இருக்கலானாள். அவள் உள்ளத்தைப் பயமும் பீதியும் ஆட்கொண்டன. 'நாம் ஏன் அவரிடம் போய் இப்படி வீணில் பொய் பேசினோம்?' என்று எண்ணி மனம் நைந்தாள். 'நான் என் தோழி கைத்ரேயின் நான்ஸியின் வீட்டில் இருந்தேன்' என்று அவள் சொன்ன அந்தச் சொற்கள் ஒவ்வொரு நிமிஷமும் அவளுடைய மூளையைத் தீச் செயலின் விளைவைப் போலக் குடைந்து கொண்டிருந்தன. 'சொன்ன சொல்லைத் திரும்பப் பெற முடியாதா? திரும்பப் பெற முடிந்து விட்டால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!' என்று அவள் அடிக்கடி எண்ணுவாள். ஆனால் கண்ணிலிருந்து உதிர்ந்த கண்ணீரும், கூட்டிலிருந்து விடுபட்ட குருவியும் எங்கேயாவது திரும்பி வந்தது உண்டா? வேடன் வில்லிலிருந்து வெளியேறிய அம்பு மறுபடியும் அவன் கைக்கு வந்தது உண்டா? அதே போலத் தானே வாயிலிருந்து வெளியேறிய சொற்களும்? அவள் உள்ளக் கடலைச் சிந்தனை அலைகள் மலை மலையாக எழும்பிக் கொந்தளிக்கச் செய்து விட்டன.

ஆகவே தேவகி, "அவர் காலடிகளில் விழுந்து வணங்கி நம் தவறை ஒப்புக்கொண்டு விட்டால் என்ன என்று தோன்றுகிறது. அவர் அன்பே உருவானவர். உள்ளத்தில் கருணைப் பெருக்கு நிறைந்தவர். கட்டாயம் என்னை மன்னித்து விடுவார். என்ன, நான் உண்மையைச் சொல்லி அவரிடம் மன்னிப்புக் கோரட்டுமா?" என்று என்னை அடிக்கடி ஆலோசனை கேட்டாள். ஆனால் நான் ஒவ்வொரு தடவையும் ஏதாவது மாற்றுப் போக்குச் சொல்லி

அவனுடைய அந்த நல்லெண்ணத்தை அடியோடு அடக்கி வந்தேன்.

"இனிமேல் நீங்கள் ஏதாவது பேச்சை மாற்றினால் அது பயங்கரப் பிழையாக உருத்தரித்துவிடும். அவருக்கு இப்பொழுது உங்கள் மீது எள்ளளவும் சந்தேகம் இல்லை. இதைச் சொல்லி விட்டால் கட்டாயம் உங்கள்மீது சந்தேகம் பிறந்துவிடும். அந்தச் சந்தேகம் உங்கள் வாழ்க்கையையும் வாழ்க்கை இன்பத்தையும் விழுங்கி ஏப்பமிட்டுவிடும். காட்டாறு கர்ஜனை புரிந்து கொண்டு முன்னேறி வரும் தன் அலைகளைக் கொண்டு பசுமை மிக்க வயல்களை விழுங்கித் தண்ணீர்க் காடாகச் செய்து விடுவதில்லையா? அதுபோல ஏதாவது ஒன்றுக் கொன்று நேர்ந்து விட்டால் அப்புறம் நீங்கள் என்ன செய்வீர்கள்? அப்புறம் உங்கள் கதி என்ன ஆகும்? பேய் பிசாசை வேண்டுமானாலும் ஓட்டி விடலாம். ஆனால் பெண்கள் மீது சந்தேகம் உதித்துவிட்டால் அப்புறம் அதை யாராலும் அகற்ற முடியாது; அசைக்க முடியாது. ஆகவே, நீங்கள் பேசாமல் இருப்பது தான் உத்தமம்" என்று சொல்லி அவன் மனத்தை மாற்றி விடுவேன்.

இப்பொழுது நினைத்துப் பார்த்தால், 'இந்தத் துர்ப்போதனையை எதற்காக நாம் அவனுக்குச் செய்தோம்?' என்று தோன்றுகிறது. ஆனால் நாம் செய்த அந்தப் பிழை அப்படியே அடங்கி விட்டால்தான் எவ்வளவோ நன்றாயிருக்குமே! அது தான் இல்லை. அநேகமாக நாங்கள் இம்மாதிரி ஏதாவது பேசிக் கொண்டிருக்கும் பொழுது ரூப்சந்த் உள்ளே வந்துவிடுவார். நானும் தேவகியும் என்ன இருந்தாலும் அநுபவமற்றவர்கள்தானே? அவர் உள்ளே நுழைந்ததும் மேலே பேச்சை எப்படி மாற்றித் தொடருவது என்று தெரியாமல் பேந்தப் பேந்த விழிப்போம். பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லத் தெரிய வேண்டும் என்பது எவ்வளவு அநுபவ பூர்வமான உண்மை! எங்களுக்கோ பொய் பேசத் தெரிந்திருந்தது. ஆனால் அதை, அதாவது சொன்ன பொய்யை மறைக்கத் தெரியவில்லை. 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான்' என்று சாதிக்கும் சக்தியும் எங்களிடம் குறைவாக இருந்தது. ஆகவே, ரூப் சந்தின் தலையைக் கண்டதும் நாங்கள் வாய் மூடி மௌனியாகி விடுவோம். ஏதோ செய்யத் தகாத பெரிய தீச் செயலைச் செய்துவிட்டது போலவும், எதையோ திருடிவிட்டது போலவும் எண்ணித் திகைத்துப் போய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழிப்போம். ரூப்சந்தைக் கண்டதும் எங்கள் கண்கள் கவிழ்ந்து விடும்; முகம் சிவந்து விடும்; நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டு ஊமையாகி விடும். அந்நிலையிலும் நாங்கள் எங்கள் உள்ளத்து வியாகூலத்தை மறைக்க முயலுவோம். தொழில் நுணுக்கம் தெரியாத திருடன் முதன் முதலாகத் திருடத் தொடங்கும்பொழுது, தன் திருட்டை மறைக்கும் முயற்சியில் தன் திருட்டைத் தானே வெளியிட்டு விடுவான். அவனைப் பிறர் பார்த்துப் பிடிக்க வேண்டும் என்பதில்லை. அதே போல், திருடத் தெரிந்தும் தப்பத் தெரியாத திருடனைப் போல் நாங்கள் இருவரும் இருந்தோம். எங்கள் தவிப்பை அறிந்த ரூப் சந்துக்கு எங்கள் மீது சிறுகச் சிறுக சந்தேகம் தட்டத் தொடங்கியது. அவருடைய சந்தேகம் அதிகமாக ஆக எங்களை அச்சம் ஆட்கொண்டது.

இந்தச் சந்தேகம் சில நாட்கள் வரை சந்தேகமாகவே இருந்தது. பிறகு அது நம்பிக்கையாகப் பரிணமித்துவிட்டது. ஒரு நாள் எங்கேயோ கடைத் தெருவில் கைத்ரேயின் நாஸியும் ரூப்சந்தும் ஒருவரையொருவர் தற்செயலாகச் சந்தித்து விட்டனர். கிட்டத் தட்ட அரைமணி நேரம் அவர்களிருவருக்கும் இடையே சம்பாஷணையும் நடந்திருக்கிறது. அதன் பலனாக வீடு வந்ததும் ரூப்சந்த் நாகத்தைப் போலச் சீறத் தொடங்கி விட்டார். கோபம் கொதித் தெழவே, அவர் மூக்குப் புடைத்து விட்டது. கண்கள் தீப் பொறியைக் கக்கத் தொடங்கி விட்டன. தேவகியைச் சுட்டெரித்து விடுபவர் போலப் பார்த்துக் கன கடுமையான குரலில், "தேவகி! நீ இப்படி நடந்து கொள்வாய் என்று நான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. நான் உன்னை உந்தத நோக்கம் படைத்தவளாக, தெய்வத்துக்குச் சமானமானவளாக மதித்து வந்தேன். நான் உன் மீதும் உன் கற்பின் மீதும் ஆணை வைத்துப் பேசி வந்தேன். 'உலகத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். இதுமட்டும் நடக்காது' என்று இன்றுவரை இறுமாந்திருந்தேன். ஆனால் பெண்ணை நம்புவது

ஹோட்டலில் சாப்பிடுபவர் (சர்வரைப் பார்த்து:—என்ன பஜ்ஜி கொண்டு வந்து வைத்திருக்கிறாய்?

சர்வர்:— வாழைக்காய் பஜ்ஜி, ஸார்!

சாப்பிடுபவர்:—என்ன! நிஜமாகவா? கண்டைக்காய் பஜ்ஜி அல்லவா கொடுத்திருக்கிறீர்கள்!

முதல்தரமான முட்டாள்தனம் என்பது இன்றுதான் தெரிய வந்தது" என்றார்.

நஞ்சுள்ள நாகத்தின் நஞ்சு நிமிஷத்துக்குள் உடல் முழுவதும் ஓடி ஒவ்வொரு மயிர்க்காலிலும் பரவிவிடும் அல்லவா? அதே போல, ரூப்சந்தின் அந்தச் சொற்கள் தேவகியின் ஒவ்வொரு ரத்தத் திவலையிலும் பரவிவிட்டன.

அவர் சொன்ன அந்தச் சொற்கள் சொற்களாகவா இருந்தன? அம்புகளாக அல்லவா இருந்தன! தேவகியினால் வாய் திறந்து ஒன்றும் பேச முடியவில்லை. சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவள் மெதுவாக எழுந்தாள். ஆனால் அடுத்த கணமே தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள். தேவகி அப்படி மூர்ச்சையாகிக் கீழே விழுந்தது அவள் தன் குற்றத்தைத் தானே ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகத் தோன்றியது.

15. கோரக் கொலை

சகோதரா! தேவகிக்கு மூர்ச்சை தெளிந்து தன் நினைவு வந்த பொழுது ரூப்சந்த் அங்கே இல்லை. அவள் மேஜையண்டை ஓடினாள். அங்கே அவள் பெயருக்கு ஒரு கடிதம் காத்திருந்தது.

தேவகி!

நீ என் மனத்தை முறித்து விட்டாய். நான் பாரத நாட்டுப் பெண்மணியின் மீது பரிபூரணமான பக்தியும் சிரத்தையும் கொண்டிருந்தேன். நான் அவளை வழிபடும் தெய்வமாகவே எண்ணி வணங்கிப் பூஜித்து வந்தேன் என்று சொன்னாலும் கூட மிகையாகாது. ஆனால் நீ என்னுடைய அந்த நம்பிக்கையை வேருடன் வெட்டி எறிந்து விட்டாய். நீ இப்படியெல்லாம் நடந்துகொள்ளத் துணிவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. நீ மூன்று நாட்கள் வீட்டை விட்டு வெளியே சென்று எங்கேயோ இருந்து விட்டு, 'நான் மைத்ரேயின் நான்னியின் வீட்டில் இருந்தேன்' என்று என்னிடம் துணிந்து பொய் கூறினாய். ஆனால் உன் கண்களே உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டன. உன் குட்டை உடைத்து உன் ரகசியத்தை அம்பலப்படுத்தி விட்டன. அதைக் கொண்டு நான் உன்மீது சந்தேகம் கொண்டேன். ஆனால் அதை நான் வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அதற்குக் காரணம் எனக்கு அவ்வளவு துணிவு ஏற்படாததுதான். எங்கேயாவது என் முடிவு தவறாகிவிட்டால், உனக்கும் உன் தன்மானத்துக்கும், உன் நடத்தைக்கும் இழுக்குக் கற்பிப்பதாக முடிந்து விடுமோ என்று அஞ்சினேன். அதனால்தான் என் சந்தேகத்தைச் சந்தேகமாகவே மனத்தின் ஆழத்தில் புதைத்து வைத்திருந்தேன். ஆனால் மைத்ரேயின் நான்னி உன்னைப் பார்த்து மாதக் கணக்காகி விட்டது என்று சொன்ன பொழுதுதான் என் சந்தேகம் ஊர்ஜிதமாகி நம்பிக்கையாகப் பரிணமித்தது. மாசு தோய்ந்த உன் நடத்தையை நினைக்கும் பொழுது கடலில் குதித்து உயிரையே மாய்த்துக் கொண்டுவிடலாமா என்றுகூடத் தோன்றுகிறது. எனக்கு வாழ்க்கையில் இனி ஒரு இன்பமோ, ரசமோ, உற்சாகமோ இருப்பதாகத் தெரியவில்லை. வாழ்க்கை சப்பிட்டு விட்டது. சப்பிட்டு விட்டால் கூடத் தேவலையே! வேம்பினும் கடுமையாகக் கசந்துவிட்டது. வாழ்க்கை கசந்தபின் உயிர் வாழ்ந்து என்ன பிரயோஜனம்?

ரூப்சந்த்.

கடிதத்தைப் படித்த தேவகி ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள். பிறகு அப்படியே சாய்வு நாற்காலியில் தன் நிலை மறந்து சாய்ந்து விட்டாள். அச் சமயம் அவளுடைய உள்ளத்தில் பல்லாயிரக் கணக்கான சிந்தனைகள் எழுந்தன. மழைக் காலத்து மாலை வேளைகளில் கணக்கற்ற சின்னச் சின்னப் பூச்சிகள் பறக்கத் தொடங்கி விடுகின்றன அல்லவா? அதுபோல் மூட்டம் போட்டிருந்த அவளுடைய உள்ளத்திலும் பல சிந்தனைப் பூச்சிகள் பறக்கத் தொடங்கின. மழைக் காலத்து அந்தப் பூச்சிகள்தான் மனிதனுக்கு எவ்வளவு சிரமம் தருகின்றன! ஆள் பிராணனை அடியோடு வாங்கி விடுகின்றன! அவை புரியும் அட்டகாசம் தாங்காமல் மனிதனின் மனம் எப்படி யெல்லாம் சலித்து விடுகிறது! அவற்றினால் மனிதனுக்கு எவ்விதமான தீங்கும் இழைக்க முடியாதுதான். ஆயினும், அவை உட்கார்ந்து எழுந்திருக்க முடியாதபடி ஆளை அல்லலுறச் செய்து விடுகின்றன அல்லவா? அதே போன்ற நிலைதான் தேவகிக்கும் ஏற்பட்டிருந்தது. அவளுடைய மனத்தில் பிறந்த சிந்தனைப் பூச்சிகள் அவளைக் கதிகலங்க அடித்துக் கொண்டிருந்தன. ஆனால் நான் அவளைப் போல் கதிகலங்கி நம்பிக்கை இழந்து கைகட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க வில்லை.

செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தினேன். நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் தந்தி அடித்தேன். துயரமே உருவாகிவிட்ட தேவகி 'இன்றைக்கு ஏதாவது செய்தி எங்கிருந்தாவது வந்து விடக் கூடாதா?' என்ற திடமான நம்பிக்கையில்தான் தினமும் எழுந்திருப்பாள். ஆனால் பொழுது புலர்ந்து பொழுது சாயுமே ஒழிய, எங்கிருந்தும் எவ்விதமான தகவலும் வராது. தேவகி நெடு மூச்சுவிட்டுத் தரையில் படுத்து விடுவாள். இப்படியே அநேக மாதங்கள் ஓடிவிட்டன. தேவகி உணவை மறந்தாள்; உடையை மறந்தாள்; அவளுடைய மனம் ஒரே சிந்தனையில் ஊன்றி விட்டது. அந்தச் சிந்தனையை விட்டால் அவளுக்கு வேறு சிந்தனையே கிடையாது. அதைக் கண்ணுற்ற எனக்கு என் இருதயத்தில் யாரோ கூரிய கத்தியைப் பாய்ச்சுவது போலிருந்தது.

'இது நம்மால் வந்த வினைதானே?' என்று எண்ணி அடிக்கடி மனம் நொந்து கொள்வேன். அவள் உடல் வற்றி ஓடாகப் போய் விட்டது. எலும்பும் தோலும்தான் எஞ்சியிருந்தது. முகத்திலே பழைய மினு மினுப்பு இல்லை. கண்களிலே பழைய பிரகாசம் இல்லை. ஆனாலும் அந்தப் பழைய தேஜஸ் மட்டும் அப்படியே அப்பழுக்கின்றி எள்ளளவும் குறையாமல் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால் எனக்கு அவளை ஏறிட்டுப் பார்க்கத் துணிவு உண்டாகவில்லை. கற்புக் கரசிகளின் கண்களில் கனல் குடி கொண்டிருக்கும். அவர்களைத் தீய நோக்குடன் நோக்குபவர்களை அது சுட்டெரித்துச் சாம்பராக்கி விடும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மான் குட்டி வில்லில் அம்பை ஏற்றி அடிக்கத் தயாராக நிற்கும் வேடனைக் கண்டு மருள்வது போல, நான் கனல் கக்கும் கற்புக்கரசியின் கண்களை நோக்கவே அஞ்சினேன். கண்களுக்குக் கண்கள் நேர் நின்று தேவகியைப் பார்க்கும் துணிவு எனக்கு உண்டாகவில்லை. நான் தேவகியைக் கண்டு கவனித்து வருவதற்காக அவள் வீட்டுக்கு அடிக்கடி போய் வருவது உண்டு. ஆனால் அச்சத்துடன்தான் அவள் வீட்டு வாசற்படியில் காலடி எடுத்து வைப்பேன். என் கண்களும் அவள் கண்களும் ஒன்றுக் கொன்று நேருக்குநேர் கலந்து விடக் கூடாதே என்று அஞ்சுவேன். அவளுடைய அந்தப் புலன் அடக்கம் என் உள்ளத்திலே அளவற்ற சிரத்தை உணர்ச்சியை உண்டு பண்ணியிருந்தது. நான் முன்பெல்லாம் அவளைத் தெய்வாம்சம் பொருந்தியவளாகக் கருதி வந்தேன். இப்பொழுதோ வெனில் தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வமாகவே அவளைக் கருதத் தொடங்கி விட்டேன்.

ஐரோப்பாவில் கணவனைப் பிரிந்து வாழும் ஆயிரக் கணக்கான பெண்களை நான் பார்த்திருக்கிறேன். கணவனைப் பிரிந்து வாழும் இருள் சூழ்ந்த இரவுகளில், அவர்களுடைய பழக்க வழக்கங்களிலோ நடத்தையிலோ எவ்விதமான மாறுதலையும் நான் கண்டதில்லை. அவர்கள் தங்கள் தங்கள் கணவன்மார்களுடன் கூடி வாழும் பொழுது எப்படிச் சிரித்துப் பேசுவார்களோ, விளையாடிப் பொழுது போக்குவார்களோ, அப்படியே தான் சிரித்துப் பேசுகிறார்கள்; விளையாடிப் பொழுது போக்குகிறார்கள். அவர்களுடைய ஆகார விவகாரங்களிலோ, நடை உடை பாவனைகளிலோ, ஆடை அலங்காரங்களிலோ, எவ்விதமான சிறு மாறுதலையோ குறையையோ காண முடியாது. கணவன்மார்களுடன் இருப்பதும் இல்லாததும் அவர்களுக்கு ஒன்றாகவேதான் இருக்கிறது. ஆனால் தேவகியின் விஷயம் அப்படியில்லை. அவளுக்குத் தன் கணவன் ஓடிப்போனது, கணவன் மட்டும் ஓடிப் போனதாகத் தோன்றவில்லை. தன்னுடையது என்றிருக்கும் அனைத்துமே, ஏன்? உலகமே கூட ஓடிப் போய் விட்டதாகத்தான் தோன்றியது! கணவன் போன பிறகு அவளுடைய உதடுகளில் புன்முறுவல் நெளியவில்லை; முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடவில்லை.

அவளுடைய அறையில் எத்தனை எத்தனையோ நேர்த்தியான பொருள்கள் இருந்தன. கணவன் வீட்டை விட்டுப் போன பின் தேவகி எல்லாவற்றையும் எடுத்து வெளியே போடச் சொல்லி விட்டாள். தான் உண்டு, தன் அறை உண்டு என்று மிக மிகப் பரம ஏழையைப் போல் தன் அறைக்குள்ளேயே அடைந்து வாழலானாள். ராமனைப் பிரிந்த சீதை எந்த நிலையை அடைந்தாளோ, அதே நிலையைத் தேவகி அடைந்து விட்டாள்.

"மைலோ" கலந்து சாப்பிடுங்கள்
MILO
FORTIFIED
TONIC FOOD
DRINK
அருந்துவதற்கு உண்மையாகவே ஓர் சிறந்த பானம்

டாக்டர்கள் நிரூபிக்கின்றனர் நீங்களும்
அழகிய சருமத்தை 14 நாட்களில்
அடையலாமென்று!
டாக்டர்கள் நிரூபிக்கும் உபாயம்
இதுதான்: பாமோலிவ் சோப்பால் உங்கள் முகத்தைக் கழுவுங்கள். பிறகு பாமோலிவ்வின் மிருதுவான இன்ப சுகந்தரும் நுரையால் உங்கள் சுத்தமான முகத்தை 60 விநாடிகள் தேயுங்கள். அலம்புங்கள்! ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் வீதம் 14 நாட்கள் இவ்வாறு செய்யுங்கள். இவ்விதசுத்தி செய்யும் தேய்ப்பு உங்கள் சருமத்தை மிருதுவான வழுவழுப்பான, இளமையான தோற்றமளிக்கச் செய்கிறது.
நீங்களும் 14 நாட்களிலேயே இந்த
பலன்களை எதிர்பார்க்கலாம்.
பிரகாசமுள்ள அதிகச் சுத்தமான சரு
மம் ★ உயர்ந்த சுகம் ★ நல்லிசை ★
மிகவும் குறைந்த மாசுமறுக்கள் ★
குறைந்த தேய்ப்பு ★ வழுவழுவென்றி
ருக்கும்சருமம் ★ மிகப் புதிய நிறம் ★
சோப்பு மட்டுமில்லை — ஓர் அழகு ரத்தினம்!
PALMOLIVE
PALMOLIVE

தவணைச் சலுகையுடன் சைகிள்கள்

ரூ. 1,86,000 மதிப்புள்ள சைக்கிள்கள் விற்பனையாகிவிட்டன.
முடிவான குறைந்த விலை. இச்சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்!

இச் சலுகையை நழுவவிடாது நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். விலையின் 25 சத விதம் முன்னதாகவும் பாக்கியை ஐந்து மாதாந்திரத் தவணைகளாகவும் செலுத்தலாம்.

ஹிந்த் சைகிள் ரூ. 138/- இங்கிலீஷ் சைகிள் ரூ. 180/-
பிலிப்ஸ் ரூ. 210/- ஹெர்குலஸ் ரூ. 220/-
பி. எஸ். ஏ. ரூ. 246/- ராலே (பச்சை) ரூ. 340/-
டைனமோ செட் ரூ. 28/-



உங்களுக்கு அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரும் முழு விலாஸமும் எழுதி நிபந்தனைகளுக் குட்பட்டு உடனேயே டெலிவரி எடுத்துக் கொள்ளுங்கள். புதிய டன்லப் டயர்கள், டியூப்கள், புதிய ஒரிஜினல் பார்ட்டுகள் எல்லாம் புத்தம் புதியவை என்பதற்கு உத்தரவாதம். உடனேயே ஆர்டர் செய்யுங்கள்.

JUPITER TRADING CO.

Prop. M. T. CO., LTD.

Post Bag 16602, Calcutta-4

டாக்டர்கள் இந்த அற்புதமான
பெப்ஸை சிபார்சு செய்கிறார்கள்

PEPS

இருமல், ஜலதோஷம், குளிர், தொண்டைப் புண், இன்புளுயன்ஸா சளி ஜுரம், மார்வலி, சுவாச கோசநோய்கள் முதலியவற்றிற்கு உகந்தது. இருமுவதால் உங்கள் இருதயமும், சுவாச கோசங்களும் பாதிக்கப்படுகின்றன. பெப்ஸ் மாத்திரைகள் இருமலைப் போக்கி விரைவில் குணம் தரும். பெப்ஸ் மென்று உட்கொள்ளும்போது மணம் வாய்ந்த மருந்துச் சத்துக்கள் தொண்டையிலிருந்து சுவாசக் குழாய்கள் வழியாக சுவாச கோசங்களுக்குச் செல்லுகின்றன. தொண்டைக்கும் இருதயத்திற்கும் இதமளிக்கிறது பெப்ஸ். அது அபாயகரமான கிருமிகளை நாசம் செய்கிறது. சளியினால் ஏற்படும் தொல்லைகளுக்கு பெப்ஸ் சிறந்த நிவாரணி. பெப்ஸ் இதமும் பலமும் தருகிறது. பெப்ஸ் அற்புதமான மருந்து.

பெப்ஸ், தொண்டைப்புண், மார்வலி நோய் நிவாரண மாத்திரைகள் FPY:4

மதராஸிற்கு ஸோல் ஏஜண்டுகள்: **தாதா & கம்பெனி, பார்க் டவுன்**

பரிசுத்தமே உருவான அந்த ராம கதையை எனக்குக் கூறி அதன் பெருமையை விளங்க வைத்தவள் தேவகிதான். சீதைக்கு நேர்ந்த அதே நிகழ்ச்சி தன் வாழ்க்கையிலும் நிகழக் கூடும். அதுவும் என் கண்களுக்கெதிரே நிகழக் கூடும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

என் உள்ளத்தில் ஒரே ஒரு ஆசைதான் இருந்தது. அதாவது என் பிழையை எப்படியாவது திருத்திக் கொள்ள வேண்டும், ரூப்சந்தைத் தேடிப் பிடித்துத் தேவகியிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. என்றைக்கு நாம் ரூப்சந்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தேவகியிடம் சேர்ப்போமோ, அன்றைக்கு நமக்கு ஆனந்தம் தலைகால் புரியாது. அந்த நிலையில் நாம் பித்தம் தலைக்கேறிப் பைத்தியமாகவே ஆகி விட்டாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எண்ணினேன். ஏனெனில் எல்லை கடந்த இன்பம் ஏற்பட்டாலும், அல்லது மீளாத் துயரத்தில் மனிதன் மாட்டிக் கொண்டாலும் பித்தனாக ஆகிவிடக்கூடும் அல்லவா?

இந்த உலகத்தில் எண்ணற்ற எத்தனையோ இன்பங்கள் இருக்கின்றன. ஆனால் பிரிவுத் துயரில் வாடும் இரண்டு தூய ஆத்மாக்களை ஒன்று சேர்த்து வைப்பதில் உள்ள ஆனந்தம் வேறு எதிலுமே கிட்டுவதில்லை.

இந்த எண்ணம் எழுந்ததுதான் தாமதம்; என் உள்ளம் அந்த இன்பக் காட்சியைக் கற்பனைக் கண் கொண்டு காண்பதில் ஈடுபட்டு விட்டது. ஆகா! பிரிவுத் துயரினால் வாடிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் ஒன்று சேரும் காட்சி எவ்வளவு இன்பம் பயக்கக் கூடியதாக இருக்கும்? தூய உள்ளங்களின் ஆத்மீகத் தொடர்பு எவ்வளவு பேரானந்தத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும்? நியாயமாகச் சேரவேண்டியவர்கள் சேர்ந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்?

இப்படிக் கற்பனையில் ஈடுபட்ட என் உள்ளம் புல்லரித்தது. அந்தக் காட்சியைக் கனவிலிருந்து நினைவாக்கி விடவேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் வேரூன்றியது. நாட்கள் செல்லச் செல்ல, அந்த ஆசை காதலர்களின் காதலையும் ஆதுரத்தையும் போல் அதிகரித்துக் கொண்டே போயிற்று. இந்த நிலையில் கடைசியில் என்னை இரவுத் தூக்கம் கூட விட்டு விட்டு ஓடிவிட்டது. ஒரே நினைவு, ஒரே சிந்தனை இருந்தால் இலேசில் தூக்கம் வருவது ஏது? "உன் கடமையை நிறைவேற்றுவதில் நீ தாமதம் செய்கிறாய்!" என்ற சொற்கள் என் காதுகளில் இரவு பகல் எந்நேரமும் ஒலிக்கத் தொடங்கின. அது ஏதோ பொய்யான சத்தமாகவோ, கற்பனைக் குரலாகவோ எனக்குப் படவில்லை. அது கடவுள் இடும் கட்டளையாக, ஆண்டவன் இடும் ஆணையாகத்தான் தோன்றியது. நான் சில தினங்கள் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். கடைசியில் திடமான சங்கற்பம் செய்து கொண்டு ரூப்சந்தைத் தேடப் புறப்பட்டேன். இயற்கையை வழிபடும் மேல்நாட்டு வாசிகள் வேண்டுமானால் என்னுடைய இந்தச் செய்கையைக் கண்டு கை தட்டி நகைப்பார்கள்; ஏளனம்செய்வார்கள்; பரிகாசம் செய்வார்கள். ஆனால் அதை என் உள்ளம் ஆண்டவன் இட்ட ஆணையாகத் தான் மதித்தது என்பதை என்னால் இங்கே சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

ரூப் சந்தைத் தேடிக் கொண்டு நான் பிரான்சுக்குப் போனேன்; ஜெர்மனிக்குப் போனேன்; சுவிட்ஜர்லாந்துக்குப் போனேன். நான் அவரை அவ்விடங்களில் உள்ள தியேட்டர்களில் தேடினேன்; பிரசங்கம் செய்வதற்கென்று நிறுவப்பட்டிருக்கும் சபைகளில் தேடினேன்; மலை அடிவாரங்களில் தேடினேன். சொல்லப் போனால் நான் அவரைத் தேடாத இடமே கிடையாது. ஆனால் ரூப்சந்த் எங்கும் அகப்படவில்லை. சுவிட்ஜர்லாந்தில் அவர் கிடைத்துவிடுவார் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக இருந்தது. ஆனால் அவர் அங்கும் கிடைக்கவில்லை. அடிக்கடி பரீட்சையில் தோல்வியுறும் மாணவன் நம்பிக்கை இழந்துவிடுவான் அல்லவா? அது போல் நானும் நம்பிக்கை இழந்து விட்டேன். இவ்வளவு தேடியும் கிடைக்காத ரூப்சந்த் எங்கே கிடைக்கப் போகிறார் என்ற அவநம்பிக்கை என் உள்ளத்தில் ஏற்பட்டது. நான் தேவகிக்குப் பல கடிதங்கள் எழுதினேன். அவற்றில் என் முயற்சிகளையும், அவர் கிடைக்காமற் போனதனால் ஏற்படும் மனச் சோர்வையும் குறிப்பிட்டு விவரமாக நீண்ட கதைகளைப் போல் எழுதி அனுப்புவேன். தேவகி அந்தக் கடிதங்களில் ஒன்றுக்குமே பதில் எழுதவில்லை. ஆனால் நான் ரூப் சந்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதற்காக எனக்கு அடிக்கடி கேட்காமலேயே வேண்டிய பணம் மட்டும் அனுப்பி வந்தாள்.

அவ்விடங்களில் எல்லாம் தேடிச் சலித்த நான் அமெரிக்காவை அடைந்தேன். இங்கே ராமகிருஷ்ண மிஷன் சார்பில் ஏராள

ஒரு பையன்:—ஏண்டா, உனக்கு இன்னும் அவ்வளவு நன்றாய் நீந்த வரமாட்டேன் என்கிறது. ஆனால் உன் தம்பி மட்டும் ஜோராக நீந்துகிறானே! என்னடா காரணம்?

மற்றவன்:—அவன் சின்ன வயதிலே நிறையக் காட்லிவர் ஆயில் சாப்பிட்டிருக்கிறானடா!

மான பெரிய கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே வேதாந்த கோஷ்டிகள் நடைபெறுகின்றன. ஞானம், தியானம் முதலிய தத்துவங்களைப் பற்றி உபன்யாசங்கள் நடைபெறுகின்றன. இரவு பகல் எந்நேரமும் இங்கே அறிவு என்னும் கங்கை நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. என் மனம் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தது. இனி வெற்றி வெகு தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் இடம் பெற்றது. 'ரூப்சந்த் இந்தக் கோவில்களில் ஏதாவது ஒன்றில்தான் இருப்பார். கட்டாயம் அகப்பட்டு விடுவார். உலகத்தைத் துறந்துவிட்ட மனிதனுக்கு உடனே தர்மத்தின் நினைவுதான் வரும்' என்ற எண்ணம் எழவே, நான் வேதாந்தக் கோயில்கள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று அவரைத் தேடினேன். கடைசியில் அவர் கலிபோர்னியாவில் இருக்கிறார் என்றும் அவ்விடத்து மக்கள் அவரைத் தெய்வமாக வழி படுகிறார்கள் என்றும் அறிந்தேன். நான் உடனே அங்கு பறந்து சென்றேன். அவ்விடத்து வேதாந்தக் கோயிலைக் கண்டு மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கியது. ஆனால் அங்கேயும் அவரைக் காணவில்லை. காவலாளியைக் கூப்பிட்டுக் கேட்டேன்.

“இங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு அருவி இருக்கிறது. ‘சலசல’வென்று சப்தித்துக் கொண்டு ஒரே சீராக ஓடும் அந்த அருவிக் கரையிலே அவர் தனிமையாக ஒரு குடிசை கட்டிக் கொண்டு வாழ்கிறார். அந்தக் குடிசைக்கு அவர் ‘ஆனந்த பவனம்’ என்று பெயரிட்டிருக்கிறார். பாமரர்கள் அதை ‘அருவிக்கரை ஆசிரமம்’ என்று அழைக்கிறார்கள். அங்கேதான் அவர் தம் பெரும்பாலான பொழுதைப் போக்குகிறார். வருவோர் போவோருக்கு ஞான மார்க்கத்தை உபதேசிக்கிறார். மற்ற நேரங்களில் தியானத்தில் மூழ்கி யிருக்கிறார்” என்று அவன் விவரமாகச் சொன்னான்.

நான் ஆனந்தபவனத்தை யடைந்தபோது இருட்டி விட்டது. உள்ளே நுழைந்ததும் அவருடைய அமைதியே உருவான, தேஜஸ் தோய்ந்த, அன்பு நிறைந்த முகத் தோற்றத்தைத்தான் நான் கண்டேன். அப்பொழுது அவர் துறவியின் வேஷத்தில் இருந்தார். நான் அவரை நேர்த்தியான ஆடைகள் அணிந்திருந்தபொழுது பார்த்திருக்கிறேன். அப்பொழுது அவர் பிரதாபம் வாய்ந்த அரசகுமாரனைப்போலக் காட்சி அளித்திருக்கிறார். ஆனால் இந்தக் காவித் துணியிலும் அவர் இவ்வளவு தேஜஸ் நிறைந்தவராகவும், கம்பீரத் தோற்றம் உடையவராகவும், மகானாகவும் தோற்றம் அளிப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. அவர் ஒரு ஆசனத்தில் அமர்ந்து வேதாந்த விஷயத்தைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார். அவர் எதிரே கலிபோர்னியாவில் உள்ள பெரிய பெரிய வித்துவான்கள் எல்லோரும், தலைத் தொப்பியை எடுத்துக் கீழே வைத்துவிட்டு அடக்கமாகப் பக்தி சிரத்தையுடன் தலை வணங்கி உட்கார்ந்திருந்தனர். அவர் வேதாந்த விஷயமாகச் சொல்லும் தத்துவங்களைக் கேட்டு, அவருடைய ஆத்மீக அறிவின் மேன்மையை எண்ணி அதிசயித்துத் திறந்த வாய் மூடாமல் உட்கார்ந்திருந்தனர். ஆன்மீக அறிவிலே வளர்ச்சி அடைந்த கீழ்நாட்டின் காலடிகளிலே மேல்நாடு தலை வணங்கி விட்டது என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

தற்செயலாக அவர் பார்வை என்மீது விழுந்தது. சிற்சில சமயம் மின்சார விளக்கின் ஒளி திடுதிப்பென்று அதிகமாகப் பிரகாசிப்பதில்லையா? அதுபோல் அவருடைய முகத்தின் காந்தி என்னைப் பார்த்ததும் இன்னும் அதிகரித்தது. நான் முன்னே ஓடிச் சென்று அவருடைய காலடிகளிலே விழுந்தேன். அப்பொழுது என் உள்ளத்தில் பக்தி பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. வெகு நேரம் வரை நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். நள்ளிரவுக்குமேல் ஆகிவிடவே, மறுநாள் மாலை வந்து சந்திப்பதாகச் சொல்லிவிட்டு நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பி வந்தேன். ஆனால் இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. மனத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கிவிட்டால், தூக்கம் வருவது ஏது? காலையில் எழுந்ததும் முதல் காரியமாக நான் தேவகிக்கு ரூப்சந்த் அகப்பட்டுவிட்ட சந்தோஷச் செய்தியைத் தந்தியாகக் கொடுத்தேன்.

அதற்குப் பிறகு நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். மத்தியானம் திரும்பி வந்த நான் உணவு அருந்திவிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறினேன். மாலை நேரம் எப்பொழுதடா வரப்போகிறது என்று எதிர்பார்த்த நான் ஒவ்வொரு நிமிஷமாகப் பிடித்துத் தள்ளினேன். கடைசியில் நான் எதிர்பார்த்து நின்ற மாலை நேரமும் வந்தது. நான் ரூப்சந்தின் ஆனந்த பவனத்தை நோக்கிப் புறப்பட்டேன். அச் சமயம் என் கால்கள் தரையில் பாவவே இல்லை. ரூப்சந்தைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவல் என் கால்களுக்கு இறக்கைக் கட்டிவிட்டன. பற்பல இனிய கனவுகள் என்னை வான வீதியில் ஏற்றி மிதக்கவிட்டு விட்டன.

ஆனால் நான் அங்கே போனதும் என் மனம் இடிந்து உட்கார்ந்து விட்டது. அங்கே ஆசிரமத்தைச் சுற்றிப் போலீஸ் பாரா நின்று கொண்டிருந்தது. ஆனந்த பவனத்தில் சோக அமைதி நிலவி யிருந்தது. எனக்கு விஷயம் விளங்கவில்லை. அருகில் சென்று விசாரித்தேன்.

இந்த ஆசிரமத்தில் இரவு ஒரு பெண் கோரக் கொலை செய்யப்பட்டு விட்டாள் என்றும் ரூப்சந்த் தான் அந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று போலீசார் சந்தேகப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அதைக் கேட்டதும் ஒன்றுமே புரியவில்லை. கண்களில் பூச்சி பறந்தது. (தொடரும்)


LIPTON'S
HIMALAYAN BRAND
FINEST
GOLDEN DUST
TEA
லிப்டன்ஸ்
ஹிமாலயன்
கோல்டன் டஸ்ட்
டீ
'சிறந்த
தங்க நிற
பானம்'
LGDX (B) 46 TM

"நான் எப்பொழுதும் தலைவலியால் அவதிப் பட்டுக்கொண்டிருந்தேன். ஒன்றிலும் குணம் கிடைக்கவில்லை. பின்னர் "க்ருஷன்" உபயோகிக்க ஆரம்பித்ததிலிருந்து எனது வலிகள் அறவே ஒழிந்து அநேக விதங்களில் குணமடைந்திருக்கிறேன். மண்டை பிளக்கும் தலைவலியால் வாழ்க்கையே வியர்த்தம் எனக் கருதினேன். ஆனால் அது இப்பொழுது முற்றிலும் வேறு விதமாய் விட்டது — "க்ருஷ"னுக்கு எனது நன்றி." —M. S.

வயிற்றைக் கோளாறு செய்வதும் ரத்தத்தை விஷமாக்குவதுமான அசுத்தங்கள் குடலுக்குள் சேமிக்கப்படுகின்றன என்பதே மண்டை பிளக்கும் தலைவலிகளின் தாத்பர்யம். உங்களது உட்புற அவயவங்களை ஆரோக்கியமாகவும் ஒழுங்காகவும் இயக்குவதால் "க்ருஷன்" அவ்விஷப் பொருள்களை வெளியேற்றி விடுகின்றது. க்ருஷன் உங்களுக்கு வலிகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் விடுதலை அளிப்பதால் வாழ்க்கையில் புத்துணர்வும் ஊக்கமும் அடைகிறீர்கள்.

"க்ருஷன்" உங்களை ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருக்க உதவுகிறது

KSM—2

மராமத்து இலாகாவுக்கு மற்றொரு எதிரி

[ரா. கி.]

நமது முதன் மந்திரி ராஜாஜி சில நாளைக்கு முன்பு, — ராயலசீமையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில், பேசுகையில், — "மராமத்து இலாகா (P. W. D.) என்னுடைய இரண்டாம் நம்பர் எதிரி!" என்று சொன்னார். நகைச்சுவை யில்லாத மனிதர்கள் உடனே "அடடா! நம் என்ஜினியர்கள் எவ்வளவு அரும் பெரும் காரியங்களைச் செய்து வருகிறார்கள்! அவர்களை ராஜாஜி இப்படி அவதூறாகப் பேசிவிட்டாரே!" என்று புகார் செய்வார்கள். ராஜாஜியின் கருத்து இன்ன தென்பதைச் சாதாரண அறிவு படைத்தவர்கள் அறிந்து கொள்வார்கள். மராமத்திலாகா மூலம் செய்யப்படும் காரியங்களில் கட்டிடம் கட்டுவது முக்கியமான ஒன்று. கட்டிடங்களில் அதிகப் பணம் செலவு செய்வது பிசகு என்பது ராஜாஜியின் கருத்து. அதிலும் மராமத்து இலாகா மூலம் சம்பிரதாயமான முறையில் கட்டிடம் கட்டுவது என்றால், ஒன்றுக்கு இரண்டு பங்கு செலவாவது இயல்பு. ராயலசீமைப் பஞ்ச நிலைமையை நேரில் பார்த்த பிறகு, ராஜாஜிக்கு இம்மாதிரி பெரிய கட்டிடங்கள் கட்டுவதில் பணம் விரயம் செய்வது பெருங் குற்றமாகத் தோன்றியதில் வியப்பில்லை. நிற்க.

ராஜாஜிக்கு முன்னாலேயே இன்னொரு சாமான்ய தனிப்பட்ட மனிதர், "மராமத்து இலாகாவின் விரோதி நான்!" என்று தெரியப்படுத்திக் கொண்டு விட்டார். அவர் பெயர் ஸ்ரீ A. W. ஸாமுவேல். இவர் அடக்கமான கல்வித் தொண்டில் ஈடுபட்டிருப்பவர். கோடம்பாக்கம் ரயில்வே நிலையத்துக்கு அருகில் ஸ்ரீ சரோஜா, மாடர்ன், சுதந்திரப் பள்ளிகளை நடத்தி வருகிறார். ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஒரே ஒரு ஆசிரியை, ஐந்தே ஐந்து குழந்தைகளுடன் இந்தக் கல்வி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஆயிரம் மாணவ மாணவிகளும் நாற்பது ஆசிரியைகளும் எட்டு வகுப்புகளும் கொண்டு நடந்து வருகிறது. மூன்று இளை ஸ்தாபனங்களிலுமாக 150 ஏழைப் பிள்ளைகள் சம்பளமில்லாமலும் 200 பிள்ளைகள் அரைச் சம்பளத்துடனும் படிக்கிறார்கள். மற்றவர்கள் சம்பளம் கொடுத்துப் படிக்கிறார்கள். சென்னை நகர சபையினால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சம்பளமின்றிப் படிப்பதற்கு வசதி இருந்தும், சுமார் 650 குழந்தைகள் ஸ்ரீ ஏ. டபிள்யூ. ஸாமுவேலின் பாடசாலைகளில் சம்பளம் கொடுத்துப் படிக்கிறார்கள் என்பதிலிருந்து அவருடைய நிர்வாகத் திறமையையும் பெற்றோர்களுக்கு அவரிடமுள்ள நம்பிக்கையையும் ஒருவாறு ஊகிக்கலாம்.

ஆயிரம் குழந்தைகள் படிக்கும் இந்தப் பள்ளிக்கூடங்கள் சென்ற வருஷம் வரையில் தென்னங் கீற்றுக் கொட்டகைகளிலேயே நடந்து வந்தன. இம்மாதிரி பாடசாலைகள் நடத்தும் அன்பர்களுக்கெல்லாம் திடீரென்று கட்டிடம் கட்டும் பைத்தியம் பிடித்துவிடுவது வழக்கம். அப்புறம் அவர்கள் தாங்களும் தூங்க மாட்டார்கள்; தங்களுக்குத் தெரிந்தவர்களையும் தூங்கவிட மாட்டார்கள்; சர்க்காரையும் கட்டிட கிராண்டுக்காக ஓயாது நச்சரித்துத் துளைத்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்களைக் கண்டால் இவர்களுடைய நண்பர்கள் ஓடி ஒளிந்து கொள்ளவும் தொடங்கி விடுவார்கள்.

ஸ்ரீ சாமுவேலுக்கும் இயற்கை நியதிப்படி கட்டிடம் கட்டும் ஆசை உண்டாயிற்று. இதற்காகச் சர்க்கார் கிராண்ட் வாங்குவது பற்றி ஆலோசித்தார். விசாரிக்க வேண்டிய இடத்தில் விசாரித்தார்; கேட்க வேண்டிய இடத்தில் கேட்டார். பள்ளிக்கூட நிர்வாகிகள் ஒரு தொகை கட்டிடத்துக்காகத் தயார் செய்து கொண்டால், சர்க்கார் சில சமயம் சரிக்குச் சரி நன்கொடை கொடுப்பார்கள் அல்லது பாதித் தொகை கிராண்ட் கொடுப்பார்கள் என்று தெரிந்தது.

ஸ்ரீ ஏ. டபிள்யூ. சாமுவேல்

அதாவது ஸ்ரீ சாமுவேல் இருபதினாயிரம் ரூபாய் கட்டிடத்துக்காக வசூலித்துக் கொடுத்தால், சர்க்கார் மற்றொரு இருபதினாயிரம் ரூபாய் கொடுக்கக் கூடும். அல்லது அதற்குக் குறைவாகக் கொடுத்தாலும் கொடுக்கலாம்.

அதில் ஒரு பெரிய நிபந்தனையும் சேர்ந்திருந்தது. சர்க்கார் கிராண்டு வாங்கி விட்டால், சர்க்கார் மராமத்திலாகா கொடுக்கும் 'பிளான்'படி, அவர்களுடைய மேற் பார்வையில் கட்டிடம் கட்ட வேண்டும். அவர்கள் எப்படி எப்படிச் செலவு செய்யச் சொல்லு

கிறார்களோ அப்படிச் செலவு செய்ய வேண்டும். மொத்தம் கட்டிடச் செலவில் 100க்கு 6½ விதம் பிளான் தயாரிப்பதற்கு மட்டும் கொடுக்க வேண்டும்.

இதை யெல்லாம் அறிந்ததும் ஸ்ரீ சாமுவேல் ஆழ்ந்த யோசனை செய்தார். தாம் இருபதினாயிரம் ரூபாய் வசூல் செய்து சர்க்காரிடம் சமமான தொகை கிராண்ட் வாங்கி ரூ 40,000த்துக்குக் கட்டிடம் கட்டலாம். அது எவ்வளவு நீளம் அகலம் உள்ள கட்டிடமாயிருக்கும் என்று கணக்கிட்டுக் கொண்டார்.

பிறகு, மராமத்திலாகா மேற்பார்வை இல்லாமல் தம்முடைய சொந்த மேற்பார்வையில் அதே நீள அகலமுள்ள கட்டிடத்தைக் கட்டினால் எவ்வளவு பணம் செலவாகும் என்று கணக்குப் பார்த்தார்.

இருபதினாயிரம் ரூபாயிலேயே முடித்து விடலாம் என்று தெரிந்து கொண்டார்.

அடி சக்கை! இது முன்னமே தெரியாமற் போயிற்றே! சர்க்காரிடம் போய் கிராண்டுக்கு முட்டிக் கொண்டு நிற்பானேன்! மராமத்து இலாகாவின் தொல்லைகளுக்கு உட்படுவானேன்? அத்தனை காலதாமதம் ஏற்படுவதுதான் எதற்காக?

தாமே இருபதினாயிரம் ரூபாய் வசூலித்து விட்டால், சர்க்கார் தயவு இல்லாமல் அவ்வளவு பெரிய கட்டிடம் சீக்கிரத்திலேயே கட்டி முடித்து விடலாமே?

இந்த யோசனை தோன்றியதுதான் தாமதம். பிரமுகர்கள் சிலரைப் போய்ப் பார்த்தார். உதவிக் கச்சேரிகள் — நாடகங்கள் ஏற்படுத்தினார். சில ஆயிரம் ரூபாய் கைக்கு வந்தது.

கட்டிட வேலை ஆரம்பமாயிற்று. ஆரம்பித்த சூட்டோடு கட்டிடம் பூர்த்தியும் ஆகி விட்டது. பதினேழாயிரம் ரூபாயில் ஒரு அழகான — வசதியான — பள்ளிக்கூடத்துக்கு ஏற்ற மச்சுக் கட்டிடம் எழும்பி விட்டது.

பதினோராயிரம் ரூபாய் வசூலானதுபோக ஆறாயிரம் ரூபாய் கடன் இருப்பது உண்மைதான். அதையும் எப்படியும் வசூலித்துவிடலாம் என்று ஸ்ரீ ஸாமுவேலுக்கு நம்பிக்கை இருக்கிறது. தன் கையே தனக்குதவி என்று சுய முயற்சியில் நம்பிக்கையுள்ளவருக்கு எதுதான் சாத்தியமாகாது? பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களின் அநுதாபமும் ஒத்துழைப்பும் நிறைய இருக்கின்றன. ஆதலின், ஐய முண்டு, பயமில்லை!

* * *

புதிய கட்டிடத்தைத் திறந்து வைப்பதற்கு நம் புதிய நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியத்தை ஸ்ரீ சாமுவேல் அழைத்திருந்தார். கட்டிடத்தைத் திறந்து வைத்த பிறகு ஸ்ரீ சுப்பிரமணியம் வரவு செலவு விவரங்களைக் கேட்டறிந்து மிகவும் மகிழ்ந்தார். பள்ளிக்கூடங்கள், காலேஜுகள் நடத்துவோர் எல்லாரும் இதே முறையைக் கைக்கொண்டால், பொதுஜனப் பணம் எவ்வளவு மிச்சமாகும் என்று அடிக்கடி சொல்லி வியந்தார். பார்க்கப் போனால், சர்க்கார் கொடுக்கும் கிராண்டுப் பணமும் பொது மக்களிடமிருந்து வசூலித்த பணந்தானே? ஜனங்களிடம் முப்பதினாயிரம் ரூபாய் வசூலித்தால் அல்லவா, வசூலிக்கும் நிர்வாகச் செலவு போகப் பாக்கி இருபதினாயிரம் ரூபாய் கிராண்ட் கொடுக்கலாம்? ஆக மொத்தம் பொது மக்களின் பணம் ஐம்பதினாயிரம் ரூபாய் செலவாகிக் கட்டக் கூடிய கட்டிடத்தைத் தனிப்பட்டவர்கள் பதினேழாயிரம் ரூபாயில் கட்டி முடிக்கலாம் என்றால்,

ஆசிரியைமார்களின் நிர்வாகக் குழு

எவ்வளவு இலகுவாய்ப் போயிற்று? பள்ளிக்கூடங்களும் காலேஜுகளும் தனிப்பட்டவர்கள் பொறுப்பேற்று நடத்துவதில் எவ்வளவு ஆதாயம் இருக்கிறது?

* * *

கட்டிடத் திறப்பு வைபவத்துடன் ஆண்டு விழாவும் சேர்ந்து நடைபெற்றது. இந்த நாளில் அநேக பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு ஆடல் பாடல்கள் கற்பித்துப் பள்ளிக்கூட வாழ்க்கையைக் குதூகலமாகச் செய்ய முயலுகிறார்கள். ஸரோஜா பாடசாலைக் குழந்தைகளும் கும்மி, கோலாட்டம், பரத நாட்டியம், சங்கீதம் ஆகியவற்றில் தங்கள் திறமைகளை நன்கு காட்டினார்கள்.

ஆசிரியைமார்கள் சுய கவனம் செய்து கற்பித்திருந்த பாடல்கள் நன்றாயிருந்தன.



நிதி மந்திரி புதுக் கட்டிடத்தைத் திறந்து வைக்கிறார். (பின்னால் :— ஆசிரியைமார்களுக்குப் பரிசுகள் வழங்கிய ஸ்ரீமதி கைலாசக் கவுண்டர்.)

ஆனால் பாரதியார் பாடல்களில் மாறுதல் செய்து பாடியது முறையன்று என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பாரதியார் பாடல்களில் பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் பாடப் பொருத்தமில்லாதவை யென்று கருதும் பாடல்களைச் சொல்லிக் கொடுக்காமல் விட்டுவிடுவது மேல். அவரவர்களும் தங்கள் உசிதம் போல் பாரதி பாடல்களை மாற்றுவது என்று ஏற்பட்டால் அது எங்கே போய் முடியும் என்று சொல்ல முடியாது.

பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியை ஒரு அழகிய வெண்கல ஆலாட்சமணியைப் பள்ளிக்கூடத்துக்கு இச்சந்தர்ப்பத்தில் பரிசளித்ததைக் குறிப்பிட வேண்டும். இன்னொரு அநுதாபி பெரிய மணி அடிக்கும் கடிகாரம் ஒன்றைப் பரிசளித்தார். பொருத்தமான பரிசுகள்! கடிகாரம் குறிப்பிட்ட நேரத்தைக் காட்டியதும், ஆலாட்ச மணியை 'டாண் டாண்' என்று அடிப்பார்கள். குழந்தைகளும் புத்தகங்களை மூட்டை கட்டிக்கொண்டு தலைமை ஆசிரியை அம்மாளை வாழ்த்திக் கொண்டு வீட்டுக்குப் புறப்படுவார்கள்!

* * *

ஸ்ரீ. ஸாமுவேல் அவர்களின் முயற்சி இவ்வளவு நல்ல வெற்றியளித்திருப்பதின் காரணங்கள் ஒருவாறு மேற்கூறிய விழாவின் போது வெளியாயிற்று. ஸரோஜா பாடசாலைக்கு அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த அறிவாளிகளின் குடும்பங்கள். அவர்கள் ஆடவரும் பெண்டிரும் பலர் விழாவுக்கு விஜயம் செய்து நடவடிக்கைகளைக் குதூகலத்துடன் கவனித்து மகிழ்ந்தார்கள். இதிலிருந்து யாருக்காகப் பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறதோ, அவர்களுடைய ஆதரவு பள்ளிக்கூடத்துக்குப் பூரணமாக இருப்பது தெரிய வந்தது.

மற்றும், பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கும் ஆசிரியைமார்கள் விழா நிகழ்ச்சிகளில் காட்டிய உற்சாகம் பாராட்டத் தக்கதா யிருந்தது.

தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில், நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் அடிக்கடி சண்டை வந்துவிடும். அதனால் வினையும் கோபதாப மெல்லாம் பிள்ளைகளின் தலையில் வந்து விடியும்.

ஆனால் இந்தப் பள்ளிக்கூடத்தின் மானேஜர் நிர்வாகப் பொறுப்பை ஆசிரியைகளுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார். ஆசிரியைமார்கள் தங்களுக்குள் ஏழுபேர் அடங்கிய செயற் குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தச் செயற் குழுவினரே பெரும்பாலும் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை வகித்து நடத்துகின்றனர். இதன் மூலம் ஆசிரியைகளின் பரிபூரண ஒத்துழைப்பு ஊர்ஜிதமாகக் கிடைத்துப் பள்ளிக்கூட நிர்வாகம் சிக்கலின்றி நடைபெற ஏதுவாகிறது.

இவ்வளவு நல்ல முறையில் நடத்தப்படும் ஸ்ரீ ஸரோஜா மாடர்ன் சுதந்திரப் பள்ளிகள் மேலும் மேலும் வளர்ந்து ஓங்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். ஸ்ரீ ஸாமுவேல் செய்து வரும் சிறந்த கல்வித் தொண்டுக்குச் சென்னை நகரிலுள்ள உதார குணம் படைத்த தனவான்களின் ஆதரவு பூரணமாய்க் கிடைக்கும் என்று நம்புகிறேன்.



ஒவ்வொரு வேலைக்கும் பிரத்யேகமான
ஷாலிமார் பெயிண்ட்
இருக்கிறது
புத்திசாலிகள் ஷாலிமார் பெயின்டையே
உபயோகிக்கிறார்கள்.
SHALIMAR
PAINT
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.
POST BOX 136, MADRAS 1
Importers & Distributors for Ceylon:
LEWIS BROWN & CO., LTD., POST BOX 85, COLOMBO

உழைப்பால் உயர்ந்த ஏழை

பகீரதன்

2

வழக்கம் போல சூரியன் உதயமானான். அஸ்தமித்தான். இரவு வந்தது. பொழுது புலர்ந்தது. புள்ளினங்கள் பாடிக்கொண்டு புறப்பட்டன. வாழைக் கொல்லை கிராமத்து மனிதர்கள் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபடலாயினர். நாட்கள் சென்றன. ஒரு வாரம் ஓடி மறைந்தது. வாழைக் கொல்லைக் கிராமத்தைச் சேர்ந்த பெரிய பண்ணையார் மட்டும் அமைதி இல்லாமல் இருந்தார்.

அன்று காலை பண்ணையார் எதையோ சிந்தித்த வண்ணம் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். சிறுவன் செல்வராஜன் அவர் பின்னால் வந்து பேசாமல் உட்கார்ந்தான். பிறகு பண்ணையாரின் முதுகில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டான். பண்ணையார் ஒரு கணம் துடித்து விட்டார்.

"ஏண்டா ராஜா! காலைவேளையில் ஏன் இப்படி அழுகிறாய்!" என்று கேட்டார்.

"அம்மா அடித்துவிட்டாள்" என்றான்.

"அம்மா அடித்தாளா! வா, விசாரிக்கிறேன்!" என்று செல்வராஜன் கையைப் பற்றி அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

"காமதேனு! ஏன் குழந்தையை அடித்தாய்!" என்று தன் மனைவியைப் பார்த்துச் சற்று அடக்கமாகக் கேட்டார் பண்ணையார்.

"இவன் என்ன சின்னக் குழந்தையா, என்ன! அந்தப் பண்ணையாள் எங்கே போனானோ! எப்போ வருவானோ! ஓயாமல் 'அம்மா! நடேசன் எப்போ வருவான்!' 'நடேசன் எப்போ வருவான்!' என்று நச்சரிக்கிறான். பாவிக் கிழவன் குழந்தைக்கு என்ன சொக்குப் பொடியைப் போட்டானோ!" என்று அங்கலாய்த்தாள் காமதேனு.

காமதேனு! என்ன அழகான பெயர். ஆனால் அந்த அம்மாள் எச்சில் கையால் கூட காக்காய் ஓட்டமாட்டாள்; கையிலிருக்கும் எச்சில் பருக்கை கீழே சிந்தி, அதைக் காகம் கொத்திக் கொள்ளுமோ என்று! என்ன பண்ணுவது! கண்ணில்லாதவனுக்குக் கண்ணாயிரம் என்றும், நித்ய தரித்திரக்காரிக்குத் தனபாக்கியம் என்றும் பெயர் வாய்ப்பதுபோல பண்ணையாரின் தர்மபத்தினிக்குக் காமதேனு என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

பண்ணையார் பதில் ஒன்றும் பேசவில்லை. செல்வராஜனை அழைத்துக்கொண்டு தோட்டத்துக்குச் சென்றார். கிழவன் நடேசனின் ஓலைக் குடிசைக்கு அப்பால் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அது வெகு காலத்திய மரம். தனது கிளைகளை அகலப் பரவ விட்டுக் கொண்டு நின்றது. அதன் பழங்களைத் தின்று எத்தனையோ பறவைகள் தங்கள் இனிய கானத்தால் வாழைக் கொல்லை கிராமத்தையே கலகலப்பாக்கிக் கொண்டிருந்தன. அந்தக் குளிர்ந்த மரத்துக்கு அடியில் கிழவன் நடேசன் மரத்தினால் ஆன மேடை ஒன்று கட்டி வைத்திருந்தான். அதன் மீது பண்ணையாரும் செல்வராஜனும் உட்கார்ந்தார்கள்.

செல் வராஜன் பண்ணையாரின் மடியருகே நகர்ந்து வந்தான். "அப்பா! நடேசன் வந்து விடுவானா!" என்று கேட்டான்.

"கட்டாயம் வந்து விடுவான்" என்று சொன்னார் பெரிய பண்ணையார்.

"அம்மா வரமாட்டான் என்று சொன்னாளே!"

"இங்கு வரா விட்டால் அவன் தெருத் தெருவாய்ப் பிச்சை எடுத்து அலைந்து திரிய வேண்டியதுதான்."

"ஏன் அப்பா அப்படி!"

"அவனிடம் ஒன்றும் இல்லை. அவன் ஏழை."

"அவனிடம் ஒன்றும் இல்லையா! இந்தத் தோட்டம் அவனுடைய தில்லையா! அதோ இருக்கிறதே அவன் வீடு, அதுவும் அவனுடைய தில்லையா!"

செல்வராஜன் தலைமயிரை அன்புடன் கோதி விட்டுக் கொண்டே "இதெல்லாம் நம்முடையது. அவனுக்கு நாம்தான் அந்தக் குடிசையைக் கூடக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அவனுக்கு ஒன்றுமே கிடையாது" என்றார் பண்ணையார்.

"அப்படியானால் அவனுக்கு இந்தத் தோட்டத்தையும் அந்த வீட்டையும் கொடுத்து விடுவோமே அப்பா!" என்றான் சிறுவன் செல்வராஜன்.

குழந்தை உள்ளம் அல்லவா! எல்லாரும் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறான். அவன் இளம் உள்ளத்தில் இன்னும் உயர்வு தாழ்வு என்ற பேத மனப்பான்மை ஏற்படவில்லை. அதனால்தான் கிழவன் நடேசனுக்குத் தோட்டத்தைத் தானம் கொடுக்க முன் வந்து விட்டான். அடாடா! இந்தச் சிறுவனுக்கு இருக்கும் மனப்பான்மை பணம் படைத்தவர்களிடம் இருக்கக் கூடாதா! அவர்களுக்கு எப்படி ஏற்படும்! அவர்கள்தான் ஏழைகளை மனிதர்களாகவே நினைப்பதில்லையே!

அந்தச் சிறுவன் ஏழை நடேசனை மனிதனாக நினைத்தான். அவன்மீது உண்மையிலேயே அன்பு கொண்டு விட்டான். அதனால் அவன் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு,— இல்லை கேட்டுக் கொண்டு கூட அவனால் இருக்க முடியவில்லை.

அன்பு இருக்கும் இடத்தில் தூய்மையும் பரிசுத்த மும் இருக்கும். அன்புதான் தெய்வம். "கை வருந்தி உழைப்பவர் தெய்வம். கவிஞர் தெய்வம்; கடவுளர் தெய்வம்" என்ற மகா கவியின் வாக்கை மனிதன் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுது தான் மனிதனை மனிதனாக நினைக்கத் தூண்டும். பிறருடைய உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்கும் மனப் பக்குவம் ஏற்படும். தேசத்திலும் ஏழை பணக்காரன் என்ற பேதம் தொலையும். இந்த நிலைமை என்று ஏற்படுமோ!

பண்ணையார் குழந்தையின் கையை எடுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டு அவன் நெற்றி யில் முத்தமிட்டார். "ராஜா! உன் கேள்விக் கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது! இன்னும் கொஞ்ச நாள் போனால் நீயே தெரிந்து கொள்வாய்!" என்றார்.

இந்தச் சமயத்தில் "ராஜா! அம்மா உன்னைச் சாப்பிடக் கூப்பிடுறாங்க!" என்று அழைத்தாள் பண்ணையார் வீட்டுச் சமையல்காரி.

பண்ணையார் சிறுவனை அழைத்துக் கொண்டு கிளம்பினார். அவர் வாய் பேசாமல் சென்று கொண்டிருந்தாரே ஒழிய அவர் உள்ளத்தில் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது அவர் சிவந்த முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

"இந்தப் பண்ணையாட்களே இப்படித்தான்! இடத்தைக் கொடுத்தால் மடத்தைக் கட்டி விடு வான்கள். ஒரு வாரத்தில் வந்து விடுகிறேன் என்று பல்லைக் காட்டிக் கெஞ்சுவது. ஊருக்குப் போன வுடன் அப்படியே உட்கார்ந்துவிடுவது. வரட்டும், அந்தக் கிழவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்!" என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டே சென்றார் பண்ணையார்.

மறு நாளாவது நடேசன் வருவான் என்று எதிர் பார்த்தார். அவன் வரவில்லை. இனிமேல் வரவே மாட்டானோ!

சின்னஞ் சிறு வயதிலிருந்து மாடு போல உழைத்து வருகிறான் நடேசன்! அவன் இது வரையில் ஒன்றும் தவறுதலாக நடந்ததில்லை! அப்படிப் பாடுபட்டு உழைத்தவனுக்குப் போன இடத்தில் என்ன ஆபத்தோ என்னமோ என்று சற்று யோசித்துப் பார்க்கக் கூடாதா! அதற்குப் பதில் அந்த நிலப் பிரபுவுக்குக் கிழவன் நடேசன் மீது கோபம் கோபமாக வந்தது. பயிர்களெல் லாம் கவனிப்பாரின்றிப் பல இடங்களில் பாழாகிக் கிடந்தன. அதைப் பார்க்கும்போது அவர் கோபம் இன்னும் அதிகமாயிற்று. பாவம், அவைகளும் நடேசன் பிரிவால் வாடியது போலும்!

ஒருவாரம் இரண்டு வாரம் ஆயிற்று. இரண்டு வாரம் மூன்று வாரமாகி மாதம் ஒன்றாகி விட் டது. மாடுகள் இளைக்கத் தொடங்கிவிட் டன. அவர் வீட்டுக் கறுப்புப் பசுவிடம் பால் கறக்க முடியவில்லை. அந்தப் பசு நடேசனைக் கண்டால் நாய் போல நிற்கும். இப்போது அதனிடம் யாருமே போக முடியவில்லை. குழந்தை செல்வராஜனோ, "நடேசன் எப் பொழுது அப்பா வருவான்!" என்று மீண் டும் கேட்கத் தொடங்கிவிட்டான். அடிக் கடி நடேசனின் ஓலைக் குடிசைக்குப் போய், "நடேசா! நடேசா!" என்று கூப்பிட்டு விட்டுத் திரும்புகிறான். குழந்தையின் ஏக்கத்தைப் பார்க் கச் சகிக்க முடியவில்லை. அவன் இளம் உள்ளத்தில் இருக்கும் அன்பை உணராமல் குழந்தையைச் சற்றுக் கோபமாகக் கடிந்து கொள்ள ஆரம்பித்தார் பண்ணையார்

நடேசனை இனி எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று அவனுக்குப் பதில் வேறு ஆளை நியமித் தார். புது ஆள் வந்தான். காரியங்களைச் செய் தான். இருந்தாலும் காலமெல்லாம் உண்மை யோடு உழைத்த நடேசனைப்போல அவனால் உழைக்க முடியுமா! அவனால் எல்லா வேலைகளை யும் பார்க்க முடியவில்லை. வேறொரு பண்ணை யாளை வைத்தார். அப்போதும் ஆள் போதவில்லை. மறுபடியும் இன்னொருவன் தேவையாயிருந்தது. நடேசன் ஒருவனே செய்த வேலையை இப்போது மூன்று பேர் சேர்ந்து செய்தும் பண்ணையாருக்குத் திருப்தியில்லை. இருந்தாலும் நடேசனைக் கோபித் துக் கொண்டதுபோல் அவர்களை எல்லாம் கோபித் துக்கொள்ள முடியவில்லை. அந்த ஆட்களிடம் கொஞ்சம் மரியாதையாகவே நடந்து வந்தார் பண்ணையார். இந்த மரியாதையில் நூற்றில் ஒரு பங்கு நடேசனிடம்காண்பித்துஇன்னும்கொஞ்சம் கூலியையும் அதிகமாகக் கொடுத்திருந்தால் அவன் எவ்வளவு உற்சாகமாக, குதூகலமாக வேலை செய்திருப்பான் தெரியுமா! அந்த ஏழையின் வயிறும் கொஞ்சம் நிறைந்திருக்கும். அவன் வாழ்க்கையிலும் சிறிது பசுமை ஏற்பட்டிருக்கும்.

பணக்காரர்களின் மனசையே தெரிந்து புரிந்து கொள்ள முடிவதில்லை. ஒன்றுமில்லாத ஒரு ஆளுக்கு நிறைய பணம் கொடுத்து உட்கார்த்தி வைக்கிறார்கள். நாளெல்லாம் உழைப்பவனுக்குப் போதிய ஊதியம் கொடுப்பதில்லை. அதுதான் இல்லாவிட்டாலும் அவனிடம் அன்புடனாவது நடந்து கொள்ளக் கூடாதா! நடேசனுக்குப் பத்து ரூபாய் கொடுக்க யோசனை செய்த பண்ணையார், இன்று அவனுக்குப் பதில் அவனை விடச் சற்று அதிகக் கூலிக்கு மூன்று ஆட்களை சந்தோஷமாகவே நியமித்திருக்கிறார்.

பண்ணையார் கடைசியில் ஒரு முடி வுக்கு வந்தார். ஒரு ஆளை நடுவக் கரைக்கு அனுப்பி நடேசன் என்ன ஆனான் என்று பார்த்து வரும்படி செய்தார். அதுவும் சுய காரியமாகத் தான். சிறுவன் செல்வராஜன் நடே சனைக் காணாமல் ஏக்கம் பிடித்து இளைக்க ஆரம்பித்து விட்டான். அவன் உடம்புதேற வதற்காகத் தான் நடே சனை அழை த்து வர ஆட் களை அனுப்பி

வைத்தார். நடுவக்கரைக்குப் போன ஆள் திரும்பி வந்தான். நடேசனை அங்கு காணவில்லை என்று சொன்னான். அதோடு அங்கு நடந்த விபரீதச் சம்பவங்களை விவரமாகச் சொன்னான்.

** ** **

வசந்தத்தின் குளிர்ந்த காற்று விசிறி விசிறி அடித்துக் கொண்டிருந்தது. நடுவக்கரைக் கிராமத்துத் தெருக்களின் தூசு துப்பட்டைகளை எல்லாம் காற்று அடித்துக் கொண்டு

போய் விட்டது. காவேரியும் மாணிக்கமும் காளியம்மன் கோயிலை விட்டு வெளியில் வந்தனர்.

அந்தக் கோயில் ஏழைகளின் கோயில். அதில் வர்ணச் சித்திரங்கள் கிடையாது. சுற்றிச் சுற்றி வரும் பெரிய பிரகாரங்கள் கிடையாது. அதன் கோபுரம் கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டியதல்ல. சாதாரண ஓலைக் கொட்டகைதான். ஆனால் அதற்குள் எப்பொழுதும் அணையாத விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது. மலர்களின் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. உண்மையாகவே தெய்வபக்தியுள்ள சிலர் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். இந்தத் தெய்வம்தான் மாணிக்கம் வீட்டுக் குடும்பத்தின் குல தெய்வம். அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்தி விட்டுத்தான் காவேரியும் மாணிக்கமும் வெளியில் வந்தனர்.

காவேரி கஷ்டமில்லாமல் பெற்றுப் பிழைக்க வேணும் என்று காளியம்மனை வேண்டிக் கொண்டான் மாணிக்கம். காவேரியோ தங்கள் குலம் தழைக்க ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். பெண் அல்லவா! தன்னைவிடத் தன் வம்சம் தழைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். பெண்களே எப்பொழுதும் எதிர்காலத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பவர்கள். அவர்களுடைய பண்பாடுதான் ஒரு தேசத்தின் பண்பாடு; நாகரிகம். அவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு முற்போக்கு அடைகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு சமூகம் முற்போக்கு அடையும்; நாடு முன்னேற்றம் அடையும்.

கோயிலை விட்டு வெளியில் வந்த காவேரியும் மாணிக்கமும் ஒரு கணம் தயங்கி நின்றார்கள். காவேரி மெதுவாகப் பெருமூச்சுவிட்டாள். தன் கையை நீட்டி மாணிக்கத்தின் கையைப் பற்றினாள். அவனும் அவளை ஆதரவோடு பிடித்துக்கொண்டே வீடு நோக்கி நடந்தான்.

ஆமாம். அவர்கள் சாவதானமாக, மெள்ள மெள்ள நடந்து வந்தார்கள். அவர்களுக்கு என்ன

புத்தம் புதியதும் சிறந்ததுமான இந்த மூன்று சக்கரம் சைகிள்களுக்கு (Try-Cycle) ஆர்டர் செய்யுங்கள். இதன் விலை ரூ. 25/- லிருந்து ரூ. 15/-க்கு குறைக்கப் பட்டிருக்கிறது. ரயில்வே சார்ஜ் சுமார் ரூ. 1/8/- உங்கள் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரைத் தெரிவித்து இன்றே ஆர்டரை அனுப்புங்கள்.

●

JUPITER TRADING CO.,

P. BAG 16602 - CALCUTTA - 4

அவசரம்! எங்கே போகப் போகிறீர்கள்! தாங்கள் பெற்றோர்களாகப் போகும் பெருமையை எண்ணிப் பூரித்துப் போனார்கள். தங்கள் எதிர் காலத்தை நினைத்து இன்பக் கனவு கண்டு கொண்டே நடந்தார்கள். ஆகாயம் நிர்மலமாய் இருந்தது. காவேரியின் காலில் இருந்த மெட்டிகள் அவள் நடக்கும்போது குலுங்குவதால் 'கலக்' 'கலக்' என்று சத்தமிட்டன. அந்தச் சத்தம் இன்ப கீதமாக இருந்தது அவர்களுக்கு.

தெரு மூலை திரும்பியதும் காவேரி சற்று வேகமாக நடந்தாள். தன் குடிசை வீட்டு வாசலில் யாரோ நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். "நம்ம வீட்டு வாசலில் நிற்பது யாருங்க!" என்று தன் கணவனைக் கேட்டாள்.

"யாரென்று தெரியவில்லையே!" என்றான் மாணிக்கம்.

இப்பொழுது இன்னும் கொஞ்சம் நெருங்கி விட்டார்கள். வீட்டு வாசலில் நிற்பது யார் என்று தெரிந்து விட்டது. "அப்பா வந்திருக்காங்க. ஆமாம், அப்பாவேதான்!" என்று சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தாள் காவேரி.

"ஆமாம், மாமாதான்!" என்றான் மாணிக்கம்.

"அப்பா!" என்று கூவிய வண்ணம் கிழவன் நடேசனைத் தாவி அணைத்துக்கொண்டாள் காவேரி.

"வாங்க மாமா!" என்று முகமன் கூறி வரவேற்றான் மாணிக்கம்.

கிழவன் நடேசன் தன் மகளை அன்போடு அணைத்து அவள் முதுகை வருடிக் கொண்டிருந்தான். "கடவுள் உங்கள் இருவருக்கும் எல்லா சௌபாக்கியங்களையும் அளிப்பார்" என்று அன்பு தவழும் ஆசைக் குரலில் சொன்னான்.

பிறகு கிழவன் தான் கொண்டு வந்திருந்த பம்ளிமாஸ் பழங்களைக் காவேரிக்குக் கொடுத்தான். அதை அவள் ஆவலோடு வாங்கிக் கொண்டாள். எல்லாரும் அந்தச் சிறிய ஓலை வேய்ந்த கூரை வீட்டுக்குள் சென்றனர். காவேரி சின்னக் குழந்தைபோல நடேசனை வளைய வளைய வந்து கொண்டிருந்தாள். அவன் கொடுத்த பம்ளிமாஸ் பழத்தை அப்பொழுதே உரித்துச் சாப்பிட்டாள். தன் கணவனுக்குக் கொடுத்தாள். "இந்த பம்ளிமாஸ் பழத்தின் ருசியே அலாதிதான்" என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தாள்.

காவேரியின் மகிழ்ச்சியைப் பார்த்து மாணிக்கம் மகிழ்ந்தான். தன் மகளும் மருமகனும் படும் சந்தோஷத்தைப் பார்த்துக் கிழவன் நடேசன் குதூகலமடைந்தான். காவேரி தன் தந்தையைக் கட்டபொம்மன் கதையைப் பாடச் சொல்லிக் கேட்டாள். தேசிங்கு ராஜன் சரித்திரத்தைப் படிக்கச் சொல்லி மகிழ்ந்தாள்.

இரண்டு நாட்கள் சென்றன.

மாணிக்கம் தன் வீட்டுக் குடிசைக்கு வெளியில் குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டுக் கொண்டிருந்தான். கிழவன் நடேசன் கவலையோடு உட்கார்ந்திருந்தான். "பயப்படாதே மாணிக்கம்! காவேரிக்குச் சுகப் பிரசவம்தான் ஏற்படும். காளியம்மன் நம்மைக் கைவிட மாட்டாள்" என்றான் கிழவன் நடேசன்.

குடிசைக்குள்ளிருந்து பயங்கர அலறல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அலறல் சத்தத்தின் போதும் மாணிக்கம் துடி துடித்து விடுவான். நடேசனோ "கடவுளே! காளியம்மா!" என்று முணு முணுப்பான். சில மணி நேரம், இல்லை, ஒரு முழு நாள் இப்படியாகக் கழிந்தது.

ஏழைகள் தானே! அவர்கள் கடவுளை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. பணம் படைத்திருந்தால் டாக்டர்களை வரவழைத்துப் பார்த்திருக்கலாம். அல்லது பக்கத்தில் உள்ள பட்டணத்து ஆஸ்பத்திரிக்காவது எடுத்துக் கொண்டு போயிருக்கலாம். காவேரி பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருக்கிறாள். கிராமத்து மருத்துவச்சி குழந்தை வரும் என்று உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் என்ன செய்வாள். அவளுக்குத் தெரிந்ததும் அவ்வளவுதான். கிராமங்களில் எல்லாம் பிரசவ விடுதிகள் ஏற்பட்டுக் கிராம மக்கள் பயமில்லாமல் பெற்றுப் பிழைக்கும் நாள் என்னாளோ! அந்த நாள் சமீபத்தில் இருக்குமா!

கடைசியில் அந்தக் குடிசை வீட்டுக்குள்ளிருந்து "குவா!" "குவா!" என்ற அமுத கீதம் கேட்டது. மாணிக்கத்தின் முகத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. கிழவன் நடேசன் ஒருதரம் மீசையை ஒதுக்கிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். "ஆகா!" என்றான். "குவா!" "குவா!" என்ற குழந்தையின் மோகன கீதம் இப்பொழுது இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கேட்டது.

மருத்துவச்சி வெளியில் வந்தாள். மீசை முறுக்குவது போலச் சைகை செய்த வண்ணம் ஆண் குழந்தை என்றாள்.

மாணிக்கமும் கிழவனும் மகிழ்ந்து போனார்கள்.

கிராமத்தில் ஏதோ மாடு கன்று போடுவது போல; ஆடு குட்டி போடுவது போல; காவேரி ஒரு ஆண் மகவை ஈன்றாள். அவ்வளவுதான். அவள் பிரசவத்துக்காக ஒரு தனி ஏற்பாடு ஒன்றும் கிடையாது. வைத்திய வசதிகள் கிடையாது. வகையான உதவிகள் கிடையாது. எப்படியோ அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து விட்டது.

நீங்கள் ஒரு பெரிய
கப்பலைக்கொண்டு சிறிய நதியைக் கடப்பீர்களா?

சுத்த மடத்தனம் அல்லவா? ஆயினும் பாட்டரி ரேடியோ உபயோகிக்கும் அநேகர் குறைந்த சக்தி செலவில் திருப்திகரமாக ரேடியோ கேட்க முடிந்தாலும்கூட, மிகவும் சக்தி வாய்ந்ததும் அதிக செலவு அளிக்கக் கூடியதுமான, ஸெட்டுகளை உபயோகிக்கிறார்கள்.

அதிகப்படியான வால்யூம் அளிக்கக்கூடிய ஓர் ரேடியோ ஸெட் பாட்டரியின் சக்தியை வெகு சீக்கிரத்திலேயே வீணாக வற்றச் செய்கிறது.

குறைந்த சக்தியால் வேலை செய்யும் ஓர் ரேடியோ பாட்டரி சக்தியை சிக்கனமாக செலவிட்டு உங்களுடைய பணத்தையும் எப்பொழுதும் மிச்சப்படுத்துகிறது. ஆகையால் நீங்கள் ஒரு பாட்டரி ரேடியோ வாங்கும்பொழுது குறைந்த சக்தியை உபயோகிக்கும் ஸெட்டையே பார்த்து வாங்குங்கள். அதுவே உங்களுக்குப் போதிய, தெளிவான வால்யூமை அளித்து, பெருங்கூச்சலை தவிர்க்கிறது.

நீங்கள் எப்பொழுதும்

EVEREADY

TRADE-MARK

ரேடியோ பாட்டரிகளையே உபயோகியுங்கள்

அவைகளே உலகத்தில் மிகச்சிறந்த ரேடியோ பாட்டரிகள்

ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு

Use
NOPAIN



for
IMMEDIATE
RELIEF
FROM ALL
Pains

A Calchemico PRODUCT

மதராஸ் ஆபீஸ்:
5/149, பிராட்வே
ஜி. டி., மதராஸ்

தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க் லிட்.,

செலுத்தப்பட்ட
மூலதனம் 2-கோடி.

ரிஸர்வ் நிதி
67 லக்ஷம்.

•

இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலாயா முதலிய நாடுகளில் எல்லா முக்கிய நகரங்களிலும், பட்டணங்களிலும் கிளைகளும், உலகெங்கிலும் ஏஜண்டுகளும் உள்ள இந்த பாங்கி இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உங்களுக்கு எல்லாவித பாங்கி வசதிகளும் அளிக்கவல்லது.

•

தலைமை ஆபீஸ்: கல்கத்தா.

INVEST IN OUR
3-YEAR
Cash Certificates

பிரசவத்தில் ஏதோ எக்கச் சக்கம் ஏற்பட்டு விட்டது. அதனால் காவேரிக்கு ஜுரம் வந்து ஜன்னி கண்டு விட்டது. கவனிப்பதற்கு வேண்டிய பண வசதி தான் இல்லையே. "இந்தப் பாழாய்ப் போன நாட்டில் ஏழைகளுக்கு என்ன வசதி கிடைக்கப் போகிறது! எந்த டாக்டர் ஆபத்துக்குப் பணம் இல்லாமல் வந்து உதவப் போகிறார்" என்று அங்கலாய்த்தான் மாணிக்கம். கிழவன் நடேசன் காளியம்மாளை வேண்டிக் கொண்டு ஒரு கால் ரூபாயை மஞ்சள் துணியில் முடிந்து காவேரியின் கையில் கட்டி வைத்தான். "அம்மா தாயே! என் மகளைக் காப்பாற்று" என்று மனமுருக அம்மனை வேண்டிக் கொண்டான்.

அம்மன் என்ன செய்யும்! ஜுரத்துக்கு வந்து மருந்தா கொடுக்கும்! ஏதோ நாம் மருந்து கொடுத்தால் அதற்குத் தெய்வம் பக்கத் துணை இருந்து பராமரிக்கும். ஒன்றுமே செய்யாமல் தெய்வமே என்றால் போதுமா!

காவேரியின் குலம் தழைக்கக் காளியம்மன் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்து விட்டாள். தான் பெற்றக் குழந்தையைக் கண் திறந்து பார்க்காமலே கண்ணை மூடிவிட்டாள். காவேரி இவ்வுலகை விட்டுச் சென்று விட்டாள்.

மாணிக்கம் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அழுதான். "காவேரி! என்னை மட்டும் விட்டு விட்டுப் போய்விட்டாயே! இதோ உன்னோடு நானும் வருகிறேன்!" என்று கூப்பாடு போட்டான். தலையைத் தரையில் மோதிக் கொண்டு குய்யோ முறையோ என்று கதறினான். கீழே விழுந்து அழுது புரண்டான்.

நடேசன் வாய்க்குள்ளேயே அழுதான். அவனுடைய ஒரே மகள் அவனை விட்டுப் போய் விட்டாள். "ஐயோ மகளே! என்னை மோசம் செய்து விட்டாயே!" என்று வாய் விட்டுப் புலம்பினான். அந்தப் பச்சிளம் பாலகனைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு கலகலவென்று கண்ணீர் விட்டான்.

இதற்குள் காவேரி இறந்த செய்தி கிராமம் எங்கும் பரவி விட்டது. கிராமத்து ஜனங்கள் வந்தனர். காவேரியின் ஈமச் சடங்கைச் செய்து முடித்தனர். மாணிக்கத்தையும் கிழவனையும் தேற்றினார்கள். அவர்களை யாரால் தேற்ற முடியும்! எந்த மொழியால் அவர்களுக்கு ஆறுதல் கூறமுடியும்! முடியாது! முடியவே முடியாது!

மறு நாள்.

காவேரி இல்லாமல் காலியாகக் கிடந்த குடிசையைப் பார்த்தான் மாணிக்கம். அவள் அணிந்திருந்த ஆடைகள் அலங்கோலமாகக் கிடந்ததைப் பார்த்தான். அவள் பெற்ற அந்தச் சிசுவைப் பார்த்தான். மீண்டும் கதற ஆரம்பித்து விட்டான். அந்தச் சின்னஞ்சிறு சிசுவை எடுத்துக் கொண்டு "தோரா!" என்று அழுதான். அவனுக்குத் தேறுதல் சொல்லும் அளவுக்குக் கிழவன் நடேசனுக்குத் தெம்பு இல்லை. அவனும் கண் கலங்கிய வண்ணம் கற்சிலை போல உட்கார்ந்து விட்டான். அவன் வேறு என்னதான் செய்வான்!

காவேரியின் பிரிவை மாணிக்கத்தால் தாங்க முடியவில்லை. அவள் இன்றி அவனுக்கு உயிர் வாழ இஷ்டமில்லை. அப்படிச் சிலர் தன் மீது அன்பு கொண்டவர்கள்மீது பிரியம் கொண்டு அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள்.

மாணிக்கம் என்ன நினைத்தானோ! என்ன செய்து கொண்டானோ! ஆத்திரத்தில், மனைவியைப் பிரிந்த ஏக்கத்தில் எதையாவது தின்று உயிரைப் போக்கிக்கொள்ள நினைத்தானோ! இல்லை அவளையே நினைத்து உயிரை விட்டு விடுவது என்று முடிவு செய்தானோ! ஒன்றும் புரியவில்லை.

காவேரி உயிர் எந்த இடத்தில் பிரிந்ததோ அதே இடத்தில் போய்க் காலை நீட்டிப் படுத்தான். சின்னக் குழந்தையைப் போல விம்மி விம்மி அழுதான். சட்டென்று எழுந்தான். அந்தப் பச்சிளம் பாலகனைப் பார்த்துப் பார்த்துப் பரிதாபமாகக் கதறினான், மீண்டும் காவேரி உயிர் விட்ட அதே இடத்தில் போய்ப் படுத்துக் கொண்டான்.

இப்படி மூன்று நாட்கள் அன்னம் தண்ணீர் இல்லாமல் படுத்துக் கிடந்தான். நான்காம் நாள் மாலை. அங்கு படுத்தபடியே இங்கு மங்கும் புரண்டான். இரண்டு மூன்று தரம் வாந்தி எடுத்தான்.

மாணிக்கத்தின் இந்த நிலையைக் கண்டு கிழவன் திடுக்கிட்டான். அவன் உடல் பயத்தால் நடுங்கியது. மாணிக்கத்தின் தோளைப் பிடித்துக் கொண்டு "என்ன மாணிக்கம் ஏன் இப்படி!" என்று கேட்டான். அவன் குரல் தழுதழுத்தது.



பிரபல திருமணம்

திருச்சி ஸ்ரீ எல். என். கோபாலசாமியின் குமாரி சௌபாக்யவதி சுகந்திக்கும் திருச்சி அட்வகேட் ஸ்ரீ நாராயணசாமி சர்மா அவர்களின் புதல்வர் ஸ்ரீ என். பாலசந்திரனுக்கும் சென்ற ஜூன் மாதம் 29-ந் தேதி திருச்சி தென்னூர் கோபாலபுரத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின்போது நண்பர்களும், உறவினர்களும் திரளாக வந்திருந்து தம்பதிகளை ஆசிர்வதித்தனர். மணமக்களுக்குப் பல பிரமுகர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் வெகுமதிகளும் வாழ்த்துச் செய்திகளும் வந்தன. அன்றுமாலை வரவேற்பின்போது நடந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரிக்குத் திருச்சி நகரப் பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

"இவர் ஒரு பெரிய தாவர சாஸ்திர நிபுணர். பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் இருக்கிறார்!"

"பார்த்தாலே தெரிகிறதே!"

"ஒன்றுமில்லை. என்னை விட்டு விடுங்கள்" என்றான் மாணிக்கம். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. மேல் மூச்சு வாங்கியது.

"மாணிக்கம் உடம்புக்கு என்ன!" என்று படபடப்போடு கேட்டான் நடேசன். அவன் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். நெருப்புச் சட்டி போல கொதித்தது. நடேசன் உண்மையிலேயே பயந்து விட்டான். அவனுக்கு என்ன செய்வது ஏது செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. திகைத்து விட்டான்.

"என் குழந்தை...! என் குழந்தை...!" என்று கத்தியபடி கையை நீட்டினான் மாணிக்கம்.

நடேசன் அந்த தூங்கு கான் சிசுவை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தான்.

மாணிக்கம் மிகுந்த சிரமத்துடன் ஆசையோடு குழந்தையை வாங்கிப் பார்த்தான். உடல் குலுங்கக் குலுங்க அழுதான். நடேசனும் அழுதான்!

"இந்தக் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குத்தான்" என்று சொல்லி மாணிக்கம் குழந்தையைக் கிழவனிடம் கொடுத்தான். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

மாணிக்கம் அப்படியே சோர்ந்து கிடந்தான்.

இந்தச் சமயத்தில் தெருவில் யாரோ ராகம் போட்டுப் பாடுவது கேட்டது. "காயமே இது பொய்யடா! காற்றடைத்த பையடா!" என்று நீட்டி இழுத்தான்.

மாணிக்கம் படுத்துக் கிடந்ததைப் பார்த்தால் அந்தப் பாட்டைக் கவனமாகக் கேட்பதுபோலிருந்தது. பாட்டைப் பாடியவன் யாரோ ஒரு பிச்சைக்காரன். வேலை கெட்ட வேலையில் இப்படி விபரீதமாகப் பாடுகிறானே என்று கிழவன் நடேசன் வருந்தினான்.

மாணிக்கம் "தண்ணீர்! தண்ணீர்!" என்று கையைக் காட்டினான்.

கிழவன் அவசரம் அவசரமாக ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

மாணிக்கம் ஒரு வாய் தண்ணீர் குடித்தான். அண்ணார்ந்து பார்த்தான். கூரையில் இருந்த ஓட்டை வழியாக மேலே வானத்திலே கணக்கற்ற நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தது தெரிந்தது. ஒரு நட்சத்திரம் அவனைப் பார்த்து கண்ணைச் சிமிட்டுவது போலிருந்தது. அது தானாக நகர்ந்து அவனை நெருங்கி வர ஆரம்பித்தது. திடீரென்று அந்த நட்சத்திரம் காவேரியாக மாறி விட்டது; இல்லை - காவேரிதான் நட்சத்திரமாகி விட்டாளோ! அவனை அவள் நெருங்கி நெருங்கி வந்தாள். அவனைக் கை நீட்டி அழைத்தாள். மாணிக்கமும் காவேரியின் கையைப் பற்றிக் கொண்டு வான மண்டலத்தில் அவளைப் பின் பற்றிச் செல்ல முயன்றான். இந்த இன்பமான காட்சியி லிருந்து விலக விரும்ப வில்லையே என்னமோ! அவன் தன் கண்களை மூடிக் கொண்டான். அவன் முகத்தில் அமைதி நிலவி இருந்தது.

அடுத்த கணம் அவன் தலை தரையில் உருண்டு விட்டது. கையில் இருந்த தண்ணீர் டம்ளர் மேஜை விழுந்து விட்டது. எரிந்துகொண் டிருந்த அகல் விளக்கு நின்று விட்டது. மாணிக்கம் காவேரியை தன் அருமை மனைவியைத்தேடிப் போய்விட்டான்.

நடேசன் அந்த அனாதைக் குழந்தையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு கத்தினான், கதறினான். அழுதான், அலறினான். அக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு ஒரு நாள் முழுதும் கற்சிலை போல் உட்கார்ந் திருந்தான். என்ன நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தானோ!

அடாடா! ஒரு குடும்பம் நேற்று சந்தோஷமாக இருந்த குடும்பம். இன்று இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. இதுதான் வாழ்க்கை. இந்த வாழ்க்கையில்தான் எத்தனை பொறாமை, பூசல்! வஞ்சகம் சூழ்ச்சி, பொய், திருட்டு. ஐயோ! இன்னும் எத்தனை எத்தனையோ கொடுமைகள்!

மறுநாள் கிழவனையும் குழந்தையையும் காணவில்லை. எங்கு போனான் என்று அந்தக் கிராமத்தில் உள்ள யாருக்குமே தெரியவில்லை!

இதைக் கேட்ட சிறுவன் செல்வராஜன் "அப்படியானால் இனிமேல் நடேசன் வரவே மாட்டானா!" என்று கேட்டான். வாய்விட்டுக் கத்தினான். நடேசனின் ஓலைக் குடிசையை நோக்கி ஓட்டமாக ஓடினான்.

செல்வராஜனைச் சமாதானப் படுத்துவதற்குள் பண்ணையாருக்கும் அவர் மனைவிக்கும் போதும் போதும் என்றாகி விட்டது.

* * *

வருஷங்கள் பல உருண்டு ஓடிவிட்டன. எல்லோரும் நடேசனை மறந்துவிட்டனர். வாழ்க்கை எல்லாம் உழைத்து உலக சரித்திரமே கண்டறியாதபடி, கத்தியின்றி ரத்தமின்றி இந்தப் பெரிய பாரத நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காந்தி மகானையே மறந்து விட்டார்களே! சாதாரணப் பண்ணையாளை மறப்பதில் என்ன ஆச்சரியம்.

ஆனால் செல்வராஜன் நடேசனைப் பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பான். அவனும் வர வர அவனைப் பற்றிச் சொல்லுவதைக் குறைத்துக் கொண்டான். இப்பொழுது அவன் பெரிய பையன், விவரம் தெரிந்தவன். தன்னுடைய விளையாட்டு, விஷமம், குறும்புத்தனம் எல்லாவற்றையும் விட்டு விட்டான். பள்ளிக்கூடப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்து விட்டான். நடேசன் சொல்லி வந்த கட்டபொம்மன் சரித்திரத்தையும், வீரன் தேசிங்குராஜனின் சரித்திரத்தையும் படித்து ரசிக்க ஆரம்பித்து விட்டான். அப்பொழுதெல்லாம் அவனுக்கு நடேசனின் நினைவுவரும். "அவன் இருந்தால் அவனுக்கு இப்பொழுது இந்தக் கதை



பாதி விலை

ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஏராளமாகத் தருவிக்கப்பட்ட கடிகாரங்களில் பாதிக்குமேல் விற்பனையாகி விட்டன. இப் பாதி விலை சலுகை இன்னும் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு 15, 17 ஜுவல் கடிகாரமும் 3 வருஷமும் மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாதம் கொண்டவை. ஒவ்வொரு கடிகாரத்துடனும், ஒரு காரண்டி சர்டிபிகேட்டும், ஒரு நேர்த்தியான ஸ்ட்ராப், ஒரு வெல்வெட் பெட்டியும் இனமாகக் கொடுக்கப்படும். பாக்கிங், விற்பனை வரி, தபாற் செலவு இலவசம். ஆர்டர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

இலவசம்

புது வருஷ காலெண்டரும், மடக்கக் கூடிய சீப்பும் இணைக்கப்பட்ட தையல் இல்லாத அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒன்றும் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அனுப்பப்படும்

குறைந்த விலைகளின் விவரம் கீழ்க்காணுமாறு:

வாடர் ப்ரூப், ரேடியம் சைஸ் 10½

நெ. ரூ.

1 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 49/-
2 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 51/-
15 க்ரோம் ஸ்டீல் பேக் 17 ஜுவல்ஸ் 59/-
16 ரோ.கோ. ஸ்டீல்பேக் 17 ஜுவல்ஸ் 61/-

சிறிய ரவுண்டு சைஸ் 9¾

நெ. ரூ.

21 பிரைட் க்ரோம் கேஸ் 4 ஜுவல்ஸ் 22/-
22 பிரைட் க்ரோம் கேஸ் 7 ஜுவல்ஸ் 29/-
3 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
4 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-

சென்டர் செகண்ட் சைஸ் 9¾

23 பிரைட் க்ரோம் கேஸ் 7 ஜுவல்ஸ் 30/-
5 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
6 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-

வளைவு சைஸ் 7¾

24 ரோ.கோ. ஸ்டீல்பேக் 5 ஜுவல்ஸ் 30/-
7 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
8 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-

டன்னோ சைஸ் 6¾

9 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
10 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-

லேடீஸ் சைஸ் 5¼

11 ரோ.கோ. ஸ்டீல்பேக், ஸில்க் ஸ்ட்ராப், பென்ஸி டயல் 15 ஜுவல்ஸ் 50/-



லேடீஸ் சைஸ் 5¼

25 ரோல்டு கோல்டு ஸ்டீல்பேக் ஸில்க் கார்டுடன் 15 ஜுவல்ஸ் 50/-

ரவுண்டு சைஸ் 8¾

26 பிரைட் க்ரோம் கேஸ், லேடி பிரின்ட் ரேடியம் டயல் 22/-

PEARL WATCH CO., FORJETT STREET, BOMBAY-26

"என் நம்பி, இந்தக் குளத்திலே ஒரு மணி நேரமாகத் தூண்டில் போட்டுக் கொண்டிருக்கிறாயே! உனக்கு ஒரு மீன் கூடக் கிடைக்க வில்லை போலிருக்கிறதே!"

"ஆமாங்க. இந்தக் குளத்திலே மீனே கிடையாது என்கிற விஷயம் எனக்குத் தெரியும். என் பெண்சாதி மாட்டைக் குளிப்பாட்டச் சொன்னாள். அதற்கு எனக்கு ஒழியாது என்று அவளுக்குக் காட்ட வேண்டும். அதற்காகத்தான் உட்கார்ந்திருக்கிறேன்!"

களைப் படித்துக் காண்பிப்பேன். நடேசன் சந்தோஷப்படுவான்" என்று நினைப்பான்.

ஃ ஃ ஃ

வஸந்த காலம் வந்தது. ஊரில் உள்ள புஷ்பச் செடிகள் எல்லாம் ஒன்று கூடிப் பேசிக்கொண்டு பூத்துக் குலுங்கித் தள்ளின. தென்றல் காற்று ஜிலு ஜிலு என்று வீசிக்கொண்டிருந்தது. பக்கத்தில் அடர்ந்து செழித்திருந்த மாந்தோப்புக்கு மத்தியில் தென்றல் காற்று புகுந்து வந்ததால் 'உஸ்'ஸென்று ஒரு ஓசை வந்தது. அது யாரோ நமக்கு வேண்டியவர்கள் வருவதை முன் கூட்டியே தெரிவிப்பது போலிருந்தது.

செல்வ ராஜன் அவன் தோட்டத்திலிருந்த மேடை மீது வானத்தைப் பார்த்த வண்ணம் இயற்கைக் காட்சியை அனுபவித்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான். தூரத்தில் கிழவன் நடேசனின் ஓலைக் குடிசை இருந்த இடம் காலியாகக் கிடந்தது. அந்தக் காலி இடத்தைப் பார்த்ததும் அவன் மனசை என்னவோ செய்தது. அவன் மெதுவாக எழுந்திருந்து அந்த இடத்துக்குச் செல்ல முயன்றான்.

அவன் மனத்தில் கிழவன் நடேசன் பாடும் கட்டபொம்மனின் வீராவேசம் நினைவுக்கு வந்தது.

"வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன்
காணிக்குக் கிஸ்தி ஏது?"

என்ற வரிகளை என்ன அற்புதமாகப் பாடுவான் என்று நினைத்தான். ஏதோ தன்னைத் தாக்கியது போல் அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

அதே பாட்டை யாரோ பாடுவது காற்றிலே மிதந்து வந்தது. அந்தப் பாட்டுக்கு மாந்தோப்பில் இருந்து வந்த 'உஸ்' ஸென்ற தென்றல் காற்றின் இனிய சத்தம் சுருதி கூட்டியது போலிருந்தது. பாட்டு வர வர நெருங்கிக் கேட்டது. அவனுக்கு எங்கோ யாரோ பாடிக் கேட்ட குரல் நினைவுக்கு வந்தது. யாருடைய குரல் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. பாட்டு இன்னும் சமீபத்தில் கேட்டது. ஆம்; அதே குரல்! அவனுக்குப் பழக்கமான குரல்தான்!

செல்வராஜன் வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடினான். கிழவன் நடேசன்! பண்ணையாள் நடேசன்! நடேசனே தான்! ஆடி ஆடி நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவனை ஒரு தரம் பார்த்தான். அடுத்த கணம் "நடேசா! என்னை மறந்து விட்டாயா!" என்று கேட்டு அணைத்துக் கொண்டான். மாசற்ற அன்பல்லவா! ஏற்றத் தாழ்வைப் பார்க்கவில்லை.

"ராஜா! என் ராஜா! உன்னை நான் மறக்கவில்லை. உன்னை மறக்கவே மாட்டேன்" என்று தன்னைக் கட்டிப் பிடித்திருந்த செல்வராஜனை அணைத்துப் பிடித்துக் கொண்டான் கிழவன்.

கிழவனின் அன்புக் குரலிலும், அவனுடைய அரவணைப்பிலும் அப்படியே மயங்கி நின்றான் செல்வராஜன். அவன் வாயிலிருந்து வார்த்தைகளே வரவில்லை. கிழவனை ஆவலோடு பார்த்தான்.

கிழவன் நடேசன் முன்போலில்லை. இன்னும் கிழவனாகி விட்டான். முதுகு சற்று வளைந்திருந்தது. கண்கள் எங்கோ குழிக்குள் இருப்பது போல் கிடந்தன. முகம் மேலும் கருகிக் கருத்துக் கிடந்தது. இருந்தாலும் அதில் அனுபவ அறிவு மிளிர்ந்து கொண்டிருந்தது. அகலத் திறந்த கண்களோடு அவனும் செல்வராஜனைப் பார்த்தான். அவனுக்குப் பின் ஒரு சிறுவன் நின்று கொண்டு இந்தக் காட்சியை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

செல்வராஜன் கிழவனையும் அந்தச் சிறுவனையும் மாறி மாறிப் பார்த்தான். "இது யாரு?" என்று அந்தச் சிறுவனைக் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

கிழவன் நடேசனின் முகத்தில் ஒரு பெரிய வேதனைக் குமுறுவது அவன் சுருங்கிய முகத்தில் நன்றாகத் தெரிந்தது. அவன் கண்களில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. அவன் தளர்ந்த உடல் வெட வெடவென்று ஆட ஆரம்பித்து விட்டது. கிழவன் சட்டென்று கீழே உட்கார்ந்தான். முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதான். சிறிது நேரம் கழித்து அருகில் நின்று கொண்டிருந்த சிறுவனை ஆசையோடு பற்றி அணைத்துக் கொண்டான். பெருகி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "இவன் என் மகள் காவேரியின் மகன். என் அருமைப் பேரன். தாய் தந்தையற்ற அநாதை. இவன் பெயர் வேலன்" என்றான். அவன் குரல் தழதழத்தது. நெஞ்சு ஒரு முறை விம்மித் தணிந்தது.

இதைக் கேட்டதும் செல்வராஜன் மனத்தை என்னவோ செய்ய ஆரம்பித்து விட்டது. ஏதோ இனந்தெரியாத சோகம் அவனை வந்து கவ்விக் கொண்டது. அவனும் பொல பொல வென்று கண்ணீர் விட ஆரம்பித்து விட்டான்.

தென்றல் காற்று சற்று வேகமாக அடித்தது. பக்கத்திலிருந்த மாந்தோப்புக்குள் அந்தக் காற்று நுழைந்ததால் மாமரத்தின் கிளைகள் ஒன்றோடு ஒன்று மோதிச் சலசலத்தன. அது கிழவனின் துயரத்தைக் கண்டு தாங்க முடியாமல் சடபட வென்று துடிப்பது போல இருந்தது. (தொடரும்)

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

நீங்கள் எங்கிருந்தாலும்...

ஹிமாலயா புக்கே ஸ்னோ

உபயோகியுங்கள்.



ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின் சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கே ஸ்னோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான **இராஸ்மிக்** தயாரிப்பு

HBS. 6A–X30 TM

இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGD. No. M 4392

Registered as a newspaper in Ceylon

எப்பொழுதும். எங்கும்



கைகளில் அழுக்கிலிருக்கும் கிருமிகள் பற்றிக்கொள்ளலாம்

அவைகளை உங்கள் உடலிலும் பரவச்செய்யலாம்

இந்த ஆபத்தை தவிர்க்க—

கைகளையும் உடலையும் தவறாமல்

லைப்பாய் சோப்பினால்

கழுவுங்கள்.

அது அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களை காப்பாற்றுகிறது.



L. 225-30 TM